राक्षसास्तु प्लवङ्गानां शुश्रुवुश्चापि गर्जितम्। नर्दतामिव दृप्तानां मेघानामम्बरे स्वनम् ॥

राक्षसाः तु	ராக்ஷஸர்களும்
दृप्तानां	செருக்குற்று
अम्बरे	ஆகாசத்தில்
मेघानां	மேகங்களுடைய
स्वनं	இடியொலியை
इव	நிகர்த்து
नर्दतां	கர்ஜிக்கும்
प्लवङ्गानां	வானரர்களுடைய
गर्जितं च अपि	கர்ஜனையையும்
शुश्रुवुः	கேட்டார்கள்,

दृष्ट्वा दाशरथिर्लङ्कां चित्रध्वजपताकिनीम् । जगाम मनसा सीतां दूयमानेन चेतसा ॥

दाशरथिः	ஸ்ரீராமர்
चित्रध्वज-पताकिनीं	அழகிய த்வஜங்களோடும் கொடிகளோடும் விளங்கும்
लङ्कां	இலங்கை நகரை
दृष्ट्वा	பார்த்து
दूयमानेन	நொந்துகிடக்கின்ற
चेतसा	மனதால்
सीतां	ஸீதாதேவியைப்பற்றி
मनसा जगाम	பின்வருமாறு நினைத்தார்.

अत्र सा मृगशाबाक्षी रावणेनोपरुध्यते । अभिभूता ग्रहेणेव लोहिताङ्गेन रोहिणी ॥ ७ ॥

अत्र	"இவ்விடத்தில்
मृगशाबाक्षी	மான்குட்டியின் கண்களைப்போன்ற கண்களையுடைய
सा	அவள்
लोहिताङ्गेन	அங்காரக
ग्रहेण	கிரகத்தால்
अभिभूता	பீடிக்கப்பட்ட
रोहिणी इव	ரோகிணிபோல்
रावणेन	ராவணனால்
उपरुध्यते	சிறைப்படுத்தப்பட்டிருக்கின்றாள்."

दीर्घमुष्णं च निश्वस्य समुद्वीक्ष्य च लक्ष्मणम् । उवाच वचनं वीरस्तत्कालहितमात्मनः ॥

वीरः	சூராகும் அவர்
दीर्घं	தீர்க்கமாகவும்
उष्णं च	உஷ்ணமாகவும்
निश्वस्य च	பெரு மூச்சுவிட்டு
लक्ष्मणं	லக்ஷ்மணரை
समुद्वीक्ष्य	பார்த்து
आत्मनः	தனக்கு
तत्कालहितं	அக்காலத்திற்கேற்ற தாயிருக்கிற
वचनं	ஒரு சொல்லை
उवाच	பின்வருமாறு மொழிந்தார்:

आलिखन्तीमिवाकाशमुत्थितां पश्य लक्ष्मण । मनसेव कृतां लङ्कां नगाग्रे विश्वकर्मणा ॥

लक्ष्मण	"லக்ஷ்மண!
नगाग्रे	மலையின் உச்சியில்
आकाशं	ஆகாசத்தை
आलिखन्तीं	உராய்கிறது
इव	போலவே
उत्थितां	உயரக்கிளம்பியிருக்கிறதாய்
विश्वकर्मणा	விச்வகர்மாவினால்
मनसा इव	மனத்தாலேயே
कृतां	சிருஷ்டிக்கப்பட்டதாகிய
लङ्कां	இலங்கை நகரை
पश्य	பார்.

विमानैर्बहुभिर्लङ्का सङ्कीर्णा हि विराजते । विष्णोः पदमिवाकाशं छादितं पाण्डुरैर्घनैः ॥

लङ्का	"இலங்கை நகர்
बहुभिः	பல
विमानैः	மாளிகைகளால்
सङ्कीर्णा	நிறைந்ததாய்
पाण्डुरैः	வெண்
घनैः	மேகங்களால்
छादितं	மறைக்கப்பட்ட
विष्णोः	சூர்யபகவானது
पदं	இருப்பிடமாகிய
आकाशं	ஆகாசம்
इव हि	போலவே
विराजते	விளங்குகிறது.

पुष्पितैः शोभिता लङ्का वनैश्चैत्ररथोपमैः। नानापतङ्गसंघुष्टैः फलपुष्पोपगैः शुभैः ॥ ११ ॥

लङ्का — "இலங்கை நகர்
पुष्पितैः — நன்கு புஷ்பித்தவை களும்
नानापतङ्गसङ्घुष्टैः — பலவிதப் பறவைகளால் சப்திக்கப் பெற்றவைகளும்
शुभैः — சிறந்த
फलपुष्पोपगैः — கனிகளாலும் புஷ்பங்களாலும் நிறம்பிய வைகளும்
चैत्ररथोपमैः — குபேரனது சைத்ரரதமெனும் உத்தியானத்தை நிகர்த்தவைகளுமான
वनैः — சோலைகளால்
शोभिता — அழகுவாய்ந்ததாய் விளங்குகிறது.

पश्य मत्तविहङ्गानि प्रलीनभ्रमराणि च। कोकिलाकुलषण्डानि दोधवीति शिवोऽनिलः ॥

अनिलः — "காற்று
मत्तविहङ्गानि — கொழுத்த பறவைகளையும்
प्रलीनभ्रमराणि — அடங்கிக்கிடக்கும் வண்டுகளையும்
कोकिलाकुल-षण्डानि च — தாறுமாறாய் திரியும் கோகிலங்களின் சமூகங்களையும்
शिवः — சுகமாய்
दोधवीति — அசைக்கிறது
पश्य — பார்."

इति दाशरथी रामो लक्ष्मणं समभाषत ॥ १३ ॥

दाशरथिः — தசரதரின் புதல்வராகிய
रामः — ஸ்ரீராமர்
लक्ष्मणं — லக்ஷ்மணரைப் பார்த்து
इति — மேற்கண்டவாறு
समभाषत — பேசிமுடித்தார்.

बलं च तद्वै विभजञ्च्छास्त्रदृष्टेन कर्मणा। शशास कपिसेनाया बलमादाय वीर्यवान् ॥१४॥
अङ्गदः सह नीलेन तिष्ठेदुरसि दुर्जयः ॥ १५ ॥

शास्त्रदृष्टेन — சாஸ்திரத்திற்கண்ட
कर्मणा वै — விதிப்படி
तत् — அந்த
बलं च — சேனையை
विभजन् — அணிவகுக்கிறவராய்
शशास — பின்வருமாறு கட்டளையிட்டார்:
दुर्जयः — "எவரும் வெல்ல முடியாத
वीर्यवान् — வீர்யவானுகிய
अङ्गदः — அங்கதன்
नीलेन — நீலனோடு
सह — கூட
बलं — தனது சேனையை
आदाय — கூட வைத்துக் கொண்டு
कपिसेनायाः — வானரசேனையின்
उरसि — மார்பின்ஸ்தானத்தில்
तिष्ठेत् — இருக்கட்டும்."

तिष्ठेद्वानरवाहिन्या वानरौघसमावृतः। आश्रित्य दक्षिणं पार्श्वमृषभो वानरर्षभः ॥ १६ ॥

वानरर्षभः — "வானரோத்தமனுகிய
ऋषभः — ரிஷபன்
वानरौघ-समावृतः — வானரக்கூட்டத்தால் சூழப்பட்டவனாய்
वानरवाहिन्याः — வானரசைன்யத்தின்
दक्षिणं पार्श्वं — வலதுபக்கத்தை[னது
आश्रित्य — அடைந்து
तिष्ठेत् — அங்கே இருக்கட்டும்.

गन्धहस्तीव दुर्धर्षस्तरस्वी गन्धमादनः। तिष्ठेद्वानरवाहिन्याः सव्यं पार्श्वं समाश्रितः ॥
मूर्ध्नि स्थास्याम्यहं युक्तो लक्ष्मणेन समन्वितः ॥ १७ ॥

गन्धहस्ती	"மதயானை	समाश्रितः	அடைந்து
इव	போல	तिष्ठेत्	அங்கு இருக்கட்டும்.
दुर्धर्षः	அணுகமுடியாதவனும்	अहं	நான்
तरस्वी	மிக்கப் பலவானுமான	लक्ष्मणेन	லக்ஷ்மணனுடன்
गन्धमादनः	கந்தமாதனன்	समन्वितः	கூட
वानरवाहिन्याः	வானரச்சேனையின்	युक्तः	ஜாக்கிரதையுடனிருப்பவனுய்
सव्यं	இடது	मूर्ध्नि	தலைப்பக்கத்தில்
पार्श्वं	பக்கத்தை	स्थास्यामि	நிற்கின்றேன்.

जाम्बवांश्च सुषेणश्च वेगदर्शी च वानरः। ऋक्षमुख्या महात्मानः कुक्षिं रक्षन्तु ते त्रयः ॥

ते	"அந்த	सुषेणः च	சுஷேணனும்
महात्मानः	மகாத்மாக்களும்	वानरः	வானரனுகிய
ऋक्षमुख्याः	கரடிகளின் தலைவர்களும்	वेगदर्शी च	வேகதர்சியும்
त्रयः	மூவர்களுமான	कुक्षिं	வயிற்றுப்பாகத்தை
जाम्बवान् च	ஜாம்பவானும்	रक्षन्तु	பாதுகாத்துவரட்டும்.

जघनं कपिसेनायाः कपिराजोऽभिरक्षतु। पश्चार्धमिव लोकस्य प्रचेतास्तेजसा वृतः ॥१९॥

तेजसा	"தேஜஸுடன்	इव	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
वृतः	விளங்கும்	कपिराजः	வானரமன்னன்
प्रचेताः	வருணபகவான்	कपिसेनायाः	வானரச் சேனையின்
लोकस्य	உலகின்	जघनं	பின்பாகத்தை
पश्चार्धं	மேற்குப்பாகத்தை	अभिरक्षतु	ரக்ஷித்துவரட்டும்."

सुविभक्तमहाव्यूहा महावानररक्षिता। अनीकिनी सा विबभौ यथा द्यौः साभ्रसंप्लवा ॥

सा	அந்த	अनीकिनी	சேனை
सुविभक्त-महाव्यूहा	நன்கு பிரிக்கப்பட்ட அணிவகுப்பையுடையதும்	साभ्रसंप्लवा	மேகக்கூட்டங்களுடன்கூடின
महावानररक्षिता	சிறந்த வானரர்களால் ரக்ஷிக்கப்பட்டதுமான	द्यौः यथा	ஆகாசமென
		विबभौ	விளங்கிற்று.

प्रगृह्य गिरिशृङ्गाणि महतश्च महीरुहान्। आसेदुर्वानरा लङ्कां विमर्दयिषवो रणे ॥ २१ ॥

वानराः	வானரர்கள்	गिरिशृङ्गाणि	மலைச்சிகரங்களையும்
लङ्कां	இலங்கையை	महतः	பெரும்
रणे	போரில்	महीरुहान् च	மரங்களையும்
विमर्दयिषवः	அழித்துவிடஆவலு	प्रगृह्य	கையிலேந்திக்
	ற்றவர்களாய்		கொண்டு
		आसेदुः	காத்துநின்றனர்.

शिखरैर्विकिरामैनां लङ्कां मुष्टिभिरेव वा । इति स्म दधिरे सर्वे मनांसि हरिसत्तमाः ॥

हरिसत्तमाः	வானரோத்தமர்கள்	एनां लङ्कां एव	இந்த இலங்கையையும்
सर्वे	எல்லோரும்	विकिराम	பொடியாக்கிவிடு
शिखरैः	மலைச்சிகரங்களாலும்	इति	என்று [வோம்
मुष्टिभिः वा	முஷ்டிகளாலும்	मनांसि दधिरे स्म	நினைத்தார்கள்.

ततो रामो महातेजाः सुग्रीवमिदमब्रवीत्। सुविभक्तानि सैन्यानि शुक एष विमुच्यताम्॥

महातेजाः	மகாதேஜஸ்வியாகிய	सुविभक्तानि	நன்கு அணிவகுக்கப்
रामः	ஸ்ரீராமர்		பட்டுவிட்டன.
सुग्रीवं	சுக்ரீவனைப் பார்த்து	ततः	ஆனபடியால்
इदं	பின்வருமாறு	एषः	இந்த
अब्रवीत्	சொன்னார்:	शुकः	சுகன்
सैन्यानि	"சேனைகள்	विमुच्यताम्	விட்டுவிடப்படட்டும்."

रामस्य वचनं श्रुत्वा वानरेन्द्रो महाबलः। मोचयामास तं दूतं शुकं रामस्य शासनात् ॥

महाबलः	மகாபலசாலியாகிய	शासनात्	ஆக்கினை என்கிற
वानरेन्द्रः	வானரமன்னன்	तं	அந்த [படியால்
रामस्य	ஸ்ரீராமரது	दूतं	தூதனாகிய
वचनं श्रुत्वा	ஆக்கினையைக் கேட்டு,	शुकं	சுகனை
रामस्य	ஸ்ரீராமரது	मोचयामास	விடுவித்தான்.

मोचितो रामवाक्येन वानरैश्चाभिपीडितः। शुकः परमसंत्रस्तो रक्षोऽधिपमुपागमत् ॥२५॥

वानरैः	வானரர்களால்	रामवाक्येन	ஸ்ரீராமரது ஆக்கினை
अभिपीडितः च	மிகத் துன்புறுத்தப்		யால்
	பட்டவனும்	मोचितः	ஸ்வதந்திரம் பெற்ற
परमसंत्रस्तः	மிக்க நடுநடுங்கிக்	शुकः	சுகன் [வனுமான
	கிடந்தவனும்	रक्षोधिपं	ராக்ஷஸமன்னனிடம்
		उपागमत्	வந்துசேர்ந்தான்.

रावणः प्रहसन्नेव शुकं वाक्यमभाषत। किमिमौ ते सितौ पक्षौ लूनपक्षश्च दृश्यसे ॥
कच्चिन्नानेकचित्तानां तेषां त्वं वशमागतः ॥ २६ ॥

रावणः	ராவணன்
शुकं	சுகனைப்பார்த்து
प्रहसन् एव	பரிகாசமாய் நகைத்துக்கொண்டே
वाक्यं	ஒரு சொல்லை
अभाषत	பின்வருமாறு மொழி[ந்தான்:
ते	"உனது
इमौ पक्षौ	இவ்விரண்டு சிறகுக[ளும்
किं	ஏன்
सितौ	கட்டப்பட்டிருக்கின்றன.
लूनपक्षः च	காயப்படுத்தப்பட்ட சிறகுகளையுடையவனுகவும்
दृश्यसे	காணப்படுகின்றனை.
त्वं	நீ
अनेकचित्तानां	மனம் ஒரு நிலையில்நில்
तेषां	அவர்களுடைய [லாத
वशं आगतः न	அதீனத்தில் சிக்கிக் கொண்டு விட்டவனுய் இல்லையென
कच्चित्	நான்நினைக்கின்றேன்."

ततः स भयसंविग्नस्तथा राज्ञाऽभिचोदितः। वचनं प्रत्युवाचेदं राक्षसाधिपमुत्तमम् ॥२७॥

ततः	அப்பொழுது
भयसंविग्नः	பயத்தால் நடுநடுங்கி கிடந்தவனும்
राज्ञा	மன்னனல்
तथा	மேற்கண்டவாறு
अभिचोदितः	கேட்கப்பட்டவனு[மான
सः	அவன்
उत्तमं	பெரியவனுகிய
राक्षसाधिपं	அரக்கமன்னனைப் பார்த்து
इदं	பின்வரும்
वचनं	சொல்லை
प्रत्युवाच	பதிலாய்ச் சொன்னன்:

सागरस्योत्तरे तीरे ब्रुवंस्ते वचनं तथा। यथा सन्देशमक्लिष्टं सान्त्वयं श्लक्ष्णया गिरा ॥

सागरस्य	"சமுத்திரத்தின்
उत्तरे	வட
तीरे	கரையில்
ते	தேவரீரது
सन्देशं	ஆக்ஞையாகிற
वचनं	சொல்லை
यथा तथा	சொன்னபடியே
ब्रुवन्	சொல்லுகின்றவனுய்
अक्लिष्टं	தைரியமாய்
श्लक्ष्णया	இனிய
गिरा	சொற்கொண்டு
सान्त्वयम्	சமாதானமாய் கூறினேன்." (ஆர்ஷம்).

क्रुद्धैस्तैरहमुत्प्लुत्य दृष्टमात्रैः प्लवङ्गमैः। गृहीतोऽस्म्यपि चारब्धो हन्तुं लोतुं च मुष्टिभिः ॥

दृष्टमात्रैः	"கண்டுவிட்டவர்களும்
क्रुद्धैः	சினங்கொண்டவர்களுமான
तैः	அந்த
प्लवङ्गमैः	வானரர்களால்
उत्प्लुत्य	கிளம்பி
अहं	நான்
गृहीतः अस्मि	பிடிக்கப்பட்டவனுக ஆயினேன்.
अपि च	இதோடுகூட
मुष्टिभिः	முஷ்டிகளால்
लोतुं	புடைக்கவும்
हन्तुं च	மற்றப்படி துன்புறுத்தப்படவும்
आरब्धः	ஆளாயினேன்.

नैव संभाषितुं शक्याः संप्रश्नोऽत्र न लभ्यते । प्रकृत्या कोपनास्तीक्ष्णा वानरा राक्षसाधिप॥

राक्षसाधिप	"ராக்ஷஸமன்னனே!	संप्रश्नः	முகங்கொடுத்து பேசுதலென்பது
वानराः	வானரர்கள்	अत्र	இவர்கள் விஷயத்தில்
प्रकृत्या	இயல்பாகவே	लभ्यते न	கிடைக்கமாட்டாது.
कोपनाः	கோபமுள்ளவர்களாகவும்	संभाषितुं एव	எதையும் சொல்வதற்கும்
तीक्ष्णाः	கொடியவர்களாகவுமிருக்கின்றார்கள்.	न शक्याः	சாத்தியமானவர்கள் இல்லை.

स च हन्ता विराधस्य कबन्धस्य खरस्य च । सुग्रीवसहितो रामः सीतायाः पदमागतः॥

विराधस्य	"விராதனையும்	सः	அந்த
कबन्धस्य	கபந்தனையும்	रामः	ராமன்
खरस्य च	கரனையும்	सीतायाः	சீதையின்
हन्ता	கொன்றவனும்	पदं च	இருப்பிடத்தை
सुग्रीवसहितः	சுக்ரீவனுடன் கூட்டுறவுகொண்டவனுமான	आगतः	அறிந்துக்கொண்டுவிட்டான்.

स कृत्वा सागरे सेतुं तीर्त्वा च लवणोदधिम् । एष रक्षांसि निर्धूय धन्वी तिष्ठति राघवः॥

सः	"அந்த	तीर्त्वा	தாண்டிவிட்டு
राघवः	ராமன்	रक्षांसि च	அரக்கர்களையும்
सागरे	சமுத்திரத்தில்	निर्धूय	திருணமாய் நினைத்து
सेतुं	ஸேதுவை	धन्वी	வில்லும் கையுமாய்
कृत्वा	கட்டி	एषः तिष्ठति	இதோ வந்துசேர்ந்திருக்கின்றான்.
लवणोदधिं	உவர்கடலை		

ऋक्षवानरसङ्घानामनीकानि सहस्रशः । गिरिमेघनिकाशानां छादयन्ति वसुन्धराम्॥३३॥

गिरिमेघ-निकाशानां	"பர்வதங்களையும் மேகங்களையும் நிகர்த்த	सहस्रशः	ஆயிரக்கணக்கான
		अनीकानि	சேனைகள்
ऋक्षवानर-सङ्घानां	கரடிகளுடையவும் வானரர்களுடையவும் கூட்டங்களின்	वसुन्धरां	பூமியை
		छादयन्ति	மூடிக்கொண்டிருக்கின்றன.

राक्षसानां बलौघस्य वानरेन्द्रबलस्य च । नैतयोर्विद्यते सन्धिर्देवदानवयोरिव ॥ ३४ ॥

देवदानवयोः	"தேவர்களுக்கும் அசுரர்களுக்கும்	बलौघस्य	சேனைசமூகத்திற்கும்
		वानरेन्द्रबलस्य च	வானரமன்னனது சேனைக்கும்
इव	எப்படியோ அப்படியே	सन्धिः	ஒற்றுமையுடனிருத்தல்
एतयोः	இவ்விரண்டான		
राक्षसानां	அரக்கர்களுடைய	विद्यते न	கிடைக்கமாட்டாது.

पुरा प्राकारमायान्ति क्षिप्रमेकतरं कुरु। सीतां वाऽस्मै प्रयच्छाशु सुयुद्धं वा प्रदीयताम् ॥

प्राकारं	"மதிற்சுவரைநோக்கி
आयान्ति	வந்துகொண்டிருக் கின்றார்கள்.
पुरा	வந்துசேர்வதற்கு முந்தியே
क्षिप्रं	காலதாமதமின்றி
एकतरं	பின்வரும் இரண்டி லொன்றை
कुरु	செய்வீராக.
आशु	உடனே
सीतां वा	சீதையையாவது
अस्मै	இவருக்கு
प्रयच्छ	திருப்பிக்கொடுத்து விடும்.
वा	அல்லது
सुयुद्धं वा	பெரும் போரானது
प्रदीयताम्	விதிக்கப்படட்டும்."

शुकस्य वचनं श्रुत्वा रावणो वाक्यमब्रवीत्। रोषसंरक्तनयनो निर्दहन्निव चक्षुषा ॥३६॥

रावणः	ராவணன்
शुकस्य	சுகனது
वचनं श्रुत्वा	சொல்லைக் கேட்டு
चक्षुषा	கண்ணால்
निर्दहन् इव	எரித்துவிடுபவன் போன்று
रोषसंरक्तनयनः	கோபத்தால் கண்கள் சிவந்தவனாய்
वाक्यं	பின்வரும் சொல்லை
अब्रवीत्	புகன்றான்:

यदि मां प्रति युद्धयेरन्देवगन्धर्वदानवाः। नैव सीतां प्रदास्यामि सर्वलोकभयादपि ॥३७॥

देवगन्धर्वदानवाः	"தேவர்கள், கந்தர்வர் கள், அசுரர்கள்
मां प्रति	என்னை எதிர்த்து
युध्येरन्	போர்புரிகின்றார்கள்
यदि	என்றாலும்சரி;
सर्वलोकभयात्-अपि	எல்லா லோகங்களிலி ருந்து பயம் ஏற்படு கிறது என்றாலும்சரி;
सीतां एव	சீதையை மாத்திரம்
प्रदास्यामि न	திருப்பிக்கொடேன்.

कदा नामाभिधावन्ति राघवं मामकाः शराः। वसन्ते पुष्पितं मत्ता भ्रमरा इव पादपम् ॥

वसन्ते	"வஸந்தகாலத்தில்
मत्ताः	கொழுத்த
भ्रमराः	வண்டுகள்
पुष्पितं	புஷ்பித்திருக்கும்
पादपं	ஓர் மரத்தை
इव	எவ்வண்ணமோ அவ் வண்ணமே
मामकाः	என்னால் விடப்படும்
शराः	பாணங்கள்
राघवं	ஸ்ரீராமரை
कदा नाम	எப்பொழுதுதான்
अभिधावन्ति	மொய்க்கப்போகின்ற னவோ?

कदा तूणीशयैर्दीप्तैर्गणशः कार्मुकच्युतैः। शरैरादीपयाम्येनमुल्काभिरिव कुञ्जरम् ॥ ३९॥

दीप्तैः	"எரிகின்றவைகளும்
तूणीशयैः	அம்புறுத்தூணியில் கிடப்பவைகளும்
गणशः	கூட்டங்கூட்டமாக
कार्मुकच्युतैः	வில்லிலிருந்து வெளி வருகின்றவையுமான

शरैः	பாணங்களால்	कुञ्जरं	யானையை
एनं	இவனை	इव	எப்படியோ அப்படியே
उल्काभिः	கொள்ளிக்கட்டை களால்	कदा	எப்பொழுது
		आदीपयामि	கொளுத்துவேனோ?

तच्चास्य बलमादास्ये बलेन महता वृतः। ज्योतिषामिव सर्वेषां प्रभामुद्यन्दिवाकरः ॥४०॥

उद्यन्	"உதயமாகும்	महता	பெரும்
दिवाकरः	சூரியன்	बलेन	சேனையால்
सर्वेषां	மற்றுள்ள எல்லா	वृतः	சூழப்பட்டவனுய்
ज्योतिषां	கிரகங்களுடைய	अस्य	இவனது (நான்)
प्रभां	ஒளியை	तत्	அந்த
इव	எவ்வண்ணமோ அவ் வண்ணமே	बलं च	பலத்தையும்
		आदास्ये	வாங்கிவிடுவேன்.

सागरस्येव मे वेगो मारुतस्येव मे गतिः। न हि दाशरथिर्वेद तेन मां योद्धुमिच्छति ॥

मे	"எனது	दाशरथिः हि	ராமன் மாத்திரம்
वेगः	ஆற்றல்	वेद न	இதை அறியாதிருக் கிறான்.
सागरस्य इव	சமுத்திரத்திற்கு நிகரானது;	तेन	அதனல்தான்
मे	எனது	मां	என்னுடன்
गतिः	போக்கு	योद्धुं	போர்புரிய
मारुतस्य इव	வாயுவுக்குநிகரானது;	इच्छति	துணிகிறான்.

न मे तूणीशयान्बाणान्सविषानिव पन्नगान्। रामः पश्यति संग्रामे तेन मां योद्धुमिच्छति॥

रामः	"ராமன்	पन्नगान्	பாம்புகளை
संग्रामे	போரில்	इव	நிகர்த்தவைகளென
मे	எனது	पश्यति न	அறிந்திலன்.
तूणीशयान्	அம்புறுத்தூணியி லிருக்கும்	तेन	அதனல்தான்
		मां	என்னுடன்
बाणान्	பாணங்களை	योद्धुं	போர்புரிய
सविषान्	விஷத்தோடுகூடிய	इच्छति	துணிகிறான்.

न जानाति पुरा वीर्यं मम युद्धे स राघवः ॥ ४३ ॥

सः	"அந்த	मम	எனது
राघवः	ராமன்	वीर्यं	வீர்யத்தை
युद्धे	போரில்	पुरा	இதற்குமுன்
		जानाति न	கண்டதில்லை.

मम चापमयीं वीणां शरकोणैः प्रवादिताम् । ज्याशब्दतुमुलां घोरामार्तभीतमहास्वनाम् ॥
नाराचतलसन्नादां तां ममाहितवाहिनीम् । अवगाह्य महारङ्गं वादयिष्याम्यहं रणे ॥४५॥

अहं	"நான்
रणे	போரில்
मम	எனது
तां	அந்த
अहितवाहिनीं	பகைவர்களின் சேனையாகிற
महारङ्गं	நாடகமேடையில்
अवगाह्य	புகுந்து
शरकोणैः	சரங்களாகிற(மீட்டும்) கருவிகளால்
प्रवादितां	மீட்டப்பெற்றதும்
घोरां	பயங்கரமாய்
ज्याशब्दतुमुलां	நாணொலியாகிய அடர்ந்த ஓசையுடையதும்
आर्तभीत-महास्वनां	பீடிக்கப்பட்டுப் பயந்தவர்களின் பேரொலியையுடையதும்
नाराचतल-संनादां	நாராசபாணத்தின் கோஷமுடையதாயிருக்கிற
चापमयीं	வில்லாகிய
वीणां	வீணையை
वादयिष्यामि	வாசிக்கப்போகிறேன்.

न वासवेनापि सहस्रचक्षुषा यथाऽस्मि शक्यो वरुणेन वा स्वयम् ।
यमेन वा धर्षयितुं शराग्निना महाहवे वैश्रवणेन वा पुनः ॥ ४६ ॥

सहस्रचक्षुषा	"ஆயிரம் கண்கள் படைத்த
वासवेन अपि	இந்திரனல் தானுகட்டும்
स्वयं	ஸாக்ஷாத்
वरुणेन वा	வருணனல் தானுகட்டும்
यमेन वा	யமனல் தானுகட்டும்
वैश्रवणेन वा	குபேரனல் தானுகட்டும்
महाहवे	பெரும்போரில்
शराग्निना	கணைத்தீயால்
यथा पुनः	எப்படியும்
धर्षयितुं	அடக்க
अस्मि	நான்
शक्यः न	முடியாதவன்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे चतुर्विंशः सर्गः ॥

आदितः श्लोकाः 15564 युद्धकाण्डे आदितः श्लोकाः 889

इत्यार्षे श्रीमद्रामायणे विंशेऽह्नि वर्तमानकथाप्रसङ्गः ॥

இவ்விதம் ஆதியில் குசன் லவன் இவர்களால் ஸ்ரீராமர் ஸந்நிதியில் அச்வமேத யாகசாலையில் கானம் செய்யப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் இருபதாவது தினத்தில் கானம் பண்ணப்பட்ட கதை முடிவுபெற்றது.

[पुरा कुशलवाभ्यां श्रीरामसन्निधावश्वमेधयज्ञवाटे द्वाविंशति दिनेषु गीते श्रीमद्रामायणे एकविंशेऽह्नि युद्धकाण्डे पञ्चविंशसर्गमारभ्य पञ्चाशसर्गपर्यन्तं (15565—16665 श्लोकाः) गीतम्। तस्मिन् दिने गीताः श्लोकाश्च 1101]

ஆதியில் குசன் லவன் இவர்களால் ஸ்ரீராமஸந்நிதியில் அச்வமேதயாகசாலையில் முப்பத்திரண்டு தினங்களில் கானம் செய்யப்பட்ட ஸ்ரீமத் ராமாயணத்தில் இருபத்தோராவது தினத்தில் யுத்தகாண்டதில் 25-வது ஸர்க்கம் முதல் 50-வது ஸர்க்கம் வரை (15565—16665) கானம் செய்யப்பட்டது. அன்று கானம் செய்யப்பட்ட சுலோகசங்கியை 1101]

पञ्चविंशः सर्गः—இருபத்தைந்தாவது ஸர்க்கம். ॥ २५ ॥

शुकसारणवचनम्—சுகஸாரணர்களது வசனம்.

सबले सागरं तीर्णे रामे दशरथात्मजे। अमात्यौ रावणः श्रीमानब्रवीच्छुकसारणौ ॥ १ ॥

दशरथात्मजे	தசரதரின் திருமகனு	रावणः	ராவணன்
रामे	ஸ்ரீராமர் [ராகிய	अमात्यौ	மந்திரிகளான
सबले	சேனையுடன்	शुकसारणौ	சுகனையும், சாரணனை யும் பார்த்து
सागरं	சமுத்திரத்தை		
तीर्णे	தாண்டியதும்	अब्रवीत्	பின்வருமாறு
श्रीमान्	ஸ்ரீமானுகிய		மொழிந்தான்:

समग्रं सागरं तीर्णं दुस्तरं वानरं बलम्। अभूतपूर्वं रामेण सागरे सेतुबन्धनम् ॥ २ ॥

वानरं	"வானர	सागरे	சமுத்திரத்தில்
बलं	சேனை	रामेण	ராமனெருவனல்
समग्रं	எல்லாமும்	अभूतपूर्वं	இதுவரையும் ஒருவ ரும் செய்திராத
दुस्तरं	தாண்டமுடியாத		
सागरं	சமுத்திரத்தை	सेतुबन्धनम्	அணைக்கட்டு எற்பட் டிருக்கிறது.
तीर्णं	தாண்டிவிட்டது.		

सागरे सेतुबन्धं तु न श्रद्दध्यां कथञ्चन। अवश्यं चापि संख्येयं तन्मया वानरं बलम् ॥

सागरे	"சமுத்திரத்தில்	अपि तु	ஆனல் இப்பொழுதோ
सेतुबन्धं च	அணைகட்டுதலென்ப தையே	तत्	அந்த
		वानरं बलं	வானரசேனை
कथञ्चन	யார் சொல்லியிருந்த போதிலும்	मया	என்னல்
		अवश्यं	அவச்யமாய்
श्रद्दध्यां न	நான் நம்பிக்கை கொள்ளேன்.	संख्येयम्	கணக்கிடத்தக்கதா யிருக்கிறது.

भवन्तौ वानरं सैन्यं प्रविश्यानुपलक्षितौ। परिमाणं च वीर्यं च ये च मुख्याः प्लवङ्गमाः ॥
मन्त्रिणो ये च रामस्य सुग्रीवस्य च संमताः। ये पूर्वमभिवर्तन्ते ये च शूराः प्लवङ्गमाः ॥
स च सेतुर्यथा बद्धः सागरे सलिलार्णवे। निवेशं च यथा तेषां वानराणां महात्मनाम् ॥
रामस्य व्यवसायं च वीर्यं प्रहरणानि च। लक्ष्मणस्य च वीरस्य तत्त्वतो ज्ञातुमर्हथः ॥

भवन्तौ	"நீங்களிருவர்களும்,
वानरं सैन्यं	வானரசேனைக்குள்
अनुपलक्षितौ	அவர்களால் கண்டு கொள்ளப்படாத வர்களாய்,
प्रविश्य	புகுந்து
परिमाणं च	அளவையும்,
वीर्यं च	வீர்யத்தையும்,
मुख्याः	தலைமையான
प्लवङ्गमाः	வானரர்கள்
ये च	எவர்களோ அவர்களை யும்,
रामस्य	ராமனுடையவும்,
सुग्रीवस्य	சுக்ரீவனுடையவும்,
सम्मताः	இஷ்டமான
मन्त्रिणः	மந்திரிகள்
ये च	எவர்களோ அவர்களை யும்,
पूर्वं	முதலில்
ये	எவர்கள்
अभिवर्तन्ते च	நிற்கின்றார்களோ அவர்களையும்,
प्लवङ्गमाः	வானர
शूराः	சூரர்கள்
ये च	எவர்களோ அவர்களை யும்,
सलिलार्णवे	நீர் நிரம்பிய
सागरे	சமுத்திரத்தில்
सः	அந்த
सेतुः	அணை
यथा बद्धः च	எப்படிக் கட்டப்பட்ட தோ அதையும்,
महात्मनां	மகா ஆற்றலுடைய
तेषां	அந்த
वानराणां	வானரர்கள்
निवेशं	வாழுமிடம்
यथा च	எதுவோ அதையும்,
रामस्य च	ராமனுடையவும்
वीरस्य	சூரனுகிய
लक्ष्मणस्य च	லக்ஷ்மணனுடையவும்
व्यवसायं	உபாயத்தையும்
वीर्यं	வீர்யத்தையும்
प्रहरणानि च	ஆயுதங்களையும்
तत्त्वतः	உள்ளபடி
ज्ञातुं	அறிந்துகொள்ள
अर्हथः	கடவீர்கள்.

कश्च सेनापतिस्तेषां वानराणां महौजसाम्। एतज्ज्ञात्वा यथातत्त्वं शीघ्रमागन्तुमर्हथः ॥८॥

महौजसां	"மகா ஆற்றலுடைய
तेषां	அந்த
वानराणां	வானரர்களுக்கு
सेनापतिः	சேனபதி
कः	யார் ?
एतत् च	இதையும்
यथातत्त्वं	உள்ளபடி
ज्ञात्वा	கண்டுகொண்டு
शीघ्रं	விரைவில்
आगन्तुं	திரும்பிவர
अर्हथः	கடவீர்கள்."

इति प्रतिसमादिष्टौ राक्षसौ शुकसारणौ । हरिरूपधरौ वीरौ प्रविष्टौ वानरं बलम् ॥ ९ ॥

वीरौ	வீரர்களாகிய	प्रतिसमादिष्टौ	இவ்விஷயத்திலாக்கி னேபெற்றவர்களாய்
शुकसारणौ	சுகசாரண	हरिरूपधरौ	வானரவுரு எடுத்துக் கொண்டு
राक्षसौ	அரக்கர்கள்	वानरं बलं	வானரசேனைக்குள்
इति	மேற்கண்டவாறு	प्रविष्टौ	புகுந்தார்கள்.

ततस्तद्वानरं सैन्यमचिन्त्यं रोमहर्षणम् । संख्यातुं नाध्यगच्छेतां तदा तौ शुकसारणौ ॥

तौ	அந்த	रोमहर्षणं	மயிர்ச்சிலிர்க்கச் செய் கிறதுமாகிய
शुकसारणौ	சுகனும் சாரணனும்	वानरं सैन्यं	வானரசேனையை
तदा	அப்பொழுது	संख्यातुं	இவ்வளவெனத் தொகையிட
ततः	அவ்விடத்தில்	अध्यगच्छेतां न	முடியவில்லை.
तत्	அந்த		
अचिन्त्यं	மனதால் நினைக்க வொண்ணாததும்		

संस्थितं पर्वताग्रेषु निर्झरेषु गुहासु च । समुद्रस्य च तीरेषु वनेषूपवनेषु च ॥ ११ ॥
तरमाणं च तीर्णं च तर्तुकामं च सर्वशः । निविष्टं निविशच्चैव भीमनादं महाबलम् ॥
तद्बलार्णवमक्षोभ्यं ददृशाते निशाचरौ ॥ १२ ॥

तत्	அந்த	तरमाणं च	தாண்டிக்கொண்டிருக் கிறதாகவும்,
अक्षोभ्यं	கலக்கமுடியாத	तीर्णं च	தாண்டிவிட்டதாகவும்
बलार्णवं	சேனைசமுத்திரமாகிய	तर्तुकामं च	தாண்டத்தயார்செய் கிறதாகவும்
महाबलं	பெருஞ்சேனையை	निविष्टं	உட்கார்த்துவிட்டதா கவும்,
पर्वताग्रेषु	மலையின் சிகரங்களி லும்	निविशत् च	உட்காரவிருக்கிறதா [கவும்,
निर्झरेषु	மலையருவிகளிலும்	सर्वशः	எங்கும்
गुहासु च	குகைகளிலும்	भीमनादं एव	பேரொலி செய்கிற தாகவும்,
समुद्रस्य	சமுத்திரத்தின்	निशाचरौ	அரக்கர்களிருவர் களும்
तीरेषु च	கரைகளிலும்	ददृशाते	கவனித்தார்கள்.
वनेषु	காடுகளிலும்		
उपवनेषु च	தோட்டங்களிலும்		
संस्थितं	இருப்பதாகவும்,		

तौ ददर्श महातेजाः प्रच्छन्नौ च विभीषणः ॥ १३ ॥

महातेजाः	மகா தேஜஸ்வியான	तौ च	அவ்விருவர்களையும்
विभीषणः	விபீஷணர்	ददर्श	கண்டுகொண்டு
प्रच्छन्नौ	மாறுவேஷத்துட னிருக்கும்		விட்டார்.

आचचक्षेऽथ रामाय गृहीत्वा शुकसारणौ ॥ १४ ॥

अथ	அப்பொழுது	गृहीत्वा	பிடித்துக்கொண்டு
शुकसारणौ	சுகனையும் ஸாரணனையும்	रामाय	ராமருக்கு
		आचचक्षे	பின்வருமாறு தெரிவித்தார் :

तस्येमौ राक्षसेन्द्रस्य मन्त्रिणौ शुकसारणौ । लङ्कायाः समनुप्राप्तौ चारौ परपुरञ्जय ॥

परपुरञ्जय	"சத்துருக்களின் நகர்களை வெல்லுபவரே!	राक्षसेन्द्रस्य	அரக்கர் மன்னனது
इमौ	இந்த	मन्त्रिणौ	மந்திரிகள்;
शुकसारणौ	சுகனும் ஸாரணனும்	लङ्कायाः	லங்கையிலிருந்து
तस्य	அந்த	समनुप्राप्तौ	இங்கு வந்திருக்கும்
		चारौ	ஒற்றர்கள்."

तौ दृष्ट्वा व्यथितौ रामं निराशौ जीविते तदा । कृताञ्जलिपुटौ भीतौ वचनं चेदमूचतुः ॥

तौ	அவ்விருவர்களும்	भीतौ च	அச்சமடைந்தவர்களாயும்
रामं दृष्ट्वा	ஸ்ரீராமரைப் பார்த்து	कृताञ्जलिपुटौ	அஞ்சலிபண்ணிக்கொண்டு
तदा	அப்பொழுது	इदं वचनं	பின்வரும் சொல்லை
व्यथितौ	உள்ளம் அவிந்து	ऊचतुः	சொன்னர்கள் :
जीविते	உயிரின்மேல்		
निराशौ	ஆசை ஒழிந்தவர்களாய்		

आवामिहागतौ सौम्य रावणप्रहितावुभौ । परिज्ञातुं बलं कृत्स्नं तवेदं रघुनन्दन ॥ १७ ॥

सौम्य	"சாந்தமூர்த்தியே!	कृत्स्नं	எல்லாவற்றையும்,
रघुनन्दन	ஸ்ரீராம!	परिज्ञातुं	நன்கு அறிவதற்காக
आवां उभौ	நாங்கள் இருவர்களும்	रावणप्रहितौ	ராவணனல் அனுப்பப்பட்டவர்களாக
तव	தேவரீரது	इह	இங்கு
इदं	இந்த	आगतौ	வந்திருக்கின்றோம்."
बलं	சேனையைப்பற்றி		

तयोस्तद्वचनं श्रुत्वा रामो दशरथात्मजः । अब्रवीत्प्रहसन्वाक्यं सर्वभूतहिते रतः ॥ १८ ॥

दशरथात्मजः	தசரதசக்கிரவர்த்தியின் திருமகனும்	तयोः	அவ்விருவர்களுடைய
		तत् वचनं	அந்த சொல்லை
सर्वभूतहिते	எல்லாப்ராணிகளின் நன்மையில்	श्रुत्वा	செவிக்கொண்டு
		प्रहसन्	புன்னகைகொண்டு
रतः	ஊக்கமுடையவருமான	वाक्यं	ஒரு சொல்லை
		अब्रवीत्	பின்வருமாறு மொழிந்தார் :
रामः	ஸ்ரீராமர்		

यदि दृष्टं बलं कृत्स्नं वयं वा सुसमीक्षिताः । यथोक्तं वा कृतं कार्यं छन्दतः प्रतिगम्यताम् ॥

बलं कृत्स्नं	"சேனை எல்லாமும்	यथोक्तं	நியமனம்பெற்றவாறு
दृष्टं	கண்டறியப்பட்டதா	कृतं	முடிந்ததாகவும்,
वयं	நாங்கள் [கவும்	यदि वा	இருக்குமாயின்
सुसमीक्षिताः वा	விசாரித்தறியப்பட்ட	छन्दतः	இஷ்டப்படியே
	வர்களாகவும,	प्रतिगम्यताम्	திரும்பிச்செல்லப்
कार्यं	வந்த காரியம்		படட்டும்.

अथ किंचिददृष्टं वा भूयस्तद्द्रष्टुमर्हथः ॥ २० ॥

भूयः	"இன்னும்	वा	இருக்குமாகில்
अदृष्टं	கண்டறியாதது	तत् अथ	அதையும்
किञ्चित्	ஏதேனுமொன்று	द्रष्टुं अर्हथः	கண்டறியக்கடவீர்
			கள்.

विभीषणो वा कार्त्स्न्येन भूयः संदर्शयिष्यति ॥ २१ ॥

वा	"வேண்டுமானால்	कार्त्स्न्येन	எதையும் விடாமல்
विभीषणः	விபீஷணர்	भूयः	இன்னும்
		संदर्शयिष्यति	காட்டுவார்.

न चेदं ग्रहणं प्राप्य भेतव्यं जीवितं प्रति । न्यस्तशस्त्रौ गृहीतौ वा न दूतौ वधमर्हथः ॥

इदं	"இந்த	गृहीतौ च	பிடிபட்டவர்களுமான
ग्रहणं	கைதித்தன்மையை	दूतौ वा	தூதர்களாகிய நீங்க
प्राप्य	அடைந்து		ளிருவர்களும்
जीवितं प्रति	உயிரைப்பற்றி	वधं	கொலைக்கு
भेतव्यं न	சிந்தையுறவேண்டாம்.	अर्हथः न	உரியவர்களாகிர்கள்.
न्यस्तशस्त्रौ	கையிலாயுதமில்லாத		
	வர்களாகவும்		

पृच्छमानौ विमुञ्चैतौ चारौ रात्रिचरावुभौ । शत्रुपक्षस्य सततं विभीषण विकर्षणौ ॥२३॥

विभीषण	"விபீஷண!	चारौ	வேவுகாரர்களும்
सततं	எக்காலத்திலும்	रात्रिञ्चरौ	அரக்கர்களுமான
शत्रुपक्षस्य	சத்ருபக்ஷத்திற்கு	एतौ उभौ	இந்த இருவர்களையும்
विकर्षणौ	அஹிதம் செய்பவர்	पृच्छमानौ	கெஞ்சிப் பிரார்த்திக்
	களும்		கின்றவர்களாய்
		विमुञ्च	விட்டோட்டிவிடும்.

प्रविश्य नगरीं लङ्कां भवद्भ्यां धनदानुजः । वक्तव्यो रक्षसां राजा यथोक्तं वचनं मम ॥

लङ्कां	"இலங்கை	धनदानुजः	குபேரனது தம்பியார்
नगरीं	நகருக்கு	मम	எனது [(ராவணன்)
प्रविश्य	சென்று,	वचनं	சொல்லை
भवद्भ्यां	உங்களிருவர்களாலும்	यथोक्तं	நான் சொல்லுகிறபடி
रक्षसां	அரக்கர்களின்	वक्तव्यः	சொல்லப்படவேண்
राजा	மன்னனை		டியவன்

यद्बलं च समाश्रित्य सीतां मे हृतवानसि। तदर्शय यथाकामं ससैन्यः सहबान्धवः ॥२५॥

यत् बलं च	"'எந்த பலத்தையே
समाश्रित्य	பெரிதாய்ப் பாராட்டி
मे	எனது
सीतां	ஸீதையை
हृतवान् असि	அபஹரித்தவனுய் ஆகிறுயோ
तत्	அதை
ससैन्यः	சைனியங்களுடன் கூடினவனுயும்
सहबान्धवः	பந்துக்களோடுகூடின வனுயும்,
यथाकामं	இயன்றமட்டும்
दर्शय	நீ நேரில் காட்டுவா யாக.

श्वः काल्ये नगरीं लङ्कां सप्राकारां सतोरणाम्। राक्षसं च बलं पश्य शरैर्विध्वंसितं मया ॥

श्वः	"'நாளை
काल्ये	காலையில்
मया	என்னுல்
शरैः	பாணங்களால்
लङ्कां नगरीं	இலங்கைநகரை
सप्राकारां	மதிற்சுவர்களுடனும்
सतोरणां	தோரணவாயில் களுடனும்
राक्षसं	அரக்க
बलं	சேனையையும்
च	ஆகிய எல்லாவற்றை யும்
विध्वंसितं	நாசம்பண்ணிவிடப் பட்டதாக
पश्य	(நீ ப்ரத்யக்ஷத்தில்) பார்ப்பாயாக.

घोरं रोषमहं मोक्ष्ये बलं धारय रावण । श्वः काल्ये वज्रवान्वज्रं दानवेष्विव वासवः ॥

रावण	"'ராவணு!
वज्रवान्	வஜ்ரபாணியாகிய
वासवः	இந்திரன்
दानवेषु	அசுரர்கள்மீது
वज्रं	வஜ்ராயுதத்தை
इव	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
अहं	நான்
श्वः काल्ये	நாளைக் காலையில்
घोरं	அஸஹ்யமாய் விளங்கும்
रोषं	கோபாவேசத்தை
मोक्ष्ये	வெளிக்காட்டப் போகின்றேன்.
बलं	சைன்யத்தை
धारय	சேர்த்துவைத்துக் கொள்.'"

इति प्रतिसमादिष्टौ राक्षसौ शुकसारणौ । जयेति प्रतिनन्द्यैतौ राघवं धर्मवत्सलम् ॥
आगम्य नगरीं लङ्कामब्रूतां राक्षसाधिपम् ॥ २८ ॥

इति	மேற்கண்டவாறு
प्रतिसमादिष्टौ	இவ்விஷயத்தில் நியமனம்பெற்ற
राक्षसौ	அரக்கர்களான
एतौ	இந்த
शुकसारणौ	சுகனும் சாரணனும்
धर्मवत्सलं	தர்மத்தில் சலியாப் பற்முடைய
राघवं	ஸ்ரீராமரைப் பார்த்து
जय	"ஜெயம்பெறுவீராக"
इति	என்று
प्रतिनन्द्य	வாழ்த்திவிட்டு
लङ्कां नगरीं	இலங்கைநகருக்கு
आगम्य	திரும்பிச்சென்று
राक्षसाधिपं	அரக்கமன்னனிடம்
अब्रूताम्	பின்வருமாறு தெரி வித்தார்கள்:

विभीषणगृहीतौ तु वधार्हौ राक्षसेश्वर । दृष्ट्वा धर्मात्मना मुक्तौ रामेणामिततेजसा ॥२९॥

राक्षसेश्वर	"அரக்கமன்னனே!
वधार्हौ	வதைக்குரியவர்
दृष्ट्वा	கண்டு [களென
विभीषणगृहीतौ	விபீஷணரால் பிடிக்கப்பட்டவர்களான நாங்களிருவர்களும்
अमिततेजसा	அளவிலா ஆற்றலுடைய
धर्मात्मना	தர்மாத்மாவாகிய
रामेण	ஸ்ரீராமரால்
तु	அப்பொழுது
मुक्तौ	விடுவிக்கப்பட்டோம்.

एकस्थानगता यत्र चत्वारः पुरुषर्षभाः । लोकपालोपमाः शूराः कृतास्त्रा दृढविक्रमाः ॥
रामो दाशरथिः श्रीमांल्लक्ष्मणश्च विभीषणः । सुग्रीवश्च महातेजा महेन्द्रसमविक्रमः ॥३१॥

पुरुषर्षभाः	"புருஷோத்தமர்களும்
लोकपालोपमाः	லோகபாலர்களுக்கு நிகரானவர்களும்
कृतास्त्राः	அஸ்திரவித்தையில் தேர்ச்சியுடைய
शूराः	சூரர்களும்
दृढविक्रमाः	சலியா ஆண்மையுடையவர்களுமான
चत्वारः	நால்வர்களாகிய,
दाशरथिः	தசரதரின் மகனும்
महातेजाः	மகாதேஜஸ்வியும்
महेन्द्रसमविक्रमः	இந்திரனை நிகர்த்த விக்ரமசாலியும்
श्रीमान्	லக்ஷ்மீகடாக்ஷமுடை
रामः	ராமனும் [யவனுமான
लक्ष्मणः	லக்ஷ்மணனும்
विभीषणः च	விபீஷணனும்
सुग्रीवः च	சுக்ரீவனும்
यत्र	ஒரிடத்தில்
एकस्थानगताः	ஒன்றுசேர்த்துவிட்டார்கள்.

एते शक्ताः पुरीं लङ्कां सप्राकारां सतोरणाम् । उत्पाट्य संक्रामयितुं सर्वे तिष्ठन्तु वानराः ॥

एते	"இவர்கள்
लङ्कां पुरीं	இலங்கை நகரை
सप्राकारां	மதிற்சுவர்களுடனும்
सतोरणां	தோரணவாயில்களுடனும்,
उत्पाट्य	வேரோடு பெயர்த்து
संक्रामयितुं	வீசி எறிவதற்கு
शक्ताः	சமர்த்தர்கள்.
वानराः	வானரர்கள்
सर्वे	எல்லோரும்
तिष्ठन्तु	இருக்கட்டும்.

यादृशं तस्य रामस्य रूपं प्रहरणानि च । वधिष्यति पुरीं लङ्कामेकस्तिष्ठन्तु ते त्रयः ॥

तस्य	"அந்த
रामस्य	ராமரது
रूपं	வடிவழகும்
प्रहरणानि च	ஆயுதங்களும் ஆகிய இதெல்லாம்
यादृशं	எப்படிப்பட்டது!
एकः	அவன் ஒருவனே
लङ्कां पुरीं	இலங்கை நகரை
वधिष्यति	அழித்துவிடுவான்.
ते त्रयः	அந்த மற்று மூவர்கள்
तिष्ठन्तु	இருக்கட்டும்.

रामलक्ष्मणगुप्ता सा सुग्रीवेण च वाहिनी । बभूव दुर्धर्षतरा सेन्द्रैरपि सुरासुरैः ॥ ३४ ॥

सुग्रीवेण च "சுக்ரீவனாலும்
रामलक्ष्मणगुप्ता ராமனாலும், லக்ஷ்மண
னாலும் பரிபாலிக்கப்
सा அந்த [பட்ட
वाहिनी சேனையானது
सेन्द्रैः இந்திரனுட்பட்ட
सुरासुरैः अपि தேவர்களாலும் அசு
ரர்களாலும்கூட
दुर्धर्षतरा என்ன பாடுபட்டா
லும் அணுகமுடியா
ததாய்
बभूव விளங்குகிறது.

प्रहृष्टरूपा ध्वजिनी वनौकसां महात्मनां संप्रति योद्धुमिच्छताम् ।
अलं विरोधेन शमो विधीयतां प्रदीयतां दाशरथाय मैथिली ॥ ३५ ॥

सम्प्रति "இப்பொழுது
योद्धुं போர்புரிய
इच्छतां துணிவுகொண்டிருக்
கிற
महात्मनां மகா ஆற்றலுடைய
वनौकसां வானரர்களின்
ध्वजिनी சேனையானது
प्रहृष्टरूपा உத்ஸாகக்குறிகளு
டன் விளங்குகிறது.
विरोधेन अलं விரோதத்தால் (இது
வரையில்) ஆனது
போதும்.
शमः சமாதானம்
विधीयतां விதிக்கப்படட்டும்.
दाशरथाय ராமனுக்கு
मैथिली ஸீதை
प्रदीयताम् திருப்பிக்கொடுத்து
விடப்படட்டும்."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे पञ्चविंशः सर्गः ॥

आदितः श्लोकाः 15599 युद्धकाण्डे आदितः श्लोकाः 924

षड्विंशः सर्गः—இருபத்தாறுவது ஸர்க்கம். ॥ २६ ॥

वानरसेनादर्शनम्—வானரசேனையைக் காண்பிப்பது.

तद्वचः पथ्यमक्लीबं सारणेनाभिभाषितम् । निशम्य रावणो राजा पर्यभाषत सारणम् ॥

रावणः राजा ராவணமன்னன்
सारणेन ஸாரணனால்
अभिभाषितं சொல்லப்பட்ட
तत् அந்த
पथ्यं ஹிதமாயிருக்கிறதும்
अक्लीबं சிறந்ததாயிருக்கிறது
वचः சொல்லை [மான
निशम्य கேட்டு
सारणं ஸாரணனைப்பார்த்து
पर्यभाषत பின்வருமாறு
மொழிந்தான்:

यदि मामभियुञ्जीरन्देवगन्धर्वदानवाः । नैव सीतामहं दद्यां सर्वलोकभयादपि ॥ २ ॥

देवगन्धर्व-दानवाः "தேவர்கள், கந்தர்வர்
கள், அசுரர்கள்
मां என்னுடன்
अभियुञ्जीरन् போர்புரிய வருகின்
றார்கள்
यदि என்றாலும் சரி
सर्वलोक-भयात् अपि எல்லா உலகத்தினின்
றும் ஆபத்து சம்ப
விக்கிறது என்றாலும்
अहं நான்
सीतां एव ஸீதையைமட்டும்
दद्यां न திருப்பிக்கொடுக்க
மாட்டேன்.

त्वं तु सौम्य परित्रस्तो हरिभिस्तर्जितो भृशम्। प्रतिप्रदानमद्यैव सीतायाः साधु मन्यसे॥

सौम्य "தைர்யமற்றவனே!
त्वं நீ
हरिभिः வானரர்களால்
तर्जितः மிரட்டப்பட்டவனுய்
भृशं மிகவும்
परित्रस्तः तु உள்ளம்நடுங்கியவனுய் ஆகிவிட்டமையால்
अद्य एव இப்பொழுதே
सीतायाः சீதையை
प्रतिप्रदानं திருப்பிக்கொடுத்தலே
साधु நல்லதென
मन्यसे நினைக்கின்றனே.

को हि नाम सपत्नो मां समरे जेतुमर्हति ॥ ४ ॥

समरे "போரில்
मां என்னை
जेतुं வெல்ல
सपत्नः சத்துருவாகிய
कः नाम हि எவன்தான்
अर्हति வல்லவானுவான்?"

इत्यब्रवीत्स परुषं रावणो राक्षसाधिपः ॥ ५ ॥

राक्षसाधिपः ராக்ஷஸமன்னனுகிய
सः அந்த
रावणः ராவணன்
इति மேற்கண்டவாறு
परुषं மறுக்க இடமின்றி
अब्रवीत् பேசிமுடித்தான்.

आरुरोह ततः श्रीमान्प्रासादं हिमपाण्डरम्। बहुतालसमुत्सेधं रावणोऽथ दिदृक्षया ॥ ६ ॥

अथ அதன்மேல்
श्रीमान् ஸ்ரீமானுகிய
रावणः ராவணன்
ततः அவ்விடத்திலிருந்து
हिमपाण्डरं வெண்ணிறமான
बहुतालसमुत्सेधं பல பனைமரங்களினுயரத்தையுடைய
प्रासादं மாளிகையில்
दिदृक्षया நேரில் காணவேண்டுமென்ற அவாவினல்
आरुरोह ஏறினன்.

ताभ्यां चराभ्यां सहितो रावणः क्रोधमूर्च्छितः। पश्यमानः समुद्रं च पर्वतांश्च वनानि च॥
ददर्श पृथिवीदेशं सुसंपूर्णं प्लवङ्गमैः ॥ ८ ॥

रावणः ராவணன்
क्रोधमूर्च्छितः சினம் தலைக்கேறியவனுய்
समुद्रं च சமுத்திரத்தையும்
पर्वतान् च மலைகளையும்
वनानि च வனங்களையும்
ताभ्यां அவ்விரு
चराभ्यां ஒற்றர்களோடு
सहितः கூடவே
पश्यमानः பார்க்கின்றவனுய்
प्लवङ्गमैः வானரர்களால்
सुसम्पूर्णं நிரம்பப்பெற்ற
पृथिवीदेशं பூப்பிரதேசத்தை
ददर्श கண்டான்.

तदपारमसङ्ख्येयं वानराणां महद्बलम्। आलोक्य रावणो राजा परिपप्रच्छ सारणम् ॥

रावणः राजा ராவணமன்னன்
वानराणां வானரர்களுடைய
तत् அந்த
अपारं எல்லை காணமுடியாததும்
असंख्येयं கணக்கிடமுடியாததுமான
महत् பெரும்
बलं சைன்யத்தை
आलोक्य பார்த்து
सारणं ஸாரணனே நோக்கி
परिपप्रच्छ பின்வருமாறு வினவினன்:

एषां वानरमुख्यानां के शूराः के महाबलाः । ॥ १० ॥

वानरमुख्यानां	"வானரோத்தமராகிய	महाबलाः के	மகா பலிஷ்டர்கள்
एषां	இவர்களுள்		எவர்கள் ?
शूराः के	சூரர்கள் எவர்கள் ?		

के पूर्वमभिवर्तन्ते महोत्साहाः समन्ततः ॥ ११ ॥

समन्ततः	"எப்பொழுதும்	पूर्वं	முதலில்
महोत्साहाः	மிகவும் உத்சாகம்	के	எவர்கள்
	கொண்டவர்களாய்	अभिवर्तन्ते	நிற்கின்றார்கள் ?

केषां शृणोति सुग्रीवः के वा यूथपयूथपाः ॥ १२ ॥

सुग्रीवः	"சுக்ரீவன்	यूथपयूथपाः	சேனைக்கூட்டங்க
केषां	எவர்களது		ளின் தலைவர்
शृणोति	(சொல்லை)		
	கேட்கிறான் ?	के वा	யாவர் ?

सारणाचक्ष्व मे सर्वं के प्रधानाः प्लवङ्गमाः ॥ १३ ॥

सारण	"ஸாரண !	के	யாவர் ?
प्रधानाः	முக்கிய	सर्वं	எல்லாவற்றையும்
प्लवङ्गमाः	வானரர்	मे	எனக்கு
		आचक्ष्व	விளங்க விளம்பு."

सारणो राक्षसेन्द्रस्य वचनं परिपृच्छतः । आचचक्षेऽथ मुख्यज्ञो मुख्यांस्तत्र वनौकसः ॥

मुख्यज्ञः	முக்கியமானவர்களை	तत्र	அங்கு
	நன்கறிந்திருந்த	मुख्यान्	முக்கியமான
सारणः	ஸாரணன்,	वनौकसः	வானரர்களைப்பற்றி
परिपृच्छतः	வினவும்	वचनं	பதிலை
राक्षसेन्द्रस्य	ராக்ஷஸமன்னனுக்கு	आचचक्षे	பின்வருமாறு தெரி
अथ	அப்பொழுது		வித்தான் :

एष योऽभिमुखो लङ्कां नर्दंस्तिष्ठति वानरः । यूथपानां सहस्राणां शतेन परिवारितः ॥
यस्य घोषेण महता सप्राकारा सतोरणा । लङ्का प्रवेपते सर्वा सशैलवनकानना ॥ १६ ॥
सर्वशाखामृगेन्द्रस्य सुग्रीवस्य महात्मनः । बलाग्रे तिष्ठते वीरो नीलो नामैष यूथपः ॥

यः	"எந்த	परिवारितः	சூழப்பட்டிருக்கிறா
वानरः	வானரன்		னோ,
लङ्कां	இலங்கைக்கு	सर्वशाखामृगेन्द्रस्य	எல்லா வானரர்களுக்
अभिमुखः	எதிர்முகமாக		கும் மன்னனும்
नर्दन्	கர்ஜித்துக்கொண்டு	महात्मनः	மகா ஆற்றலுடைய
तिष्ठति	நிற்கிறானோ,	सुग्रीवस्य	சுக்ரீவனது
यूथपानां	சேனைகளின்	बलाग्रे	சேனையின் முன்னி
सहस्राणां	ஆயிரங்களின்		லையில்
शतेन	நூற்றால்	तिष्ठते	நிற்கிறானோ,

यस्य	எவனது
महता	பெரும்
घोषेण	கர்ஜனையால்
लङ्का	இலங்கைநகர்
सर्वा	முற்றிலும்
सप्राकारा	மதிற்சுவர்களுடனும்
सतोरणा	தோரணவாயில்க ளுடனும்
सशैलवन-काननां	மலைகளுடனும் வனங் களுடனும் சோலைக ளுடனும்
प्रवेपते	நடுநடுங்குகிறதோ,
एषः नीलः	இவன், நீலனென
नाम	பெயர்பூண்டவன்.
एषः यूथपः	இவன் சேனைத்தலை
वीरः	வீரன். [வன்.

बाहू प्रगृह्य यः पद्भ्यां महीं गच्छति वीर्यवान्। लङ्कामभिमुखः क्रोधादभीक्ष्णं च विजृम्भते॥
गिरिशृङ्गप्रतीकाशः पद्मकिञ्जल्कसन्निभः ॥ १८ ॥
स्फोटयत्यभिसंरब्धो लाङ्गूलं च पुनः पुनः। यस्य लाङ्गूलशब्देन स्वनन्ति प्रदिशो दश ॥
एष वानरराजेन सुग्रीवेणाभिषेचितः। यौवराज्येऽङ्गदो नाम त्वामाह्वयति संयुगे ॥ २० ॥
वालिनः सदृशः पुत्रः सुग्रीवस्य सदा प्रियः। राघवार्थे पराक्रान्तः शक्रार्थे वरुणो यथा॥
एतस्य सा मतिः सर्वा यद्दृष्टा जनकात्मजा। हनूमता वेगवता राघवस्य हितैषिणा ॥२२॥

वीर्यवान्	வீர்யசாலியும்
गिरिशृङ्ग-प्रतीकाशः	மலைச்சிகரத்தை யொத்தவனும்
पद्मकिञ्जल्क-सन्निभः	மலர்ந்த தாமரை போன்றவனுமான
यः	எவன்
बाहू	இருகரங்களையும்
प्रगृह्य	உயர்த்தி,
पद्भ्यां	கால்களால்
महीं	பூமியில்
गच्छति	நடந்துகொண்டிருக் கிறானே,
लङ्कां	இலங்கையை
अभिमुखः	பார்த்துக்கொண்டு
क्रोधात्	கோபாவேசத்தால்
अभीक्ष्णं	அடிக்கடி
विजृम्भते च	துள்ளுகிறானே,
अभिसंरब्धः	அதி உக்கிரம்கொண்
लाङ्गूलं च	வாலையும் [டவனுப்
पुनः पुनः	மீண்டும் மீண்டும்
स्फोटयति	சுழற்றி அடிக்கிறானே,
यस्य	எவனது
लाङ्गूलशब्देन	வாலோசையால்
दश प्रदिशः	பத்துதிக்குகளும்
स्वनन्ति	எதிரொலிக்கின்ற
एषः	இவன் [னவோ,
अङ्गदः	அங்கதனென
नाम	பெயர் பூண்டவன்.
वानरराजेन	வானரமன்னனை
सुग्रीवेण	சுக்ரீவனால்
यौवराज्ये	இளவரசுபட்டத்தில்
अभिषेचितः	முடிசூட்டப் பெற்
वालिनः	வாலிக்கு [றவன்;
सदृशः	ஏற்ற
पुत्रः	புதல்வன்;
सदा	எப்பொழுதும்
सुग्रीवस्य	சுக்ரீவனுக்கு
प्रियः	மனக்கோணாது நடக் கிறவன்;
शक्रार्थे	இந்திரன் விஷயத்தில்
वरुणः	வருணபகவான்
यथा	எவ்வண்ணமோ அவ் வண்ணமே
राघवार्थे	ஸ்ரீராமர் கைங்கர்யத் தில்
पराक्रान्तः	திடங்கொண்டவன்;

राघवस्य	ஸ்ரீராமருக்கு
हितैषिणा	நன்மைசெய்யவேண்டி
वेगवता	ஆண்மையுற்று விளங்கிய
हनूमता	ஹனுமானால்,
जनकात्मजा	ஜானகி
दृष्टा	காணப்பட்டாள்
यत्	என்பதெதுவோ
सा सर्वा	அதெல்லாமும்
एतस्य	இவனது
मतिः	நுண்ணறிவு;
त्वां	தேவரீரை
संयुगे	போர்நிமித்தமாய்
आह्वयति	அறைகூவுகிறான்.

बहूनि वानरेन्द्राणामेष यूथानि वीर्यवान् । परिगृह्याभियाति त्वां स्वेनानीकेन दुर्जयः ॥
अनु वालिसुतस्यापि बलेन महता वृतः । वीरस्तिष्ठति संग्रामे सेतुहेतुरयं नलः ॥ २४ ॥
ये तु विष्टभ्य गात्राणि क्ष्वेलयन्ति नदन्ति च । उत्थाय च विजृम्भन्ते क्रोधेन हरिपुङ्गवाः॥
एते दुष्प्रसहा घोराश्चण्डाश्चण्डपराक्रमाः । अष्टौ शतसहस्राणि दशकोटिशतानि च ॥२६॥
य एनमनुगच्छन्ति वीराश्चन्दनवासिनः । एषैवाशंसते लङ्कां स्वेनानीकेन मर्दितुम् ॥२७॥

ये	"எந்த
हरिपुङ्गवाः	வானரர்கள்
गात्राणि	அவயவங்களை
विष्टभ्य	முறித்துக்கொண்டு
क्ष्वेलयन्ति	விளையாடுகின்றார் களோ,
नदन्ति च	பூசலிடுகின்றார் களோ,
क्रोधेन	கோபத்தால்
उत्थाय	எழுந்து
विजृम्भन्ते च	துள்ளிக்குதிக்கின்றார் களோ அவர்களும்,
दुष्प्रसहाः	அணுகவொண்ணாதவர்களும்,
घोराः	பயங்கரமானவர்களும்
चण्डाः	கொடியவர்களும்,
चण्डपराक्रमाः	மகாபராக்ரமசாலி களுமான
एते	இவர்களும்,
अष्टौ शतसहस्राणि	எண்ணூறுயிரங்களும்
दश कोटिशतानि च	பத்து நூறுகோடி களும்,
ये	எந்த
चन्दनवासिनः	சந்தனக்காட்டில் வஸிக்கும்
वीराः	வீரர்களும்
एनं	இவனை
अनुगच्छन्ति	பின்பற்றி வருகின் றார்களோ,
अयं एव	இவன்தான்
सेतुहेतुः	ஸேதுவிற்குக் காரண மான
नलः	நளன் என்ற
वीर्यवान्	வீரியசாலி.
एषः	இவன்
वानरेन्द्राणां	வானரோத்தமர் களின்
बहूनि	பல
यूथानि	கூட்டங்களை
परिगृह्य	திரட்டிக்கொண்டு
स्वेन	தனது
अनीकेन	சேனையால்
दुर्जयः	பிறர் அணுகமுடியா தவனாய்
त्वां	தேவரீரை
अभियाति	எதிர்த்துவருகிறான்.
वालिसुतस्य	வாலிபைந்தனுக்கு
अनु अपि	பின்னும்
महता	பெரும்
बलेन	சேனையால்
वृतः	சூழப்பட்டவனாய்

संग्रामे	போரின்நிமித்தம்
तिष्ठति	காத்துநிற்கிறான்.
वीरः	வீரனுகிய
एषः	இவன்
स्वेन	தனது
अनीकेन तु	சேனையைக்கொண்டே
लङ्कां	இலங்கையை
मर्दितुं	உருவழிக்க
आशंसते	உத்தேசம் கொண்டி ருக்கிறான்.

श्वेतो रजतसंकाशश्चपलो भीमविक्रमः। बुद्धिमान्वानरो वीरस्त्रिषु लोकेषु विश्रुतः ॥ २८ ॥
तूर्णं सुग्रीवमागम्य पुनर्गच्छति सत्वरः। विभजन्वानरीं सेनामनीकानि प्रहर्षयन् ॥२९॥

श्वेतः	"ச்வேதனென்ற
वानरः	வானரன்
रजतसङ्काशः	வெள்ளியின் நிறமுற்றவன்.
चपलः	வேகமுடையுற்றவன்.
भीमविक्रमः	வெகு கொடிய பராக் கிரமசாலி.
बुद्धिमान्	புத்திகூர்மையுள்ள வன்.
त्रिषु लोकेषु	மூன்று உலகங்களி லும்
वीरः	வீரனென
विश्रुतः	பிரசித்திபெற்றவன்.
वानरीं सेनां	வானரசேனை யை
सत्वरः	பரபரப்புடன்
विभजन्	அணிவகுத்துக் கொண்டு
अनीकानि	சேனைகளை
प्रहर्षयन्	உத்சாகப்படுத்திக் கொண்டு
सुग्रीवं	சுக்ரீவனை
आगम्य	கண்டுவிட்டு
पुनः	திரும்பி
तूर्णं	வேகமாய்
गच्छति	வந்துகொண்டிருக்கி றான்.

यः पुरा गोमतीतीरे रम्यं पर्येति पर्वतम्। नाम्ना सङ्कोचनो नाम नानानगयुतो गिरिः ॥
तत्र राज्यं प्रशास्त्येष कुमुदो नाम यूथपः। योऽसौ शतसहस्राणां सहस्रं परिकर्षति ॥३१॥
यस्य वाला बहुव्यामा दीर्घा लाङ्गूलमाश्रिताः।
ताम्राः पीताः सिताः श्वेताः प्रकीर्णा घोरदर्शनाः ॥ ३२ ॥
अदीनो रोषणश्चण्डः संग्राममभिकाङ्क्षति। एषोऽप्याशंसते लङ्कां स्वेनानीकेन मर्दितुम् ॥

गोमतीतीरे	"கோமதிக்கரையில்
नानानगयुतः	பல சிறு குன்றுகளு
नाम्ना	பெயரால் [டன் கூடிய
सङ्कोचनः नाम	சங்கோசனம் என்ற பிரசித்திபெற்ற
गिरिः	ஓர் மலையிருக்கிறது.
यः	எவன்
पुरा	இதற்குமுன்
रम्यं	அழகிய
पर्वतं	இந்த மலையில்
पर्येति	சஞ்சரித்து வருகி றானே,
तत्र	அதில்
राज्यं प्रशास्ति	ராஜ்யபரிபாலனத்தை செய்துவருகிறானே,
यः	எவன்
शतसहस्राणां	லக்ஷத்தின்
सहस्रं	ஆயிரத்தை
परिकर्षति	கொண்டுவந்திருக்கி றானே,
यस्य	எவனுடைய
लाङ्गूलं आश्रिताः	வாலிலிருக்கின்ற
वालाः	மயிர்கள்
बहुव्यामाः	பல மார்பளவு

दीर्घः	நீண்டவைகளாய்
ताम्राः	சிவந்தும்
पीताः	மஞ்சள்நிறமுற்றும்
श्वेताः	வெளுத்தும்
सिताः	சுருண்டு
प्रकीर्णाः	அடர்ந்து
घोरदर्शनाः	பார்க்க பயங்கரமாய் இருக்கின்றனவோ,
एषः	இவன்
कुमुदः नाम	குமுதனென்று பெயர்பூண்ட
यूथपः	சேனைத்தலைவன்;
अदीनः	எதற்கும் சலியாதவன்.
रोषणः	கோபிஷ்டன்.
चण्डः	கொடியவன்.
असौ	இவன்
संग्रामं	போரை
अभिकांक्षति	எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான்.
एषः	இவன்
स्वेन	தனது
अनीकेन अपि	சேனையைக்கொண்டே
लङ्कां	இலங்கையை
मर्दितुं	உருவழிக்க
आशंसते	உத்தேசங்கொண்டிருக்கிறான்.

यस्त्वेष सिंहसङ्काशः कपिलो दीर्घकेसरः । निभृतः प्रेक्षते लङ्कां दिधक्षन्निव चक्षुषा ॥
विन्ध्यं कृष्णगिरिं सह्यं पर्वतं च सुदर्शनम् । राजन्सततमध्यास्ते रम्भो नामैष यूथपः ॥
शतं शतसहस्राणां त्रिंशच्च हरिपुङ्गवाः । यमेति वानराः शूराश्चण्डाश्चण्डपराक्रमाः ॥
परिवार्यानुगच्छन्ति लङ्कां मर्दितुमोजसा ॥ ३६ ॥

राजन्	"அரசே!
सिंहसङ्काशः	சிங்கத்தை நிகர்த்தவ
कपिलः	கபிலவர்ணனும் [னும்
दीर्घकेसरः	நீண்டமயிருடையவனும்
निभृतः	திருடசித்தனை
यः	எவன்
लङ्कां	இலங்கையை
चक्षुषा	கண்ணால்
दिधक्षन् इव	எரித்துவிடுகிறவன் போலவே
प्रेक्षते	பார்த்துக்கொண்டிருக்கிறானே,
विन्ध्यं	விந்தியமலையிலும்
कृष्णगिरिं	கிருஷ்ணமலையிலும்
सुदर्शनं	மிக்க அழகிய
सह्यं	ஸஹ்யமெனும்
पर्वतं च	பர்வதத்திலும்
सततं	எப்பொழுதும்
अध्यास्ते	வசித்துவருகிறானே,
यं	எவனை
शतसहस्राणां शतं त्रिंशत्	மூவாயிரம் லக்ஷம்
शूराः	சூரர்களும்
चण्डाः	கொடியவர்களும்
चण्डपराक्रमाः	மஹா பராக்ரமசாலிகளும்
हरिपुङ्गवाः च	வானரர்களில் சிறந்தவர்களுமான
वानराः	வானரர்கள்
परिवार्य	சூழ்ந்து
अनुगच्छन्ति	பின்பற்றி வருகின்றார் [களோ
एषः	இவன்
यूथपः	சேனைத்தலைவனுகிய
रम्भः	ரம்பன்
नाम	எனப் பெயர் பூண்டவன்.
एषः तु	இவனும்
ओजसा	ஆற்றலால்
लङ्कां	இலங்கையை
मर्दितुं एति	உருவழிக்க வந்து கொண்டிருக்கிறான்.

यस्तु कर्णौ विवृणुते जृम्भते च पुनः पुनः। न च संविजते मृत्योर्न च युद्धाद्विधावति ॥
प्रकम्पते च रोषेण तिर्यक् च पुनरीक्षते। पश्यंल्लाङ्गूलमपि च क्ष्वेलते च महाबलः ॥३८॥
महाजवो वीतभयो रम्यं साल्वेयपर्वतम्। राजन्सततमध्यास्ते शरभो नाम यूथपः ॥३९॥

राजन्	"அரசே!
महाबलः	மஹாபலசாலியும்
महाजवः	மஹாவேகசாலியும்
वीतभयः	பயத்தை ஒழித்தவ
यः	எவன் [னுமான
कर्णौ	காதுகளிரண்டையும்
विवृणुते	அகற்றிக்கொண்டி
	ருக்கிறானே,
पुनः पुनः	மீண்டும் மீண்டும்
जृम्भते च	துள்ளிக்குதிக்கின்
	றானே,
मृत्योः	எமனுக்கு
संविजते न च	பயப்படாதிருக்
	கிறானே,
युद्धात्	போரில் நின்று
विधावति न च	புறங்காட்டி ஓடாதிரு
	க்கிறானே,
रोषेण	கோபத்தால்
प्रकम्पते च	துடித்துக்கொண்
	டிருக்கிறானே,
पुनः च	மீண்டும் மீண்டும்
तिर्यक्	குறுக்காக
ईक्षते	பார்க்கிறானே,
लाङ्गूलं अपि	வாலையும்
पश्यन् च	பார்த்துக்கொண்டே
क्ष्वेलते च	சிங்காதம் செய்கி
	றானே,
सततं	எப்பொழுதும்
रम्यं	அழகிய
साल्वेयपर्वतं	சால்வேயபர்வதத்தில்
अध्यास्ते तु	வசிக்கிறானே,
	இவன் தான்
शरभः नाम	சரபனென்ற
यूथपः	சேனைத் தலைவன்.

एतस्य बलिनः सर्वे विहारा नाम यूथपाः। राजञ्च्छतसहस्राणि चत्वारिंशत्तथैव च ॥

राजन्	"ராஜன்!
तथा एव	அவ்வண்ணமே
एतस्य	இவனது
यूथपाः	சேனைத்தலைவர்கள்
सर्वे च	எல்லோருமே
बलिनः	மகாபலசாலிகள்.
चत्वारिंशत् शतसहस्राणि	நாற்பது லக்ஷம்
विहाराः नाम	விஹாரர்கள் என்ற
	பெயர் பூண்டவர்கள்.

यस्तु मेघ इवाकाशं महानावृत्य तिष्ठति। मध्ये वानरवीराणां सुराणामिव वासवः ॥४१॥
भेरीणामिव सन्नादो यस्यैष श्रूयते महान्। घोषः शाखामृगेन्द्राणां संग्राममभिकाङ्क्षताम् ॥
एष पर्वतमध्यास्ते पारियात्रमनुत्तमम्। युद्धे दुष्प्रसहो नित्यं पनसो नाम यूथपः ॥४३॥

यः	"எவன்
सुराणां	தேவர்களுக்குள்
वासवः इव	இந்திரன்போலவே,
वानरवीराणां	வானரவீர்களின்
मध्ये	நடுவில்
महान् मेघः	பெரும் மேகம்
आकाशं इव	ஆகாசத்தை எவ்வண் ணமோ அவ்வண்ண மே
आवृत्य	மறைத்துக்கொண்டு
तिष्ठति	நிற்கிறானே,
यस्य	எவனைச்சேர்ந்த

संग्रामं	போருக்கு
अभिकांक्षतां	காத்துநிற்கும்
शाखामृगेन्द्राणां	வானரோத்தமர்க ளுடைய
महान् घोषः	பெரும்கோஷமானது
भेरीणां	பேரிவாத்தியங்களின்
संनादः इव	பேரொலிபோன்ற தாய்
श्रूयते	கேட்கப்படுகிறதோ,
अनुत्तमं	(எவன்) சிறந்த
पारियात्रं	பாரியாத்ரமென்ற
पर्वतं	பர்வதத்தில்
अध्यास्ते	வசிக்கின்றானே,
एषः तु	இவன்தான்
पनसः नाम	பனஸன் என்ற
यूथपः	சேனைத்தலைவன்.
एषः	இவன்
नित्यं	எப்பொழுதும்
युद्धे	போரில்
दुष्प्रसहः	அசஹ்யமானவன்.

एनं शतसहस्राणां शतार्धं पर्युपासते । यूथपा यूथपश्रेष्ठं येषां यूथानि भागशः ॥ ४४ ॥

येषां	"எவைகளின்
यूथानि	சமூகங்கள்
भागशः	அணிவகுக்கப்பட்ட படியே
शतसहस्राणां शतार्धं	ஐம்பதுலக்ஷம்
यूथपाः	சேனைத்தலைவர்களோ அவர்கள்,
यूथपश्रेष्ठं	சேனைத்தலைவர்களி லுத்தமனை
एनं	இவனிடம்
पर्युपासते	காத்துநிற்கின்றார் கள்.

यस्तु भीमां प्रवल्गन्तीं चमूं तिष्ठति शोभयन् । स्थितां तीरे समुद्रस्य द्वितीय इव सागरः॥
एष दर्दरसंकाशो विनतो नाम यूथपः । पिबंश्चरति पर्णासां नदीनामुत्तमां नदीम् ॥४६॥

दर्दरसङ्काशः	"தர்தரமலையை நிகர்த்தவனும்
द्वितीयः	இரண்டாவது
सागरः	சமுத்திரம்
इव	போன்றவனுமான
यः	எவன்
समुद्रस्य	சமுத்திரத்தினது
तीरे	கரையில்
स्थितां	தங்கியிருக்கிறதும்
भीमां	பயங்கரமானதும்
प्रवल्गन्तीं	குதித்துக்கொண்டி ருக்கிறதுமான
चमूं	சேனையை
शोभयन्	விளங்கச்செய்துகொ
तिष्ठति	இருக்கிறானே, [ண்டு
नदीनां	நதிகளுள்
उत्तमां	சிறந்த
पर्णासां	பர்ணஸம் என்ற
नदीं	நதிதீர்த்தத்தை
पिबन्	குடித்துக்கொண்டு
चरति	வசித்துவருகிறானே,
एषः तु	இவன்தான்
विनतः नाम	வினதன் என்ற
यूथपः	சேனைத்தலைவன்.

षष्टिः शतसहस्राणि बलमस्य प्लवङ्गमाः ॥ ४७ ॥

अस्य	"இவனுக்கு
बलं	சேனை,
षष्टिः शतसहस्राणि	அறுபது லக்ஷம்
प्लवङ्गमाः	வானரர்களாலானது.

त्वामाह्वयति युद्धाय क्रोधनो नाम यूथपः । विक्रान्ता बलवन्तश्च यथायूथानि भागशः ॥

यथायूथानि	"கூட்டங்கூட்டமாய்	क्रोधनः नाम	க்ரோதனனென்ற
भागशः च	அணிவகுக்கப்பட்டி	यूथपः	சேனைத்தலைவன்
	ருக்கின்றன.	त्वां	தேவரீரை
बलवन्तः	மகா ஆற்றலுடைய	युद्धाय	போருக்கு
	வர்கள்.	आह्वयति	அறைகூவுகிறான்.
विक्रान्ताः	மகா ஆண்மையுடை		
	யவர்கள்.		

यस्तु गैरिकवर्णाभं वपुः पुष्यति वानरः । अवमत्य सदा सर्वान्वानरान्बलदर्पितान् ॥४९॥
गवयो नाम तेजस्वी त्वां क्रोधादभिवर्तते । एनं शतसहस्राणि सप्ततिः पर्युपासते ॥५०॥

यः	"எந்த	पुष्यति तु	வளரச்செய்துகொண்
तेजस्वी	ஆற்றலுடைய		டிருக்கிறானே,
वानरः	வானரன்	गवयः नाम	(அவன்தான்) கவயன் என்ற பெயர்பூண்ட தவன்.
बलदर्पितान्	பலத்தால் செருக்		
वानरान्	வானரர்கள் [குற்ற		
सर्वान्	எல்லோரையும்	एनं	இவனை
सदा	எப்பொழுதும்	सप्ततिः	எழுபது
अवमत्य	ஏளனஞ்செய்து	शतसहस्राणि	லக்ஷத்தவர்கள்
	கொண்டு	पर्युपासते	சேவிக்கின்றார்கள்.
गैरिकवर्णाभं	காவிக்கல்போன்ற	त्वां	தேவரீரை
	காந்தியுடைய	क्रोधात्	கோபத்தால்
वपुः	உடலை	अभिवर्तते	அணுகியிருக்கிறான்.

एष त्वाशङ्कते लङ्कां स्वेनानीकेन मर्दितुम् ॥ ५१ ॥

एषः	"இவன்	मर्दितुं	உருவழிக்க
स्वेन	தனது	आशङ्कते	உத்தேசம்கொண்டி
अनीकेन तु	சேனையைக்கொண்டே		ருக்கிறான்.
लङ्कां	இலங்கையை		

शतं शतसहस्राणि शतकोटिशतानि च । हरीणां यूथपाः सन्ति बलिनां च महौजसाम् ॥

बलिनां च	"மிக சக்தியுடைய	शतं	நூற்றுக்கணக்காக
	வர்களும்		வும்,
महौजसां	மிக ஆற்றலுடையவர்	शतसहस्राणि	லக்ஷக்கணக்காகவும்,
	களுமான	शतकोटिशतानि च	பதினாயிரங்கோடிக்
हरीणां	வானரர்களின்		கணக்காகவும்
यूथपाः	சேனைத்தலைவர்கள்,	सन्ति	இருக்கின்றார்கள்.

एते दुष्प्रसहा घोरा बलिनः कामरूपिणः । यूथपा यूथपश्रेष्ठा एषां यूथानि भागशः ॥

एते	"இந்த	**बलिनः**	மகா ஆற்றலுடைய வர்கள் ;
यूथपाः	சேனைத்தலைவர்கள்	**कामरूपिणः**	நினைத்த உருவமெ டுக்க வல்லவர்கள்.
यूथपश्रेष्ठाः	சேனைத்தலைவர்களில் உத்தமர்கள் ;	**एषां**	இவர்களுடைய
दुष्प्रसहाः	போரில் அணுகமுடி யாதவர்கள் ;	**यूथानि**	சேனைகள்
घोराः	கொடிய வல்லமை யுடையவர்கள் ;	**भागशः**	அணியணியாக நிற்கின்றன."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे षड्विंशः सर्गः ॥

आदितः श्लोकाः 15652 **युद्धकाण्डे आदितः श्लोकाः 977**

सप्तविंशः सर्गः—இருபத்தியேழாவது ஸர்க்கம். ॥ २७ ॥

वानरपराक्रमादिकथनम्—வானரர்களது பராக்கிரமம் முதலியவற்றைச் சொல்வது.

तांस्तु तेऽहं प्रवक्ष्यामि प्रेक्षमाणस्य यूथपान् । राघवार्थे पराक्रान्ता ये न रक्षन्ति जीवितम् ॥

राघवार्थे	"ராமகைங்கர்யத்தில்	**तान्**	அந்த
पराक्रान्ताः	திடங்கொண்டவர்க ளாய்	**यूथपान् तु**	சேனைத்தலைவர்களை யும்
ये	எவர்கள்	**प्रेक्षमाणस्य**	பார்த்துக்கொண்டி-
जीवितं	உயிரை	**ते**	தேவரீருக்கு [ருக்கும்
रक्षन्ति न	பொருட்படுத்தாதி ருக்கின்றார்களோ,	**अहं**	நான்
		प्रवक्ष्यामि	சொல்லுவேன்.

स्निग्धा यस्य बहुव्यामा वाला लाङ्गूलमाश्रिताः ।
ताम्राः पीताः सिताः श्वेताः प्रकीर्णा घोरकर्मणः ॥ २ ॥
प्रगृहीताः प्रकाशन्ते सूर्यस्येव मरीचयः । पृथिव्यां चानुकृष्यन्ते तारो नामैष यूथपः ॥
यं पृष्ठतोऽनुगच्छन्ति शतशोऽथ सहस्रशः । द्रुमानुद्यम्य सहसा लङ्कारोहणतत्पराः ॥
यूथपा हरिराजस्य किङ्कराः समुपस्थिताः ॥ ४ ॥

घोरकर्मणः	"கொடுந்தொழிலை	**ताम्राः**	சிவந்தும்
यस्य	எவனுடைய [யுடைய	**पीताः**	மஞ்சள்நிறமுற்றும்
लांगूलमाश्रिताः	வாலிலிருக்கின்ற	**श्वेताः**	வெளுத்தும்
वालाः	மயிர்கள்	**सिताः**	சுருண்டும்
स्निग्धाः	மழமழவென்றும்,	**प्रकीर्णाः**	அடர்ந்துமிருக்கின்ற னவோ,
बहुव्यामाः	பலமார்பளவுள்ள வைகளாகவும்,		

सूर्यस्य	சூரியபகவான து
प्रगृहीताः	பரப்பப்பட்ட
मरीचयः इव	கிரணங்கள்போலவே
प्रकाशन्ते	விளங்குகின்றனவோ,
पृथिव्यां	பூமியில்
अनुकृष्यन्ते च	இழுபடுகின்றனவோ,
यं	எவனை
हरिराजस्य	வானரமன்னன து
किङ्कराः	கிங்கரர்களென்ற
यूथपाः	சேனைத்தலைவர்கள்
शतशः	நூற்றுக்கணக்காகவும்
सहस्रशः	ஆயிரக்கணக்காகவும்
सहसा	லக்ஷ்யமின்றி
द्रुमान्	விருக்ஷங்களை
उद्यम्य	எடுத்துக்கொண்டு
लङ्कारोहण-तत्पराः	இலங்கையின்மீது ஏறுவதொன்றிலே யே மனங்களை நாட்டியவர்களாய்
समुपस्थिताः	சித்தமாயிருந்து கொண்டு
पृष्ठतः	பின்
अनुगच्छन्ति	பற்றி வருகின்றார்
एषः अथ	இவன்தான் [களோ,
तारः नाम	தாரன் என்ற
यूथपः	சேனைத்தலைவன்.

नीलानिव महामेघांस्तिष्ठतो यांस्तु पश्यसि। असिताञ्जनसङ्काशान्युद्धे सत्यपराक्रमान्॥
असंख्येयाननिर्देश्यान्परं पारमिवोदधेः। नखदंष्ट्रायुधान वीरांस्तीक्ष्णकोपान् भयावहान्॥
पर्वतेषु च ये केचिद्विषमेषु नदीषु च। एते त्वामभिवर्तन्ते राजन्नृक्षाः सुदारुणाः॥ ७॥

राजन्	"ஆசே!
महामेघान् इव	நீருண்ட மேகங்கள் போல
नीलान्	கறுத்தநிறமுடைய வர்களும்,
असिताञ्जन-सङ्काशान्	கறுத்த மையை நிகர்த்தவர்களும்,
युद्धे	போரில்
सत्यपराक्रमान्	சலியாப்பராக்ரமம் கொண்டு
तिष्ठतः	நிற்கின்றவர்களும்,
उदधेः	சமுத்திரத்தின்
परं पारं इव	அக்கரையைப் போலவே
अनिर्देश्यान्	காணமுடியாதவர்க ளும்,
असंख्येयान्	கணக்கிடமுடியா தவர்களும்,
नखदंष्ट्रायुधान्	நகங்களையும் பற்களை யும் ஆயுதமாயுடை யவர்களும்,
वीरान्	வீரர்களும்
तीक्ष्णकोपान्	கடுங்கோபங்கொண்ட வர்களும்,
भयावहान् च	பயத்தைத் தருகின்ற வர்களுமான
यान् तु	எவர்களையே
पश्यसि	தேவீர் பார்க்கின் றீரோ,
पर्वतेषु	பர்வதங்களிலும்,
विषमेषु	பள்ளத்தாக்குகளி லும்,
नदीषु	நதிகளிலும்,
ये केचित् च	எவர்கள் சிலருண் டோ,
एते	இந்த
सुदारुणाः	மிகக்கொடிய
ऋक्षाः	கரடிகள்
त्वां अभिवर्तन्ते	தேவீரை எதிர்த்து வருகின்றார்கள்.

एषां मध्ये स्थितो राजन्भीमाक्षो भीमदर्शनः। पर्जन्य इव जीमूतैः समन्तात्परिवारितः ॥
ऋक्षवन्तं गिरिश्रेष्ठमध्यास्ते नर्मदां पिबन्। सर्वर्क्षाणामधिपतिर्धूम्रो नामैष यूथपः ॥ ९ ॥

राजन्	"அரசே!	एषः	இவன்
पर्जन्यः	மழைக்கடவுள்	यूथपः	சேனைத்தலைவனுகிய
जीमूतैः	மேகங்களால்	धूम्रः नाम	தூம்மிரனென்ற பெயர் பூனைந்தவன்.
समन्तात्	நாற்புறமும்	सर्वर्क्षाणां अधिपतिः	கரடிகளெல்லோருக்கும் அதிபதி.
परिवारितः इव	சூழப்பட்டிருப்பது போல்,	नर्मदां पिबन्	நர்மதாநதியின் தீர்த்தத்தை குடித்துக் கொண்டு
एषां मध्ये	இவர்களுடையநடுவில்	ऋक्षवन्तं	ரிக்ஷவான் என்ற
भीमाक्षः	பயங்கரமான கண்களுடையவனுய்	गिरिश्रेष्ठं	சிறந்த மலையில்
भीमदर्शनः	பயங்கரமான தோற்றமுடையவனுய்	अध्यास्ते	வசித்துவருகிறுன்.
स्थितः	நின்றுகொண்டிருக்கின்ற		

यवीयानस्य तु भ्राता पश्यैनं पर्वतोपमम्। भ्रात्रा समानो रूपेण विशिष्टस्तु पराक्रमैः ॥

अस्य	"இவனுக்கு	पराक्रमैः तु	பராக்கிரமங்களிலோ
यवीयान् भ्राता	இளைய தம்பி	विशिष्टः	அவனினும் மேம்பட்டவன்.
रूपेण तु	உருவத்திலல்மட்டும்	पर्वतोपमं	பர்வதத்தை நிகர்த்த
भ्रात्रा समानः	சஹோதரனுக் கொப்பானவன்.	एनं	இவனை (தேவரீர்)
		पश्य	பார்ப்பீராக.

स एष जाम्बवान्नाम महायूथपयूथपः। प्रशान्तो गुरुवर्ती च संप्रहारेष्वमर्षणः ॥ ११ ॥

सः एषः च	"இந்த இவனை	गुरुवर्ती	ஆசானிடம் அமைந்தொழுகுபவன்.
जाम्बवान् नाम	ஜாம்பவான் என்ற	संप्रहारेषु	போர்களில்
महायूथपयूथपः	சேனைத்தலைவர்களில் தலைமைத்தலைவன்.	अमर्षणः	வெல்லற்கரியன்.
प्रशान्तः	மாசற்ற மனத்தினன்.		

एतेन साह्यं सुमहत्कृतं शक्रस्य धीमता। दैवासुरे जाम्बवता लब्धाश्च बहवो वराः ॥१२॥

धीमता	"புத்திமானுகிய	सुमहत् साह्यं	பேருதவி
एतेन	இந்த	कृतं	புரியப்பட்டது.
जाम्बवता	ஜாம்பவானுல்	च	அக்காரணத்தால்
दैवासुरे	தேவாசுரயுத்தத்தில்	बहवः वराः	பல வரங்களும்
शक्रस्य	இந்திரனுக்கு	लब्धाः	அடையப்பட்டன.

आरुह्य पर्वताग्रेभ्यो महाभ्रविपुलाः शिलाः। मुञ्चन्ति विपुलाकारा न मृत्योरुद्विजन्ति च॥
राक्षसानां च सदृशाः पिशाचानां च लोमशाः। एतस्य सैन्या बहवो विचरन्त्यग्नितेजसः॥

एतस्य	"இவனது
विपुलाकाराः	பெருமுடலுடை யவர்களும்
अग्नितेजसः	அக்னிஒளியுடையவர்
बहवः	பல [களுமான
सैन्याः	சேனைகள்
विचरन्ति	திரிந்துகொண்டிருக் கின்றார்கள்.
लोमशाः	மயிரடர்ந்த இவர்கள்
राक्षसानां च	அரக்கர்களுக்கும்
पिशाचानां च	பிசாசர்களுக்கும்
सदृशाः	ஒப்பானவர்களாய்
मृत्योः	எமனுக்கும்
उद्विजन्ति न	அஞ்சாதிருக்கின்றார்
आरुह्य	ஏறி [கள்.
पर्वताग्रेभ्यः	மலைகளின் உச்சிகளி னின்று
महाभ्रविपुलाः	மகா மேகங்கள்போல்
शिलाः	மலைகளை [பெருத்த
मुञ्चन्ति च	வீசியும் எறிகின்றார் கள்.

यं त्वेनमभिसंरब्धं प्लवमानमिव स्थितम्। प्रेक्षन्ते वानराः सर्वे स्थिता यूथपयूथपम्॥१५॥
एष राजन्सहस्राक्षं पर्युपास्ते हरीश्वरः। बलेन बलसंपन्नो दम्भो नामैष यूथपः ॥ १६ ॥

राजन्	"மன்னா!
यं	எந்த
अभिसंरब्धं	மிகச் சினங்கொண்டு
प्लवमानं इव	துள்ளிக்குதிக்கின்ற வனைவே
स्थितं	இருக்கின்றவனும்
यूथपयूथपं	சேனைத்தலைவர்களுக் குத் தலைவனுமான
एनं	இவனை
स्थिताः	அங்கிருக்கும்
वानराः	வானரர்கள்
सर्वे	எல்லோரும்
प्रेक्षन्ते	பார்த்துக்கொண்டி
एषः	இந்த[ருக்கிறார்களோ,
यूथपः तु	சேனைத்தலைவன்தான்
दंभः नाम	தம்பனெனப் பெயர்
एषः	இந்த [கொண்டவன்.
बलसम्पन्नः	பரிபூர்ணபலசாலியா
हरीश्वरः	வானரோத்தமன் [ன
बलेन	தனது பலத்தால்
सहस्राक्षं	இந்திரனை
पर्युपास्ते	ஆச்ரயித்திருக்கிறான்.

यः स्थितं योजने शैलं गच्छन्पार्श्वेन सेवते। ऊर्ध्वं तथैव कायेन गतः प्राप्नोति योजनम्॥
यस्मान्न परमं रूपं चतुष्पादेषु विद्यते। श्रुतः सन्नादनो नाम वानराणां पितामहः ॥९८॥

यः	"எவன்
योजने स्थितं	ஒரு யோஜனை தூரத்
शैलं	மலைக்கு [திலிருக்கும்
गच्छन्	ஒரு அடி வைத்தவ
पार्श्वेन	பக்கலில் [னை
सेवते	இருக்கிறானே,
तथा एव	அப்படியே
कायेन	உடலைக்கொண்டு
ऊर्ध्वं गतः	உயரே நிற்கின்றவனை
योजनं	ஒரு யோஜனை அளவு
प्राप्नोति	அடைகிறானே,
यस्मात्	எவனிடத
परमं रूपं	பெரியதான வடிவம்
चतुष्पादेषु	விலங்குகளில்
विद्यते न	கிடையாதோ, அவன்
वानराणां	வானரர்களுக்கு
पितामहः	பாட்டனை
श्रुतः	பிரசித்தியுற்ற
सन्नादनः	சன்னதனென
नाम	பெயர்கொண்டவன்.

येन युद्धं पुरा दत्तं रणे शक्रस्य धीमता। पराजयश्च न प्राप्तः सोऽयं यूथपयूथपः ॥१९॥

पुरा	மூன்காலத்தில்
धीमता	"புத்திமானுகிய
येन	எவனுல்
शक्रस्य	இந்திரனது
रणे	போரில்
युद्धं दत्तं	போர் செய்யப்பட்ட தோ,
पराजयः च	தோல்வியும்
प्राप्तः न	அடையப்படவில்லை யோ,
सः यूथपयूथपः	அப்படிப்பட்ட சே னைத்தலைத்தலைவன்
अयम्	இவன்.

यस्य विक्रममाणस्य शक्रस्येव पराक्रमः। एष गन्धर्वकन्यायामुत्पन्नः कृष्णवर्त्मनः ॥२०॥
तदा दैवासुरे युद्धे साह्यार्थं त्रिदिवौकसाम् ॥ २१ ॥

तदा	"அப்பொழுது
दैवासुरे	தேவர்களுக்கும் அசு ரர்களுக்கும் நடந்த
युद्धे	போரில்
विक्रममाणस्य	பராக்கிரமத்தை காட் டிக்கொண்டிருக்கிற
यस्य	எவனது
पराक्रमः	பராக்கிரமமானது
शक्रस्य इव	இந்திரனுக்கு சமான மாயிருந்ததோ அந்த
एषः	இவன்
त्रिदिवौकसां	தேவர்களுக்கு
साह्यार्थं	உதவிபுரிவதற்காக
कृष्णवर्त्मनः	கிருஷ்ணவர்த்ம னென்பவனுக்கு
गन्धर्वकन्यायां	கந்தர்வஸ்த்ரீயினிடம்
उत्पन्नः	உண்டானவன்.

यस्य वैश्रवणो राजा जम्बूमुपनिषेवते। यो राजा पर्वतेन्द्राणां बहुकिन्नरसेविनाम् ॥२२॥
विहारसुखदो नित्यं भ्रातुस्ते राक्षसाधिप। तत्रैष वसति श्रीमान्बलवान्वानरर्षभः ॥२३॥
युद्धेष्वकत्थनो नित्यं क्रथनो नाम यूथपः। वृतः कोटिसहस्रेण हरीणां समुपस्थितः ॥

राक्षसाधिप	"ராக்ஷஸமன்ன!
यस्य	எவ்விடத்திலிருக்கும்
जम्बूं	நாவல்விருக்ஷத்தை
वैश्रवणः राजा	குபேரமன்னர்
उपनिषेवते	சேவிக்கிறாரோ,
यः	எது
बहुकिन्नरसेविनां	பல கின்னரர்களால் வசிக்கப்பெற்ற
पर्वतेन्द्राणां	சிறந்த பர்வதங்க
राजा	அரசனே, [ளுக்கு
ते	(எது) தேவரீரது
भ्रातुः	தமயனுருக்கு
नित्यं	எக்காலத்திலும்
विहारसुखदः	உல்லாசமாய் காலங்க ழிக்கிற சுகத்தைத் தருகிறதோ,
तत्र	இவ்விடத்தில்
एषः	இந்த
क्रथनः नाम	க்ரதனனென்ற பெ யர் புனைந்தவன்
वसति	வசிக்கிறான்.
श्रीमान्	மிகப்பிரசித்திபெற்ற
बलवान्	மிக்க பலசாலி. [வன்;
वानरर्षभः	வானரர்களிலுத்தமன்.
यूथपः	சேனைத்தலைவன்.
नित्यं	எக்காலத்திலும்
युद्धेषु	போர்களில்
अकत्थनः	தற்புகழ்ச்சி செய்யா தவன்.
हरीणां	வானரர்களுடைய
कोटिसहस्रेण	ஆயிரம் கோடியால்
वृतः	சூழப்பட்டவனுய்
समुपस्थितः	(போருக்குத்தயாராய்) வந்திருக்கிறான்.

यो गङ्गामनु पर्येति त्रासयन्हस्तियूथपान् । हस्तिनां वानराणां च पूर्ववैरमनुस्मरन् ॥२५॥
एष यूथपतिर्नेता गच्छन्गिरिगुहाशयः । गजान्योधयते वन्यान्गिरींश्चैव महीरुहान् ॥२६॥
हरीणां वाहिनीमुख्यो नदीं हैमवतीमनु । उशीरबीजमाश्रित्य पर्वतं मन्दरोपमम् ॥
रमते वानरश्रेष्ठो दिवि शक्र इव स्वयम् ॥ २७ ॥
एनं शतसहस्राणां सहस्रमनुवर्तते । वीर्यविक्रमदृप्तानां नर्दतां बलशालिनाम् ॥ २८ ॥
स एष नेता चैतेषां वानराणां महात्मनाम् ॥ २९ ॥
स एष दुर्धरो राजन्प्रमाथी नाम यूथपः । वातेनेवोद्धतं मेघं यमेनमनुपश्यसि ॥ ३० ॥
अनीकमपि संरब्धं वानराणां तरस्विनाम् । उद्धूतमरुणाभासं पवनेन समन्ततः ॥
विवर्तमानं बहुधा यत्रैतद्बहुलं रजः ॥ ३१ ॥

राजन्	"அரசே!
यः	எவன்
हस्तिनां	யானைகளுக்கும்
वानराणां च	வானரர்களுக்கும்
पूर्ववैरं	முன்னுள்ள த்வேஷத்தை
अनुस्मरन्	பாராட்டி.
गङ्गां अनु	கங்காப்பிரதேசத்தில்
हस्तियूथपान्	யானைக்கூட்டங்களை
त्रासयन्	நடுக்கமுறச்செய்து கொண்டு
पर्येति	திரிந்துகொண்டிருக்கின்றானே,
वातेन	காற்றால்
उद्धतं	கிளப்பப்பட்ட
मेघं इव	மேகம்போன்ற
यं	எந்த
एनं	இவனையும்
तरस्विनां	மகா ஆற்றலுடைய
वानराणां	வானரர்களுடைய
उद्धूतं	கிளப்பப்பட்ட
एतत्	இந்த
बहुलं	அதிகமான
अरुणाभासं रजः	செம்புழுதியை
बहुधा	பலவாறாய்
समन्ततः	எங்கும்
पवनेन	காற்றோடு
विवर्तमानं	வாரித்துவுகிறதும்
संरब्धं	தருதருவென்றிருக்கிறதுமான
अनीकं अपि	சேனையையும்
यत्र	எவ்விடத்தில்
अनुपश्यसि	தேவீர் பார்க்கின்றீரோ,
सः	அந்த
एषः	இவன்
प्रमाथी नाम	பிரமாதி என்ற
यूथपः	வானரத்தலைவன்.
एनं	இவனை
बलशालिनां	பலசாலிகளும்
नर्दतां	அட்டஹாஸம் பண்ணும்
वीर्यविक्रमदृप्तानां	ஆற்றல், ஆண்மை இவைகளால் செருக்குற்றவர்களுடைய
शतसहस्राणां	லக்ஷத்தின்
सहस्रं	ஆயிரங்கள்
अनुवर्तते	அனுசரித்து நடக்கின்றார்கள்.
सः	அந்த
एषः च	இவன்தான்
एतेषां	இந்த
महात्मनां	அளவுகடந்த ஆற்றலுடைய
वानराणां	வானரர்களுக்கு
नेता	எஜமானன்.

दुर्धरः	எவராலும் அணுக முடியாதவன்.
यूथपतिः	சேனைகளுக்குத் தலைவன்.
नेता	அடக்கி ஆளுகிறவன்.
गिरिगुहाशयः	மலைகளின் குகைகளில் வசிப்பவன்.
हरीणां वाहिनीमुख्यः	வானரர்களுடைய சேனையில்ச் சிறந்தவன்.
वानरश्रेष्ठः	வானரர்களிலுத்தமன்.
एषः	இவன்
गच्छन्	நடந்துகொண்டே
वन्यान्	காட்டு
गजान् च	யானைகளையும்
गिरीन् एव	மலைகளையும்
महीरुहान्	விருக்ஷங்களையும்
योधयते	எதிர்த்துத் தாக்குகின்றான்.
हैमवतीं नदीं अनु	கங்காநதியைச் சார்ந்ததும்
मन्दरोपमं	மந்தரமலையை நிகர்த்ததுமான
उशीरबीजं	உசிரபீஜமென்னும்
पर्वतं	மலையை
आश्रित्य	அடைந்து
दिवि	தேவலோகத்தில்
स्वयं	ஸாக்ஷாத்
शक्रः	இந்திரன்
इव	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
रमते	காலங்கழிக்கிறான்.

एतेऽसितमुखा घोरा गोलाङ्गूला महाबलाः। शतं शतसहस्राणि दृष्ट्वा वै सेतुबन्धनम् ॥
गोलाङ्गूलं महावेगं गवाक्षं नाम यूथपम्। परिवार्याभिवर्तन्ते लङ्कां मर्दितुमोजसा॥ ३३ ॥

एते असितमुखाः	"இந்த கருப்புவர்ணமான முகமுடையவர்களும்
घोराः	பயங்கரமானவர்களும்
महाबलाः	மகாபலம் பொருந்
शतं शतसहस्राणि	[தியவர்களும் லக்ஷம்
गोलाङ्गूलाः	கோலாங்கூலமென்ற வானரர்கள்
सेतुबन्धनं दृष्ट्वा	சேதுபந்தனத்தை பார்த்து
महावेगं	மகாசக்தியுடையவனும்
यूथपं	சேனைத்தலைவனுமான
गोलाङ्गूलं	கோலாங்கூலவானரனாகிய
गवाक्षं नाम	கவாக்ஷனென்பவனை
परिवार्य	சூழ்ந்துகொண்டு
ओजसा	ஆற்றலால்
लङ्कां	இலங்கையை
मर्दितुं	உருவழிக்க
अभिवर्तन्ते वै	எதிர்த்து வருகின்றார்கள்.

भ्रमराचरिता यत्र सर्वकामफलद्रुमाः। यं सूर्यस्तुल्यवर्णाभमनु पर्येति पर्वतम् ॥ ३४ ॥
यस्य भासा सदा भान्ति तद्वर्णा मृगपक्षिणः। यस्य प्रस्थं महात्मानो न त्यजन्ति महर्षयः॥
सर्वकामफला वृक्षाः सदा फलसमन्विताः। मधूनि च महार्हाणि यस्मिन्पर्वतसत्तमे ॥३६॥
तत्रैष रमते राजन्रम्ये काञ्चनपर्वते। मुख्यो वानरमुख्यानां केसरी नाम यूथपः ॥ ३७ ॥

राजन्	"அரசனே!
यत्र	எதில்
भ्रमराचरिताः	வண்டினம் மொய்க்கும்
सर्वकाम-फलद्रुमाः	விரும்பிய பழங்கள் யாவற்றையுமளிக்கும் தருக்களிருக்
यं	எந்த [கின்றனவோ,
तुल्यवर्णाभं	தனக்கு நிகரான ஒளியுற்ற
पर्वतं	பர்வதத்திற்கு
सूर्यः	சூரியன்
अनु पर्येति	அருகில் செல்லுகின்
यस्य	எதனுடைய [றனவோ,
भासा	காந்தியால்
मृगपक्षिणः	மிருகங்களும் பக்ஷிகளும்
तद्वर्णाः	அதன் நிறங்கொண்டவைகளாய்
सदा	எப்பொழுதும்
भान्ति	பிரகாசிக்கின்றனவோ,
यस्य	எதனது
प्रस्थं	தாழ்வரையை
महात्मानः	மஹாத்மாக்களான
महर्षयः	மஹாமுனிவர்கள்
त्यजन्ति न	விட்டகலாதிருக்கின்
यस्मिन्	எந்த [றனரோ,
पर्वतसत्तमे	உயர்மலையில்
सर्वकामफलाः	கோரிய யாவும் கொடுக்கவல்லதும்
सदा फल-समन्विताः	எக்காலத்தும் பழங்களையுடையவைகளு
वृक्षाः	மரங்களும் [மான
महार्हाणि	மிகச்சிறந்த
मधूनि च	தேனடைகளுமிருக்
तत्र	அந்த [கின்றனவோ,
रम्ये	மனதைக்கவரும்
काञ्चनपर्वते	காஞ்சனமலையில்
वानरमुख्यानां मुख्यः	வானரத்தலைமைத் தலைவனை
यूथपः	சேனாநாயகனுகிய
केसरी नाम	கேஸரி என்ற
एषः	இவன்
रमते	இன்பமாய் வசித்து வருகிறான்.

षष्टिर्गिरिसहस्राणां रम्याः काञ्चनपर्वताः । तेषां मध्ये गिरिवरस्त्वमिवानघ रक्षसाम् ॥

अनघ	"முறையுற்றவரே!
गिरिसहस्राणां षष्टिः	அறுபதினாயிரம்மலைத் தொடருற்ற
रम्याः	அழகிய
काञ्चनपर्वताः	காஞ்சனபர்வதங்கள் இருக்கின்றன.
रक्षसां	அரக்கர்களுக்குள்
त्वं	தேவரீர்
इव	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
तेषां	அவைகளின்
मध्ये	நடுவில்
गिरिवरः	மலையரசொன்றிருக்கிறது.

तत्रैते कपिलाः श्वेतास्ताम्रास्या मधुपिङ्गलाः । निवसन्त्युत्तमगिरौ तीक्ष्णदंष्ट्रा नखायुधाः॥

तव उत्तमगिरौ	"அந்த மலையரசில்
एते	இந்த
कपिलाः	கபிலநிறமுடையவர்களும்
श्वेताः	வெள்ளைநிறமுடையவர்களும்
ताम्रास्याः	சிவந்த வாயையுடையவர்களும்
मधुपिङ्गलाः	தேன்போன்ற பிங்கலநிறமுடையவர்களும்
तीक्ष्णदंष्ट्राः	கூரிய கோரைப்பற்களுடையவர்களும்
नखायुधाः	நகங்களை ஆயுதமாகவுடையவர்களும்
निवसन्ति	வசிக்கின்றார்கள்.

सिंहा इव चतुर्दंष्ट्रा व्याघ्रा इव दुरासदाः । सर्वे वैश्वानरसमा ज्वलिताशीविषोपमाः ॥

सर्वे	"எல்லோரும்
सिंहाः	சிங்கங்கள்
इव	போன்ற
चतुर्दंष्ट्राः	நான்கு கோரைப்பற்க ளுடையவர்கள்.
व्याघ्राः इव	வேங்கைகள்போலவே
दुरासदाः	அணுகமுடியாதவர் கள்.
वैश्वानरसमाः	அக்னிக்குச்சமானர் கள்.
ज्वलिता-शीविषोपमाः	சிறிவரும் சர்ப்பங்கள் போன்றவர்கள்.

सुदीर्घाश्चितलाङ्गूला मत्तमातङ्गसन्निभाः । महापर्वतसङ्काशा महाजीमूतनिस्वनाः ॥४१॥

सुदीर्घाञ्चित-लाङ्गूलाः	"மிக நீண்ட அழகிய வால்களையுடைய வர்கள்.
मत्तमातङ्ग-सन्निभाः	மதம்பிடித்த யானைக ளுக்கொப்பானவர் கள்.
महापर्वत-सङ्काशाः	பெரும் பர்வதங்களைப் போன்றவர்கள்.
महाजीमूत-निस्वनाः	பெரும் மேகங்களின் கர்ஜனையையுடைய வர்கள்.

वृत्तपिङ्गलरक्ताक्षा भीमभीमगतिस्वराः । मर्दयन्तीव ते सर्वे तस्थुर्लङ्कां समीक्ष्य ते ॥४२॥

वृत्तपिङ्गल-रक्ताक्षाः	"உருண்டு, பிங்கலவர் ணமாகவும், சிவப்பா கவுமிருக்கும் கண்க ளையுடையவர்கள்.
भीमभीम-गतिस्वराः	அதிபயங்கரமான செ யலும் குரலுமுடை
ते	அவர்கள் [யவர்கள்.
सर्वे	எல்லோரும்
ते	தேவரீரது
लङ्कां	இலங்கைநகரை
समीक्ष्य	பார்த்து
मर्दयन्ति इव	இப்பொழுதே அழிக் கின்றவர்கள்போலவே
तस्थुः	நிற்கின்றார்கள்.

एष चैषामधिपतिर्मध्ये तिष्ठति वीर्यवान् । ॥ ४३ ॥
जयार्थी नित्यमादित्यमुपतिष्ठति बुद्धिमान् ॥ ४४ ॥
नाम्ना पृथिव्यां विख्यातो राजञ्छतबलीति यः । एषैवाशंसते लङ्कां स्वेनानीकेन मर्दितुम् ॥

राजन्	"அரசே!
एषां	இவர்களின்
मध्ये	நடுவில்
अधिपतिः	நாயகனும்
यः	எவன்
तिष्ठति	நிற்கிறானே,
एषः च	இவன்தான்
शतबलीः इति	சதபலி என்ற
नाम्ना	பெயரால்
पृथिव्यां	உலகில்
विख्यातः	பிரசித்திபெற்றவன்.
वीर्यवान्	வீரியசாலி.
बुद्धिमान्	நுண்ணறிவானவன்.
नित्यं	எக்காலத்திலும்
जयार्थी	ஜயத்தைக்கோரியவ
आदित्यं	சூர்யபகவானை [னும்
उपतिष्ठति	உபாசிக்கிறான்.
एषः	இவன்
स्वेन	தனது
अनीकेन एव	சேனையைக்கொண்டே
लङ्कां	இலங்கையை
मर्दितुं	உருவழிக்க
आशंसते	உத்தேசங்கொண்டி ருக்கிறான்.

विक्रान्तो बलवाञ्छूरः पौरुषे स्वे व्यवस्थितः। रामप्रियार्थं प्राणानां दयां न कुरुते हरिः॥

विक्रान्तः	" மிக ஆண்மையுடை யவனும்	हरिः	வானரனுமாகிய இவன்
बलवान्	மிக ஆற்றலுடைய	रामप्रियार्थं	ராமனுக்கு நன்மை செய்யவேண்டி-
शूरः	சூரனும் [வனும்	प्राणानां	உயிரிலும்
स्वे	தனது	दयां	ஆசை
पौरुषे	பராக்கிரமத்தில்	न कुरुते	கொள்ளவில்லை.
व्यवस्थितः	மூற்றிலும் நம்பிக்கை யுடையவனும்		

गजो गवाक्षो गवयो नलो नीलश्च वानरः। एकैक एव यूथानां कोटिभिर्दशभिर्वृतः॥

गजः	" கஜனும்,	एकैकः एव	ஒவ்வொருவனும் தனித்தனியே
गवाक्षः	கவாக்ஷனும்	यूथानां	சேனைகளின்
गवयः	கவயனும்	दशभिः	பத்து
नलः	நளனும்	कोटिभिः	கோடிகளால்
वानरः	வானரனுகிய	वृतः	சூழப்பட்டிருக்கிறான்.
नीलः च	நீலனும்		

तथाऽन्ये वानरश्रेष्ठा विन्ध्यपर्वतवासिनः। न शक्यन्ते बहुत्वात्तु संख्यातुं लघुविक्रमाः॥

तथा	" அப்படியே	लघुविक्रमाः	ஓரிடத்திலிராது ஓடியவண்ணமே இருப்பவர்கள்.
अन्ये	மற்ற	बहुत्वात् तु	அதிகமாயிருப்ப
वानरश्रेष्ठाः	வானரோத்தமர்கள்	संख्यातुं	கணக்கிட [தாலும்
विन्ध्यपर्वतवासिनः	விந்தியமலையில் வசிப் பவர்கள்.	शक्यन्ते न	முடியாதவர்கள்.

सर्वे महाराज महाप्रभावाः सर्वे महाशैलनिकाशकायाः।
सर्वे समर्थाः पृथिवीं क्षणेन कर्तुं प्रविध्वस्तविकीर्णशैलाम् ॥ ४९ ॥

महाराज	" மகாராஜரே!	क्षणेन	ஒரு நொடிப்பொழு
सर्वे	எல்லோரும்	पृथिवीं	உலகை [தில்
महाप्रभावाः	மிக மகிமையுள்ளவர்	प्रविध्वस्त-विकीर्णशैलां	பொடியாக்கி இறைக் கப்பட்ட மலைகளையு டையதாய்
सर्वे	எல்லோருமே [கள்.		
महाशैल-निकाशकायाः	பெரும் மலையை நிகர்த் த உடலுற்றவர்கள்.	कर्तुं	செய்ய
सर्वे	எல்லோரும்	समर्थाः	வல்லவர்கள்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे सप्तविंशः सर्गः ॥

आदितः श्लोकाः 15701 युद्धकाण्डे आदितः श्लोकाः 1026

अष्टाविंशः सर्गः—இருபத்தெட்டாவது ஸர்க்கம். ॥ २८ ॥

वानरसङ्ख्याकथनम्—வானரர்களது கணக்கைச் சொல்வது.

सारणस्य वचः श्रुत्वा रावणं राक्षसाधिपम् । बलमादिश्य तत्सर्वं शुको वाक्यमथाब्रवीत् ॥

शुकः	சுகன்
सारणस्य	சாரணனுடைய
वचः	விண்ணப்பத்தை
श्रुत्वा	செவிகொடுத்துக் கேட்டுவிட்டு,
राक्षसाधिपं	ராக்ஷசமன்னனுகிய
रावणं	ராவணனுக்கு
तत्	அந்த
बलं	சேனை
सर्वं	எல்லாவற்றையும்
आदिश्य	விரலால் ஆட்டிக்காட்
वाक्यं	ஒரு மொழியை [டி
अथ	பின்வருமாறு
अब्रवीत	மொழிந்தான் :

स्थितान्पश्यसि यानेतान्मत्तानिव महाद्विपान् । न्यग्रोधानिव गाङ्गेयान्सालान्हैमवतानिव ॥
एते दुष्प्रसहा राजन्बलिनः कामरूपिणः । दैत्यदानवसङ्काशा युद्धे देवपराक्रमाः ॥ ३ ॥

राजन्	"அரசே!
यान्	எந்த
मत्तान्	கொழுத்த
महाद्विपान्	பெரும் யானைகளை
इव	போலிருப்பவர்களும்,
गाङ्गेयान्	கங்கைக் கரையில் மூளைத்துள்ள
न्यग्रोधान्	அத்திமரங்களை
इव	போலிருப்பவர்களும்
हैमवतान्	இமையமலையில் மூளைத்துள்ள
सालान् इव	ஆச்சாமரங்களைப் போலிருப்பவர்களும்
स्थितान्	கண்முன் நிற்கின்ற வர்களுமான
एतान्	இவர்களை
पश्यसि	பார்க்கின்றீரோ,
एते	இவர்கள்
दुष्प्रसहाः	எவராலும் வெல்ல முடியாதவர்கள் ;
बलिनः	மஹா பலசாலிகள் ;
कामरूपिणः	இஷ்டமான உருவம் கொள்ளும் வல்லமை உள்ளவர்கள் ;
दैत्यदानव-सङ्काशाः	(திதியின் புதல்வர்களான) தைத்தியர்களுக்கும் (தக்ஷரின் புதல்வியான தனுவுக்கும்காச்யபருக்கும் பிறந்த) தானவர்களுக்கும் சமமானவர்
युद्धे	போரில் [கள் ;
देवपराक्रमाः	தேவர்களுக்கொப்பான பராக்கிரமம் படைக்கப்பெற்றவர்கள்.

एषां कोटिसहस्राणि नव पञ्च च सप्त च । तथा शङ्खसहस्राणि तथा बृन्दशतानि च ॥

एषां	"இவர்களுடைய
नव पञ्च च सप्त च कोटिसहस्राणि	இருபத்தோராயிரம் கோடிக்கணக்குகளும்
तथा	அப்படியே
शङ्खसहस्राणि	ஆயிரம் சங்கக்கணக்
तथा	அப்படியே [குகளும்
बृन्दशतानि च	நூறு பிருந்தக்கணக்குகளும் இருக்கின்றார்கள்.

[இக்கணக்குகளின் அளவை வால்மீகிபகவானே இந்த ஸர்க்கத்தின் முடிவில் விளங்க அருளிச் செய்திருக்கிறார்.]

एते सुग्रीवसचिवाः किष्किन्धानिलयाः सदा । हरयो देवगन्धर्वैरुत्पन्नाः कामरूपिणः ॥

एते	இந்த
हरयः	வானரர்கள்
सदा	எப்பொழுதும்
किष्किन्धानिलयाः	கிஷ்கிந்தாவாசிகள்.
सुग्रीवसचिवाः	சுக்ரீவனுடைய மந்திரிகள்.
कामरूपिणः	நினைத்த உருவம் எடுக்க வல்லமர்கள்.
देवगन्धर्वैः	தேவர்களாலும் கந்தர் வர்களாலும்
उत्पन्नाः	சிருஷ்டிக்கப்பட் டவர்கள்.

यौ तौ पश्यसि तिष्ठन्तौ कुमारौ देवरूपिणौ । मैन्दश्च द्विविदश्चोभौ ताभ्यां नास्ति समो युधि॥

यौ	"எந்த
देवरूपिणौ	தேவ அழகுற்றவர்க ளாய்
कुमारौ	இளமைப்பருவத்திலி ருக்கின்றவர்களுமான
उभौ	இருவர்களை
तिष्ठन्तौ	எதிரில் நிற்கின்றவர் களாய்
पश्यसि	பார்க்கின்றீரோ,
तौ च	அவ்விருவர்கள்தான்
मैन्दः	மைந்தனென்பவனும்
द्विविदः च	துவிதனென்பவனும்.
युधि	போரில்
ताभ्यां	அவ்விருவர்களுக்கு
समः	சமானமாகிய
अस्ति न	ஒருவன் கிடையாது.

ब्रह्मणा समनुज्ञातावमृतप्राशिनावुभौ । आशंसेते युधा लङ्कामेतौ मर्दितुमोजसा ॥ ७ ॥

एतौ उभौ	"இவ்விருவர்களும்
ब्रह्मणा	பிரம்மதேவரால்
समनुज्ञातौ	அனுமதிக்கப்பட்டவர் களாய்
अमृतप्राशिनौ	அமிருதம் உண்டவர் கள்.
युधा	போரைக்கொண்டு
ओजसा	ஆற்றலால்
लङ्कां	இலங்கையை
मर्दितुं	உருவழிக்க
आशंसेते	உத்தேசங்கொண்டி ருக்கின்றனர்.

यं तु पश्यसि तिष्ठन्तं प्रभिन्नमिव कुञ्जरम् । यो बलात्क्षोभयेत्क्रुद्धः समुद्रमपि वानरः ॥
एषोऽभिगन्ता लङ्कायाः वैदेह्यास्तव च प्रभो । एनं पश्य पुरा दृष्टं वानरं पुनरागतम् ॥

यं	"எவனை
प्रभिन्नं	மதம் பிடித்த
कुञ्जरं	யானையை
इव	போலவே
तिष्ठन्तं	எதிரிலிருக்கின்ற வனை
पश्यसि	பார்க்கின்றீரோ,
क्रुद्धः	சினங்கொண்ட
यः वानरः	எந்த வானரன்
बलात्	சக்தியால்
समुद्रं अपि	சமுத்திரத்தையும்
क्षोभयेत्	கலக்கிவிடுவானே,
एषः तु	இவன்தான்
प्रभो	பிரபுவே!
लङ्कायाः	இலங்கையையும்
वैदेह्याः	வீதையையும்
तव च	தேவரீரையும்
अभिगन्ता	நேரில் கண்டறிந் தவன்.
पुरा	முன்னம்
दृष्टं	பார்க்கப்பட்ட
एनं	இந்த
वानरं	வானரனை
पुनः	திரும்பி
आगतं	வந்திருக்கிறவனைப்
पश्य	கவனிப்பீராக.

ज्येष्ठः केसरिणः पुत्रो वातात्मज इति श्रुतः। हनुमानिति विख्यातो लङ्घितो येन सागरः॥

केसरिणः	"கேஸரியின்
ज्येष्ठः पुत्रः	மூத்த புதல்வன்.
वातात्मजः	'வாயுபுதல்வன்'
इति	என்று
श्रुतः	பிரசித்திபெற்றவன்.
हनुमान्	'ஹனுமான்'
इति	என்று
विख्यातः	பெயர்கொண்டு ப்ரஸித்திபெற்றவன்.
येन	(எவனை) இவனுல்
सागरः	சமுத்திரமானது
लङ्घितः	தாண்டப்பட்டது.

कामरूपी हरिश्रेष्ठो बलरूपसमन्वितः। अनिवार्यगतिश्चैव यथा सततगः प्रभुः ॥ ११ ॥

कामरूपी	"நினைக்கும் உருவம் கொள்ள வல்லவன்.
हरिश्रेष्ठः	வானரர்களின் தலைவன்.
बलरूपसमन्वितः	ஆற்றலுமழகுமமைய ப்பெற்றவன்.
प्रभुः	பிரபுவாகிய
सततगः	வாயுபகவான்
यथा एव	போலவே
अनिवार्यगतिः च	எங்கும் தடைபடாத போக்குள்ளவன்.

उद्यन्तं भास्करं दृष्ट्वा बालः किल पिपासितः। त्रियोजनसहस्रं तु अध्वानमवतीर्य हि ॥
आदित्यमाहरिष्यामि न मे क्षुत्प्रतियास्यति। इति संचिन्त्य मनसा पुरैष बलदर्पितः ॥
अनाधृष्यतमं देवमपि देवर्षिदानवैः। अनासाद्यैव पतितो भास्करोदयने गिरौ ॥ १४ ॥

पुरा	"முன்னொருகால்
बालः	கைக்குழந்தையாயிருந்த
एषः	இவன்
पिपासितः	பால்பருக ஆசையுற்றவனுய்
बलदर्पितः	பலத்தால் செருக்குற்றவனுய்
उद्यन्तं	உதயமாகும்
भास्करं	சூர்யபகவானை
दृष्ट्वा	பார்த்து
आदित्यं	'சூரியனை
आहरिष्यामि	பறித்துவரப்போகிறேன்.
हि	அப்படியாகில்
मे	எனக்கு
क्षुत्	பசி
प्रतियास्यति न	இராது.'
इति	என்று
मनसा सञ्चिन्त्य	நினைத்து
त्रियोजनसहस्रं	மூவாயிரம் யோஜனை தூரம்
अध्वानं	வழியை
अवतीर्य तु	கடந்தும்
देवर्षिदानवैः अपि	தேவர்கள், ரிஷிகள், தானவர்கள் இவர்களாலுங்கூட
अनाधृष्यतमं	கிட்டமுடியாத
देवं	கடவுளை
अनासाद्य एव	அடையாமலே
भास्करोदयने	சூர்யபகவான் உதயமாகும்
गिरौ	மலையில்
पतितः	விழுந்துவிட்டான் என்று
किल	எனக்குச் சொல்லக் கேள்வி.

पतितस्य कपेरस्य हनुरेका शिलातले । किंचिद्भिन्ना दृढहनोर्हनुमानेष तेन वै ॥ १५ ॥

दृढहनोः	"உறுதியான கன்னங்	किञ्चित्	கொஞ்சம்
अस्य	இந்த [களையுடைய	भिन्ना	முறிந்தது.
कपेः	வானரன்	तेन वै	அதனல்தான்
शिलातले	மலைப்பிரதேசத்தில்	एषः	இவன்
पतितस्य	விழுந்தபொழுது	हनुमान्	ஹனுமானெனப்
एका हनुः	ஒரு கன்னம்		படுகிறன்.

सत्यमागमयोगेन ममैष विदितो हरिः । नास्य शक्यं बलं रूपं प्रभावो वापि भाषितुम् ॥

एषः	"இந்த	अस्य	இவனது
हरिः	வானரன்	बलं	பலந்தானுகட்டும்,
आगमयोगेन	முன்வந்த காரணத்	रूपं	பிறவிகுணந்தா
	தால்		னுகட்டும்
मम	எனக்கு	प्रभावः	பிரபாவம்தானுகட்டும்
सत्यं	உள்ளபடி	अपि वा	இதிலேதவும்
विदितः	எல்லாந்தெரிந்தவனு	भाषितुं	உள்ளபடி வர்ணிக்க
	யிருக்கிறன்.	न शक्यम्	முடியாது.

एष आशंसते लङ्कामेको मर्दितुमोजसा । येन जाज्वल्यतेऽसौ वै धूमकेतुस्तवाद्य वै ॥
लङ्कायां निहितश्चापि कथं विस्मरसे कपिम् ॥ १८ ॥

एषः	"இவன்	निहितः च	இடப்பட்டதாகிய
एकः	தான் ஒருவனுகவே	असौ	இந்த
ओजसा	ஆற்றலால்	धूमकेतुः वै	அக்னியும்
लङ्कां	இலங்கையை	अद्य अपि	இன்னும்
मर्दितुं	உருவழிக்க	जाज्वल्यते	எரிந்துகொண்டிருக்
आशंसते	உத்தேசங்கொண்டி		கிறதோ, அந்த
येन	எவனல் [ருக்கிறன்.	कपिं	குரங்கை
तव	தேவரீரது	कथं	எப்படி
लङ्कायां वै	இலங்கைநகரிலேயே	विस्मरसे	மறப்பிர் ?

यश्चैषोऽनन्तरः शूरः श्यामः पद्मनिभेक्षणः । इक्ष्वाकूणामतिरथो लोके विख्यातपौरुषः ॥
यस्मिन्न चलते धर्मो यो धर्मं नातिवर्तते । यो ब्राह्ममस्त्रं वेदांश्च वेद वेदविदां वरः ॥२०॥
यो भिन्द्याद्गगनं बाणैः पर्वतानपि दारयेत् । यस्य मृत्योरिव क्रोधः शक्रस्येव पराक्रमः ॥
यस्य भार्या जनस्थानात् सीता चापहृता त्वया । स एष रामस्त्वां योद्धुं राजन् समभिवर्तते॥

शूरः	சூரனும்	इक्ष्वाकूणां	இக்ஷ்வாகுவம்சத்
श्यामः	ச்யாமளநிறமுடை		தவர்களுள்
	யவனும்	अतिरथः	அதிரதனும்
पद्मनिभेक्षणः	தாமரையிதழுக்கொப் பான கண்களமைந் தவனும்	लोके	உலகில்
		विख्यातपौरुषः	பெயர்பெற்ற பராக்கி
			ரமமுள்ளவனுமான

यः	எவன்
अनन्तरः	பக்கலிலிருக்கிறானே,
यस्मिन्	எவனிடத்தில்
धर्मः	தர்மமானது
चलते न	தடுமாறுதிருக்கிறதோ,
यः	எவன்
धर्मं	தர்மத்தை
अतिवर्तते न	மீறுதிருக்கிறானே,
यः	எவன்
ब्राह्मं अस्त्रं	ப்ரம்மாஸ்திரத்தையும்
वेदान् च	மந்திரங்களையும்
वेद	கற்றுணர்ந்தவனே,
वेदविदां	வேதமறிந்தவர்களுள்
वरः	உத்தமனே,
यः	எவன்
बाणैः	பாணங்களால்
गगनं	ஆகாசத்தை
भिन्द्यात्	கிழித்துவிடுகிறானே,
पर्वतान् अपि	பர்வதங்களையும்
दारयेत्	பிளந்துவிடுகிறானே,
यस्य	எவனது
क्रोधः	கோபமானது
मृत्योः इव	யமனுடையதற்கு நிகரானதோ,
पराक्रमः	பராக்கிரமமானது
शक्रस्य	இந்திரனுடையதற்கு
इव	நிகரானதோ,
यस्य	எவருடைய
भार्या	தருமபத்னியாகிய
सीता	ஸீதை
जनस्थानात्	ஜனஸ்தானத்திலிருந்து
त्वया	தேவரீரால்
अपहृता	கவர்ந்துவரப்பட்டாளோ
सः	அந்த [ளோ,
एषः च	இவன்தான்
रामः	ராமன்.
राजन्	அரசே!
एषः	இவன்
त्वां	தேவரீருடன்
योद्धुं	போர்புரிய
समभिवर्तते	வந்திருக்கிறான்.

यस्यैष दक्षिणे पार्श्वे शुद्धजाम्बूनदप्रभः । विशालवक्षास्ताम्राक्षो नीलकुञ्चितमूर्धजः ॥

यस्य	"(எந்த) இவனது
दक्षिणे	வலது
पार्श्वे	பக்கலிலிருக்கும்
एषः	இவன்
शुद्धजाम्बूनदप्रभः	பத்தரைமாற்றுத்தங்க ஒளிகொண்டவன்.
विशालवक्षाः	அகன்ற மார்புடையவன்.
ताम्राक्षः	சிவந்த கண்களுற்றவன்.
नीलकुञ्चितमूर्धजः	கறுத்துசுருண்ட தலைமயிருடையவன்.

एषोऽस्य लक्ष्मणो नाम भ्राता प्राणसमः प्रियः । नये युद्धे च कुशलः सर्वशास्त्रविशारदः ॥

लक्ष्मणः नाम	"லக்ஷ்மணன் எனப்பெயர்பூண்டவன்.
एषः	இவன்
अस्य	இவனுக்கு (ராமனுக்கு)
भ्राता	தம்பி.
प्राणसमः	உயிருக்கு நிகரானவன்.
प्रियः	எக்காலத்தும் மனங்கோணுதுநடப்பவன்.
नये	நீதிசாஸ்திரத்திலும்
युद्धे च	போரிலும்
कुशलः	நிபுணன்.
सर्वशास्त्र-विशारदः	சாஸ்திரங்களெல்லாவற்றையும் நன்கு அறிந்தவன்.

अमर्षी दुर्जयो जेता विक्रान्तो बुद्धिमान् बली । रामस्य दक्षिणो बाहुर्नित्यं प्राणो बहिश्चरः॥

अमर्षी	"அபராதிகளை அடியோடொழிப்பவன்.	बुद्धिमान्	நுண்ணறிவாளன்.
दुर्जयः	எவனும் வெல்ல முடியாதவன்.	बली	மகா அற்றலுடையவன்.
जेता	எவனையும் வெல்பவன்.	नित्यं	எக்காலத்திலும்
विक्रान्तः	மகா ஆண்மையுடையவன்.	रामस्य	ராமனது
		दक्षिणः बाहुः	வலதுகை
		बहिश्चरः	வெளியில் சஞ்சரிக்கும்
		प्राणः	உயிர்.

न ह्येष राघवस्यार्थे जीवितं परिरक्षति ॥ २६ ॥

एषः	"இவன்	जीवितं हि	உயிரையும்
राघवस्यार्थे	ராமனுக்காக	परिरक्षति न	மதியான்.

एषैवाशंसते युद्धे निहन्तुं सर्वराक्षसान् ॥ २७ ॥

एषः एव	"இவனே	सर्वराक्षसान्	அரக்கர் யாவரையும்
युद्धे	போரில்	निहन्तुं	மாய்க்க
		आशंसते	நினைக்கிறான்.

यस्तु सव्यमसौ पक्षं रामस्याश्रित्य तिष्ठति । रक्षोगणपरिक्षिप्तो राजा ह्येष विभीषणः ॥

यः	"எவன்	रक्षोगणपरिक्षिप्तः	ராக்ஷஸகணங்களால் கைவிடப்பட்டவன்.
रामस्य	ராமரை		
आश्रित्य	கிட்டி	एषः	இந்த
सव्यं पक्षं	இடதுபக்கலில்	विभीषणः	விபீஷணன்
तिष्ठति तु	இருக்கின்றானே	राजा हि	மன்னனுமாயிருக்கிறான்.
असौ	இவன்		

श्रीमता राजराजेन लङ्कायामभिषेचितः । त्वामेव प्रतिसंरब्धो युद्धायैषोऽभिवर्तते ॥२९॥

श्रीमता	"ஸ்ரீமானுகிய	एषः एव	இவனும்
राजराजेन	சக்கிரவர்த்தியால்	प्रतिसंरब्धः	மிகச்சினங்கொண்ட
लङ्कायां	இலங்கைநிமித்தமாய்	त्वां	உம்மிடம் [வனய்
अभिषेचितः	பட்டாபிஷேகம் பண்ணப்பட்டான்.	युद्धाय	போர்புரிய
		अभिवर्तते	வந்திருக்கிறான்.

यं तु पश्यसि तिष्ठन्तं मध्ये गिरिमिवाचलम् । सर्वशाखामृगेन्द्राणां भर्तारमपराजितम् ॥
तेजसा यशसा बुद्ध्या ज्ञानेनाभिजनेन च । यः कपीनतिबभ्राज हिमवानिव पर्वतान् ॥
किष्किन्धां यः समध्यास्ते गुहां सगहनद्रुमाम् । दुर्गां पर्वतदुर्गस्थां प्रधानैः सह यूथपैः ॥
यस्यैषा काञ्चनी माला शोभते शतपुष्करा । कान्ता देवमनुष्याणां यस्यां लक्ष्मीः प्रतिष्ठिता॥
एतां च मालां तारां च कपिराज्यं च शाश्वतम् । सुग्रीवो वालिनं हत्वा रामेण प्रतिपादितः॥

मध्ये	"நடுவில்
अचलं	அசையாத
गिरिं	மலையை
इव	போலவே
तिष्ठन्तं	இருக்கிறவனும்,
सर्वशाखा-मृगेन्द्राणां	எல்லா வானரோத்தமர்களுக்கும்
अपराजितं	ஒருவராலும் வெல்ல முடியாத
भर्तारं	எஜமானுமாகிய
यं	எவனை
पश्यसि तु	பார்க்கின்றீரோ,
यः	எவன்
पर्वतान्	பர்வதங்களை
हिमवान् इव	இமையமலை எப்படியோ அப்படியே
तेजसा	ஆற்றலாலும்
यशसा	புகழாலும்
बुद्ध्या	நுண்ணறிவாலும்,
ज्ञानेन	சாஸ்திரக்ஞானத்திலும்
अभिजनेन च	உன்னதபிறப்பாலும்
कपीन्	வானரர்களை
अतिबभ्राज	அதிசயித்து விளங்குகிறானே,
यः	எவன்
प्रधानैः	சிறந்த
यूथपैः सह	சேனைத்தலைவர்களோடுகூட
सगहनद्रुमां	அடர்ந்த மரங்களையுடையதும்
पर्वतदुर्गस्थां	மலையரணுடனிருக்கிறதும்
दुर्गां	பிறரால் கிட்டுவதற்கரியதுமான
किष्किन्धां	கிஷ்கிந்தை என்ற
गुहां	குகையில்
समध्यास्ते	வசித்துக்கொண்டிருக்கிறானே,
यस्यां	எதில்
लक्ष्मीः	லக்ஷ்மி
प्रतिष्ठिता	குடிகொண்டு விளங்குகிறாளோ
देवमनुष्याणां	தேவர்களுக்கும் மனிதர்களுக்கும்
कान्ता	ஆசைகொள்ளத்தக்கதோ,
एषा	இந்த
शतपुष्करा	நூறு தாமரைமலர்
काञ्चनी	பொன் [களையுடைய
माला	மாலை
यस्य	எவனுக்கு
शोभते	அவனுக்கென்றே ஓர் அழகுடன் விளங்குகிறதோ அந்த
सुग्रीवः	சுக்ரீவன்
रामेण	ராமனால்
वालिनं	வாலியை
हत्वा	கொன்று
एतां	இந்த
मालां च	மாலையையும்
तारां च	தாரையையும்
कपिराज्यं च	வானரராஜ்யத்தையும்
शाश्वतं	சாச்வதமாய்
प्रतिपादितः	அளிக்கப்பட்டான்.

शतं शतसहस्राणां कोटिमाहुर्मनीषिणः। शतं कोटिसहस्राणां शङ्ख इत्यभिधीयते ॥ ३५ ॥

मनीषिणः	"அறிஞர்கள்
शतसहस्राणां	நூறுயிரங்களின்
शतं	நூறை
कोटिं	கோடியென
आहुः	சொல்லுகிறார்கள்.
कोटिसहस्राणां	ஆயிரம் கோடிகளின்
शतं	நூறு
शङ्खः	"சங்கம்"
इति	என்று
अभिधीयते	சொல்லப்படுகிறது.

शतं शङ्खसहस्राणां महाशङ्ख इति स्मृतः । महाशङ्खसहस्राणां शतं बृन्दमिति स्मृतम् ॥

शङ्खसहस्राणां	"ஆயிரசங்கங்களின்
शतं	நூறு
महाशङ्खः	'மஹாசங்கம்'
इति	என்று
स्मृतः	சொல்லப்பட்டது.

महाशङ्खसहस्राणां	ஆயிரம் மகாசங்கங்
शतं	நூறு [களின்
बृन्दं	'பிருந்தம்'
इति	என்று
स्मृतम्	சொல்லப்பட்டது.

शतं बृन्दसहस्राणां महाबृन्दमिति स्मृतम् । महाबृन्दसहस्राणां शतं पद्ममिति स्मृतम् ॥

बृन्दसहस्राणां	"ஆயிரம் பிருந்தங் களின்
शतं	நூறு
महाबृन्दं	'மஹாபிருந்தம்'
इति	என்று
स्मृतं	சொல்லப்பட்டது.

महाबृन्दसहस्राणां	ஆயிரம் மஹாபிருந் தங்களின்
शतं	நூறு
पद्मं	"பத்மம்"
इति	என்று
स्मृतम्	சொல்லப்பட்டது.

शतं पद्मसहस्राणां महापद्ममिति स्मृतम् । महापद्मसहस्राणां शतं खर्वमिहोच्यते ॥ ३८ ॥

पद्मसहस्राणां	"ஆயிரம்பத்மங்களின்
शतं	நூறு
महापद्मं	"மஹாபத்மம்"
इति	என்று
स्मृतं	சொல்லப்பட்டது.

महापद्मसहस्राणां	ஆயிரம் மகாபத்மங்
शतं	நூறு [களின்
खर्वं	"கர்வம்" என்று
इह	இவ்வுலகில்
उच्यते	சொல்லப்படுகிறது.

शतं खर्वसहस्राणां महाखर्वमिति स्मृतम् । महाखर्वसहस्राणां समुद्रमभिधीयते ॥ ३९ ॥

खर्वसहस्राणां	"ஆயிரம் கர்வங்களின்
शतं	நூறு
महाखर्वं	"மஹாகர்வம"
इति	என்று
स्मृतं	சொல்லப்பட்டது.

महाखर्वसहस्राणां	ஆயிரம் மகாகர்வங் களின் நூறு
समुद्रं	"சமுத்திரமென"
अभिधीयते	சொல்லப்படுகிறது.

शतं समुद्रसाहस्रमोघ इत्यभिधीयते । शतमोघसहस्राणां महौघ इति विश्रुतः ॥ ४० ॥

शतं	"நூறு
समुद्रसाहस्रं	ஆயிரம் சமுத்திரம்
ओघः	"ஓகம்"
इति	என்று
अभिधीयते	சொல்லப்படுகிறது.

ओघसहस्राणां	ஆயிரம் ஓகங்களின்
शतं	நூறு
महौघः	"மகாஓகம்"
इति	என்று
विश्रुतः	சொல்லப்படுகிறது.

एवं कोटिसहस्रेण शङ्खानां च शतेन च । महाशङ्खसहस्रेण तथा बृन्दशतेन च ॥ ४१ ॥
महाबृन्दसहस्रेण तथा पद्मशतेन च । महापद्मसहस्रेण तथा खर्वशतेन च ॥ ४२ ॥
समुद्रेण शतेनैव महौघेन तथैव च । एवं कोटिमहौघेन समुद्रसदृशेन च ॥ ४३ ॥
विभीषणेन सचिवै राक्षसैः परिवारितः । सुग्रीवो वानरेन्द्रस्त्वां युद्धार्थमभिवर्तते ॥
महाबलवृतो नित्यं महाबलपराक्रमः ॥ ४४ ॥

वानरेन्द्रः	"வானரேந்திரனும்
महाबलपराक्रमः	மகத்தான ஆற்றலும் ஆண்மையும் படைக்கப்பெற்றவனுமான
सुग्रीवः	சுக்ரீவன்
नित्यं	எப்பொழுதும்
महाबलवृतः	பெருஞ்சேனையால் சூழப்பட்டவனுயும்
एवं	இப்படியே
कोटिसहस्रेण	ஆயிரங்கோடிக்கணக்
शङ्खानां	சங்கங்களின் [காகவும்
शतेन च	நூற்றுக்கணக்காகவும்
महाशङ्खसहस्रेण च	ஆயிரம் மகாசங்கக் கணக்காகவும்
तथा	அப்படியே
बृन्दशतेन च	நூறு பிருந்தக்கணக் காகவும்
महाबृन्दसहस्रेण	ஆயிரம் மகாபிருந்தக் கணக்காகவும்
तथा	அப்படியே
पद्मशतेन च	நூறு பத்மக்கணக் காகவும்
महापद्मसहस्रेण	ஆயிரம் மகாபத்மக் கணக்காகவும்
तथा	அப்படியே
खर्वशतेन च	நூறு கர்வக்கணக் காகவும்
शतेन समुद्रेण एव	நூறு சமுத்திரக்கண
तथा	அப்படியே [க்காகவும்
महौघेन एव	மகா ஓகக்கணக்கா
एवं	இப்படியே [கவும்
कोटिमहौघेन च	கோடி மகா ஓகக்கணக் காகவும்
समुद्रसदृशेन च	சமுத்திரத்தை ஒத்த கணக்காகவும்
विभीषणेन	விபீஷணனேடும்
सचिवैः	மந்திரிகளான
राक्षसैः	அரக்கர்களால்
परिवारितः	சூழப்பட்டவனுயிருந் துகொண்டு
त्वां	தேவரீருடன்
युद्धार्थं	போர்புரிய
अभिवर्तते	வந்திருக்கிறன்.

इमां महाराज समीक्ष्य वाहिनीमुपस्थितां प्रज्वलितग्रहोपमाम् ।
ततः प्रयत्नः परमो विधीयतां यथा जयः स्यान्न परैः पराजयः ॥ ४५ ॥

महाराज	"மகாராஜரே!
प्रज्वलितग्रहोपमां	கொடிய கிரகங்களுக் கொப்பாக
उपस्थितां इमां	வந்திருக்கும் இந்த
वाहिनीं	சைன்னியத்தை
समीक्ष्य	பார்த்து
ततः	அதன்மேல்
यथा	எப்படியானல்
जयः स्यात्	ஜெயம் உண்டாகுமோ
परैः	சத்துருக்களால்
पराजयः	தோல்வி
न	உண்டாகாதோ,
परमः	அப்படிப்பட்டதாகிய,
प्रयत्नः	முயற்சி [ஏற்ற
विधीयताम्	மேற்கொள்ளத் தக்கது."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये युद्धकाण्डे अष्टाविंशः सर्गः ॥

एकोनत्रिंशः सर्गः—இருபத்தொன்பதாவது ஸர்க்கம் ॥ २९ ॥

शार्दूलादिचारप्रेषणम्—சார்தூலன் முதலிய சாரர்களையனுப்புவது.

शुकेन तु समाख्यातांस्तान्दृष्ट्वा हरियूथपान्। समीपस्थं च रामस्य भ्रातरं स्वं विभीषणम्॥
लक्ष्मणं च महावीर्यं भुजं रामस्य दक्षिणम्। सर्ववानरराजं च सुग्रीवं भीमविक्रमम् ॥ २ ॥
गजं गवाक्षं गवयं मैन्दं द्विविदमेव च। अङ्गदं चैव बलिनं वज्रहस्तात्मजात्मजम् ॥ ३ ॥
हनूमन्तं च विक्रान्तं जाम्बवन्तं च दुर्जयम्। सुषेणं कुमुदं नीलं नलं च प्लवगर्षभम् ॥ ४ ॥
किञ्चिदाविग्नहृदयो जातक्रोधश्च रावणः। भर्त्सयामास तौ वीरौ कथान्ते शुकसारणौ ॥

रावणः	ராவணன்
शुकेन	சுகனால்
समाख्यातान्	குறிப்பிட்டுச் சொல்ல
तान्	அந்த [ப்பட்ட
हरियूथपान्	வானரசேனைத்தலை வர்களையும்
रामस्य	ஸ்ரீராமருக்கு
समीपस्थं	பக்கலில் நிற்கும்
स्वं भ्रातरं	தனது தம்பியாகிய
विभीषणं च	விபீஷணனையும்
रामस्य	ஸ்ரீராமரது
दक्षिणं भुजं	வலதுகையாகிய
महावीर्यं	மகா வீர்யசாலியாகிய
लक्ष्मणं च	லக்ஷ்மணரையும்
भीमविक्रमं	மகத்தான ஆண்மை யுடைய
सर्ववानरराजं	எல்லா வானரர்களுக்கும் அரசனுகிய
सुग्रीवं च	சுக்ரீவனையும்,
गजं	கஜனையும்,
गवाक्षं	கவாக்ஷனையும்,
गवयं	கவயனையும்,
मैन्दं एव	மைந்தனையும்,
द्विविदं च	தவிவிதனையும்,
वज्रहस्तात्मजात्मजं	இந்திரன் புதல்வனின் புத்திரனும்,
बलिनं च	பலசாலியுமான
अङ्गदं एव	அங்கதனையும்,
विक्रान्तं	மகா ஆண்மையுற்ற
हनूमन्तं च	ஹனுமாரையும்
दुर्जयं	வெல்லற்கரிய
जाम्बवन्तं च	ஜாம்பவந்தரையும்,
सुषेणं	சுஷேணனையும்,
कुमुदं	குமுதனையும்,
नीलं तु	நீலனையும்,
प्लवगर्षभं	வானரோத்தமனுகிய
नलं च दृष्ट्वा	நளனையும் பார்த்து
किञ्चित्	சிறிது
आविग्नहृदयः	கலக்கிய நெஞ்சத்தனுய்
जातक्रोधः च	கோபம் கொண்டு
कथान्ते	அவர்கள் சொல்லின்
तौ	அந்த [முடிவில்
वीरौ	வீரர்களாகிய
शुकसारणौ	சுகஸாரணர்களை
भर्त्सयामास	மிரட்டினன்.

अधोमुखौ तौ प्रणतावब्रवीच्छुकसारणौ। रोषगद्गदया वाचा संरब्धः परुषं वचः ॥ ६ ॥

अधोमुखौ	தலைகுனிந்து
प्रणतौ	வணங்கிநிற்கும்
तौ	அந்த
शुकसारणौ	சுகஸாரணர்களைப் பார்த்து
संरब्धः	படபடத்தவனுய்
रोषगद्गदया	கோபத்தால் தழுதழுத்த
वाचा	சொற்கொண்டு [த்த
परुषं	கொடிய
वचः	சொல்லை
अब्रवीत्	பின்வருமாறு புகன்றான் :

न तावत्सदृशं नाम सचिवैरुपजीविभिः । विप्रियं नृपतेर्वक्तुं निग्रहप्रग्रहे प्रभोः ॥ ७ ॥

निग्रहप्रग्रहे	"தண்டிப்பதிலும் அருள்புரிவதிலும்
प्रभोः	எஜமானனுகிய
नृपतेः	மன்னனுக்கு
विप्रियं	செவிகொடுத்துக் கேட்கப்பிடிக்காததை
उपजीविभिः	அண்டிப்பிழைக்கும்
सचिवैः	மந்திரிமார்களால்
वक्तुं	பேசப்படுவது
तावत्	முற்றும்
न सदृशं नाम	பொருத்தமாகா தன்றே.

रिपूणां प्रतिकूलानां युद्धार्थमभिवर्तताम् । उभाभ्यां सदृशं नाम वक्तुमप्रस्तवे स्तवम् ॥८॥

युद्धार्थं	"போரைஉத்தேசித்து
अभिवर्ततां	வந்தவர்களாயிருக் கின்ற
प्रतिकूलानां	கண்ணெடுத்துப்பார் க்கவும் அஸஹ்யமா யிருக்கின்ற
रिपूणां	சத்ருக்களின்
स्तवं	புகழை
अप्रस्तवे	காலமில்லாத காலத் தில்
उभाभ्यां	உங்களிருவர்களாலும்
वक्तुं	சொல்லப்படுவது
सदृशं नाम	நியாயமாகுமா ?

आचार्या गुरवो वृद्धा वृथा वां पर्युपासिताः । सारं यद्राजशास्त्राणामनुजीव्यं न गृह्यते ॥

वां	"உங்களால்
आचार्याः	கல்வி கற்பித்தவர் களும்
गुरवः	மாதாபிதாக்கள் முத லிய பெரியோர்களும்
वृद्धाः	அனுபவமுதிர்ச்சி பெற்றவர்களும்
वृथा	பிரயோஜனமின்றி
पर्युपासिताः	சேவிக்கப்பெற்றனர்.
यत्	ஏனென்றால்
राजशास्त्राणां	ராஜசாஸ்திரங்களின்
सारं	சாரமாகிய
अनुजीव्यं	எஜமான் மனங்கோ ணது நடக்கிறதென் பது
गृह्यते न	தெரிந்துகொள்ளப் படவில்லை.

गृहीतो वा न विज्ञातो भारो ज्ञानस्य वोह्यते ॥ १० ॥

गृहीतः	"செவிக்கொள்ளப் பட்டது
विज्ञातः न वा	மனதிற்கொள்ளப்பட வில்லைபோலும்.
ज्ञानस्य	படிப்பின்
भारः वा	சுமை மாத்திரம்
उह्यते	வகிக்கப்பட்டிருக் கிறது.

ईदृशैः सचिवैर्युक्तो मूर्खैर्दिष्ट्या धराम्यहम् ॥ ११ ॥

ईदृशैः	"இப்படிப்பட்ட
मूर्खैः	மூடர்களான
सचिवैः	மந்திரிகளோடு
युक्तः	கூடிய
अहं	நான்
दिष्ट्या	ஏதோ தைவவசத் தால்தான்
धरामि	ராஜ்யத்தை வஹித் துவருகிறேன்.

किंनु मृत्योर्भयं नास्ति वक्तुं मां परुषं वचः। यस्य मे शासतो जिह्वा प्रयच्छति शुभाशुभम्।।

यस्य	"எந்த	परुषं	கர்ணகடோரமாயிருக்கும்
शासतः	ஆக்ஞையிடும்	वचः	சொல்லை
मे	எனது	वक्तुं	சொல்வதற்கு
जिह्वा	நாவு	मृत्योः	எமனிடமிருந்து
शुभाशुभं	நன்மையையும் தீமையையும்	भयं	பயம்
प्रयच्छति	கொடுக்கிறதோ, அந்த	अस्ति न	இல்லையா
मां	என்னைப்பார்த்து	किंनु	என்ன ?

अप्येव दहनं स्पृष्ट्वा वने तिष्ठन्ति पादपाः। राजदोषपरामृष्टास्तिष्ठन्ते नापराधिनः ॥१३॥

वने	"காட்டில்	राजदोषपरामृष्टाः	மன்னர்களது துரோகம் நினைத்த
दहनं	காட்டுத்தீயை	अपराधिनः एव	குற்றவாளிகள் மட்டும்
स्पृष्ट्वा अपि	ஸ்பரிசித்தும்	तिष्ठन्ते न	உயிருடனிருக்கமாட்டார்கள்.
पादपाः	விருக்ஷங்கள்		
तिष्ठन्ति	உயிருடனிருக்கலாம்.		

हन्यामहं त्विमौ पापौ शत्रुपक्षप्रशंसकौ। यदि पूर्वोपकारैस्तु न क्रोधो मृदुतां व्रजेत् ॥१४॥

पूर्वोपकारैः	"முன் செய்திருக்கும் உபகாரங்களைக் கொண்டு	शत्रुपक्षप्रशंसकौ	சத்ருக்களுடைய கக்ஷியைப்புகழும்
क्रोधः	சினமானது	पापौ	பாபிகளாகிய
मृदुतां	சாந்தத்தன்மையை	इमौ तु	இவ்விருவர்களையும்
व्रजेत् न यदि	அடைந்திராவிடில்	तु	இப்பவே
		अहं	நான்
		हन्याम्	கொன்றுவிடுவேன்.

अपध्वंसत गच्छध्वं सन्निकर्षादितो मम। न हि वां हन्तुमिच्छामि स्मराम्युपकृतानि वाम् ॥

वां	"உங்களின்	अपध्वंसत	எக்கேடுகெட்டு ஒழியுங்கள்.
उपकृतानि	உபகாரங்களை		
स्मरामि	நினைக்கின்றேன்.	इतः	இவ்விடத்தினின்று
हि	ஆதலால்	मम	எனது
वां	உங்களை	सन्निकर्षात्	எதிரிலிருந்து
हन्तुं	கொல்ல	गच्छध्वम्	ஒழிந்துபோய்விடுங்கள்.
न इच्छामि	நான் தீர்மானிக்கவில்லை.		

हतावेव कृतघ्नौ तौ मयि स्नेहपराङ्मुखौ ॥ १६ ॥

मयि	"என் விஷயத்தில்	स्नेहपराङ्मुखौ	அன்பு மாறியவர்களாய்
कृतघ्नौ	செய்நன்றி மறந்த		
तौ	அவர்கள்	हतौ एव	நலனழிந்தவர்களே."

एवमुक्तौ तु सव्रीडौ तावुभौ शुकसारणौ । रावणं जयशब्देन प्रतिनन्द्याभिनिःसृतौ ॥१७॥

एवं	மேற்கண்டவாறு
उक्तौ	சொல்லப்பட்ட
तौ	அந்த
शुकसारणौ	சுகன், ஸாரணனென்
उभौ तु	இருவர்களும் [ற
सव्रीडौ	வெட்கமடைந்தவர் களாய்
यजशब्देन	'ஜயம் பெற்று விளங் குவீராக' என்ற சொற்கொண்டு
रावणं	ராவணனை
प्रतिनन्द्य	வாழ்த்திவிட்டு
अभिनिःसृतौ	அப்பால் சென்று விட்டார்கள்.

अब्रवीत्तु दशग्रीवः समीपस्थं महोदरम् । उपस्थापय मे शीघ्रं चारान्नीतिविशारदान् ॥

दशग्रीवः	ராவணன்
समीपस्थं	பக்கத்திலிருந்த
महोदरं	மகோதரனைப் பார்
तु	இப்பொழுது [த்து
अब्रवीत्	பின்வருமாறு ஆக் கினைசெய்தான்.
मे	"எனது
नीतिविशारदान्	நீதிசாஸ்திரங்கள் நன்கறிந்த
चारान्	வேவுகாரர்களை
शीघ्रं	காலதாமதஞ்செய் யாது
उपस्थापय	கொண்டுவந்து நிறுத் துவாயாக'

महोदरस्तथोक्तस्तु शीघ्रमाज्ञापयच्चरान् ॥ १९ ॥

तथा	அவ்வண்ணம்
उक्तः	நியமனம் பெற்ற
महोदरः तु	மகோதரனும்
चरान्	வேவுகாரர்களை
शीघ्रं	தக்ஷணமே
आज्ञापयत्	கட்டளையிட்டான்.

ततश्चाराः संत्वरिताः प्राप्ताः पार्थिवशासनात् । उपस्थिताः प्राञ्जलयो वर्धयित्वा जयाशिषा ॥

चाराः	வேவுகாரர்கள்
पार्थिवशासनात्	மன்னனது ஆக்கினை என்கிறபடியால்
संत्वरिताः	காலதாமதம் செய் யாதவர்களாய்
ततः	அப்பொழுது
प्राप्ताः	வந்துசேர்ந்து
प्राञ्जलयः	கைகூப்பிக்கொண்டு
जयाशिषा	('பல்லாண்டு பல்லா ண்டு' என்ற) ஆசிச் சொற்கொண்டு
वर्धयित्वा	வாழ்த்திவிட்டு
उपस्थिताः	ஆக்ஞையை எதிர்பார் த்துக் காத்துநின்றார் கள்.

तानब्रवीत्ततो वाक्यं रावणो राक्षसाधिपः । चारान्प्रत्यायिताञ्छूरान्भक्तान्विगतसाध्वसान् ॥

राक्षसाधिपः	அரக்கர் மன்னனாகிய
रावणः	ராவணன்
तान्	அந்த
प्रत्यायितान्	நம்பத்தகுந்தவர்க ளும்
शूरान्	சூரர்களும்
विगतसाध्वसान्	எதிலும் மனஞ்சலியா தவர்களும்
भक्तान्	யஜமானவிச்வாசமுள் ளவர்களுமான
चारान्	வேவுகாரர்களைப் பார்த்து
ततः	அப்பொழுது
वाक्यं	ஒரு சொல்லை
अब्रवीत्	பின்வருமாறு மொழிந்தான் :

इतो गच्छत रामस्य व्यवसायं परीक्षथ। मन्त्रिष्वभ्यन्तरा येऽस्य प्रीत्या तेन समागताः॥

इतः	"இங்கிருந்து	समागताः	கூட்டுறவுகொண்ட
गच्छत	செல்லுங்கள்.	अस्य	இவனுக்கு [வர்களாய்
रामस्य	ராமனது	अभ्यन्तराः	அந்தரங்கமானவர்கள்
व्यवसायं	நடவடிக்கையையும்	ये	எவர்களோ, அவர்க
मन्त्रिषु	மந்திரிகளில்		ளையும்
तेन	அவனோடு	परीक्षथ	பரிசோதித்தறிவீர்
प्रीत्या	அன்பால்		களாக.

कथं स्वपिति जागर्ति किमन्यच्च करिष्यति। विज्ञाय निपुणं सर्वमागन्तव्यमशेषतः॥२३॥

कथं	"எப்படி	सर्वं	எல்லாவற்றையும்
स्वपिति	தூங்குகிறான்?	अशेषतः	எதையும் விடாமல்
जागर्ति	விழித்துக்கொள்ளு	निपुणं	நுட்பமாக
	கிறான்?	विज्ञाय	அறிந்துகொண்டு
अन्यत् च	இன்னும்	आगन्तव्यम्	திரும்பிவந்துசேர
किं करिष्यति	எதைச் செய்கிறான்?		வேண்டியது.

चारेण विदितः शत्रुः पण्डितैर्वसुधाधिपैः। युद्धे स्वल्पेन यत्नेन समासाद्य निरस्यते॥२४॥

पण्डितैः	"புத்திசாதுர்யமுள்ள	शत्रुः	சத்ரு
वसुधाधिपैः	மன்னர்களால்	युद्धे	போரில்
चारेण	வேவுகாரனைக்	समासाद्य	எதிர்த்து
	கொண்டு	स्वल्पेन	அற்ப
विदितः	எல்லாமறிந்துகொள்	यत्नेन	முயற்சியால்
	ளப்பட்ட	निरस्यते	ஒழிக்கப்படுகிறான்."

चारास्तु ते तथेत्युक्त्वा प्रहृष्टा राक्षसेश्वरम्। शार्दूलमग्रतः कृत्वा ततश्चक्रुः प्रदक्षिणम्॥

ते	அந்த	इति	என்று
चाराः	வேவுகாரர்கள்	उक्त्वा	சொல்லிவிட்டு
प्रहृष्टाः	மனச்சந்துஷ்டி	शार्दूलं	சார்தூலனை
	கொண்டவர்களாய்	अग्रतः	முதலிலிருப்பவனாக
राक्षसेश्वरं	அரக்கமன்னனைப்	कृत्वा	செய்துகொண்டு
	பார்த்து	ततः	அதன்மேல்
तथा	"அப்படியே செய்	प्रदक्षिणं तु	பிரதக்ஷிணத்தையும்
	கிறோம்"	चक्रुः	செய்தார்கள்.

ततस्ते तं महात्मानं चारा राक्षससत्तमम्। कृत्वा प्रदक्षिणं जग्मुर्यत्र रामः सलक्ष्मणः॥

ते	அந்த	कृत्वा	செய்துவிட்டு
चाराः	வேவுகாரர்கள்	रामः	ஸ்ரீராமர்
महात्मानं	மகா ஆற்றலுடைய	सलक्ष्मणः	லக்ஷ்மணருடன்
राक्षससत्तमं	அரக்கர்களில் உத்தம	यत्र	எங்கிருந்தாரோ
तं	அவனுக்கு [னாகிய	ततः	அவ்விடத்திற்கு
प्रदक्षिणं	பிரதக்ஷிணத்தை	जग्मुः	வந்துசேர்ந்தார்கள்.

ते सुवेलस्य शैलस्य समीपे रामलक्ष्मणौ। प्रच्छन्ना ददृशुर्गत्वा ससुग्रीवविभीषणौ ॥२७॥

प्रच्छन्नाः	மாறுவேஷம் பூண்டிருந்த
ते	அவர்கள்
सुवेलस्य	சுவேலமென்ற
शैलस्य	மலையின்
समीपे	அருகாமையில்
गत्वा	வந்துசேர்ந்து
ससुग्रीवविभीषणौ	சுக்ரீவனுடனும் விபீஷணனுடனுமிருந்த
रामलक्ष्मणौ	ஸ்ரீராமரையும் லக்ஷ்மணரையும்
ददृशुः	கண்டார்கள்.

प्रेक्षमाणाश्चमूं तां च बभूवुर्भयविक्लवाः। ते तु धर्मात्मना दृष्टा राक्षसेन्द्रेण राक्षसाः ॥२८॥

तां	அந்த
चमूं च	ஸைன்யத்தையும்
प्रेक्षमाणाः	பார்த்துக்கொண்டிருக்கின்றவர்களாய்
भयविक्लवाः	அச்சத்தாலுள்ளங் கலங்கியவர்களாய்
बभूवुः	ஆனார்கள்.
राक्षसाः	அரக்கர்களாகிய
ते तु	அவர்களும்
राक्षसेन्द्रेण	ராக்ஷஸோத்தமராகிய
धर्मात्मना	தர்மாத்மாவான (விபீஷணரால்)
दृष्टाः	கண்டுகொள்ளப் பட்டார்கள்.

विभीषणेन तत्रस्था निगृहीता यदृच्छया। शार्दूलो ग्राहितस्त्वेकः पापोऽयमिति राक्षसः॥
मोचितः सोऽपि रामेण वध्यमानः प्लवङ्गमैः ॥ ३० ॥
आनृशंस्येन रामस्य मोचिता राक्षसाः परे ॥ ३१ ॥

विभीषणेन	விபீஷணனால்
यदृच्छया	தனதிஷ்டப்படியே
तत्रस्थाः	அங்கு வந்திருந்தவர்கள்
निगृहीताः	பிடிக்கப்பட்டார்கள்.
ग्राहितः	பிடிக்கப்பட்ட
शार्दूलः	சார்தூலனென்ற
राक्षसः	அரக்கன்
एकः तु	ஒருவன் மட்டும்
प्लवङ्गमैः	வானரர்களால்
अयं पापः	'இவன் பாபி'
इति	என்கிற காரணத்தால்
वध्यमानः अपि	புடைக்கப்படுகிறவனு
सः	அவன் [யிருக்கையில்
रामेण	ஸ்ரீராமரால்
मोचितः	விடுவிக்கப்பட்டான்.
परे	மற்றுமுள்ள
राक्षसाः	அரக்கர்களும்
रामस्य	ஸ்ரீராமருடைய
आनृशंस्येन	தண்ணளியால்
मोचिताः	விடுவிக்கப்பட்டார்கள்.

वानरैरर्दितास्ते तु विक्रान्तैर्लघुविक्रमैः। पुनर्लङ्कामनुप्राप्ताः श्वसन्तो नष्टचेतसः ॥ ३२ ॥

विक्रान्तैः	பராக்கிரமசாலிகளும்
लघुविक्रमैः तु	தருதருவென்றிருக்கிறவர்களுமான
वानरैः	வானரர்களால்
अर्दिताः	ஹிம்சிக்கப்பட்ட
ते	அவர்கள்
नष्टचेतसः	மனம்பதைத்தவர்களாய்
श्वसन्तः	பெருமூச்செறிந்து
पुनः	மீளவும் [கொண்டு
लङ्कां	இலங்கைக்கு
अनुप्राप्ताः	வந்துசேர்ந்தார்கள்.

ततो दशग्रीवमुपस्थितास्तु ते चारा बहिर्नित्यचरा निशाचराः ।
गिरेः सुवेलस्य समीपवासिनं न्यवेदयन्भीमबलं महाबलाः ॥ ३३ ॥

ततः	அதன்மேல்	दशग्रीवं	ராவணனை
बहिः	வெளியில்	उपस्थिताः	கிட்டினவர்களாகி
नित्यचराः	எக்காலத்திலும் திரிபவர்களும்	भीमबलं	பெரும் சைனியத்தை
महाबलाः	மிக்க பலவான்களும்	सुवेलस्य	சுவேல
निशाचराः तु	அரக்கர்களுமான	गिरेः	மலையின்
ते	அந்த	समीपवासिनं	சமீபத்தில் தங்கியிருக்கிறதாய்
चाराः	வேவுகாரர்கள்	न्यवेदयन्	அறிக்கை செய்தார்கள்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे एकोनत्रिंशः सर्गः ॥

आदितः श्लोकाः 15779 युद्धकाण्डे आदितः श्लोकाः 1104

त्रिंशः सर्गः—முப்பதாம் ஸர்க்கம் ॥ ३० ॥

वानरनामनिर्देशः—வானரர்களுடைய பெயர்களைச் சொல்வது.

ततस्तमक्षोभ्यबलं लङ्काधिपतये चराः । सुवेले राघवं शैले निविष्टं प्रत्यवेदयन् ॥ १ ॥

ततः	அப்பொழுது	अक्षोभ्यबलं	கலக்கமுடியாத சைனியத்தைப்பற்றியும்
चराः	வேவுகாரர்கள்	निविष्टं	அவ்விடத்தில் தங்கியிருந்த
लङ्काधिपतये	இலங்கைமன்னனுக்கு	राघवं	ஸ்ரீராமரைப்பற்றியும்
सुवेले	சுவேல	प्रत्यवेदयन्	விவரமாய் தெரிவித்தார்கள்.
शैले	மலையில்		
तं	அந்த		

चाराणां रावणः श्रुत्वा प्राप्तं रामं महाबलम् । जातोद्वेगोऽभवत्किंचिच्छार्दूलं वाक्यमब्रवीत् ॥

रावणः	ராவணன்	जातोद्वेगः	ஆச்சரியம் கொண்டவனாய்
महाबलं	மகாபலவானாகிய	अभवत्	ஆனான்.
रामं	ஸ்ரீராமரை	शार्दूलं	சார்தூலனைப் பார்த்து
प्राप्तं	வந்துசேர்ந்துவிட்டவராய்	वाक्यं	ஒரு சொல்லை
चाराणां	வேவுகாரர்களிடம்	अब्रवीत्	பின்வருமாறு சொன்னான் :
श्रुत्वा	கேட்டு,		
किञ्चित्	கொஞ்சம்		

अयथावच्च ते वर्णो दीनश्चासि निशाचर। नासि कच्चिदमित्राणां क्रुद्धानां वशमागतः॥

निशाचर — "அரக்கனே!
ते — உனது
वर्णः — முகவொளி
अयथावत् च — எப்பொழுதும் உள்ளதற்கு மாறுபட்டும்
दीनः च — மனக்கவலையுற்றவனுமாகவும்
असि — இருக்கின்றாய்.
क्रुद्धानां — கோபிஷ்டர்களாகிய
अमित्राणां — சத்ருக்களுடைய
वशं — கையில்
आगतः — சிக்கிக்கொண்டுவிட்டவனாய்
असि न — நீ ஆகிவிடவில்லையென
कच्चित् — நான் நினைக்கின்றேன்."

इति तेनानुशिष्टस्तु वाचं मन्दमुदैरयत्। तदा राक्षसशार्दूलं शार्दूलो भयविह्वलः॥ ४॥

तदा — அப்பொழுது
तेन — அவனால்
इति — மேற்கண்டவாறு
अनुशिष्टः — வினவப்பட்ட
शार्दूलः — சார்தூலன்
भयविह्वलः — பயத்தால் நெஞ்சம் பதைக்க
मन्दं — மெல்லிய குரலுடன்
वाचं — ஒரு சொல்லை
राक्षसशार्दूलं तु — இராக்ஷஸப்புலியைப் பார்த்து
उदैरयत् — பின்வருமாறு சொன்னான்:

न ते चारयितुं शक्या राजन्वानरपुङ्गवाः॥ ५॥

राजन् — "ராஜன்!
वानरपुङ्गवाः — வானரோத்தமர்
ते — அவர்கள் [களாகும்
चारयितुं — வேவுத்தொழிலால் அறிய
शक्याः न — ஒண்ணாதவர்கள்.

विक्रान्ता बलवन्तश्च राघवेण च रक्षिताः। नापि संभाषितुं शक्याः संप्रश्नोऽत्र न लभ्यते॥

विक्रान्ताः — "சலியா மனத்தினர்களும்
बलवन्तः — மகா ஆற்றலுடையவர்களும்
राघवेण — ராமனால்
रक्षिताः च — பாதுகாக்கப்பட்டவர்களுமான அவர்கள்
संभाषितुं अपि — வாய்திறந்து பேசவும் கூட
शक्याः न — இடங்கொடுப்பவர்களல்ல.
अत्र — இவர்கள் விஷயத்தில்
संप्रश्नः च — நல்வார்த்தைகொண்டு விசாரித்தலென்பதும்
लभ्यते न — அடையப்படவில்லை.

सर्वतो रक्ष्यते पन्था वानरैः पर्वतोपमैः। प्रविष्टमात्रे ज्ञातोऽहं बले तस्मिन्नचारिते॥ ७॥

पर्वतोपमैः — "மலைக்கொப்பான
वानरैः — வானரர்களால்
सर्वतः — நாற்புறமும்
पन्थाः — வழியானது
रक्ष्यते — பாதுகாக்கப்பட்டிருக்
अहं — [கிறது.
तस्मिन् — அந்த
बले — சைனியம்
अचारिते — வேவுகொள்ளப்படாதிருக்கையில்
प्रविष्टमात्रे — நுழைந்தமாத்திரத்திலேயே
ज्ञातः — இன்னனென்று கண்டுகொள்ளப்பட்டேன்.

बलाद्गृहीतो रक्षोभिर्बहुधाऽस्मि विचालितः। जानुभिर्मुष्टिभिर्दन्तैस्तलैश्चाभिहतो भृशम् ॥
परिणीतोऽस्मि हरिभिर्बलवद्भिरमर्षणैः। परिणीय च सर्वत्र नीतोऽहं रामसंसदम् ॥ ९ ॥

अहं	"நான்
रक्षोभिः	கூட வந்த இராக்ஷஸர்களுடன்
बलवद्भिः	பலசாலிகளும்
अमर्षणैः	அடங்காச்சினம்கொண்டவர்களுமான
हरिभिः	குரங்குகளால்
बलात्	மூர்ட்டுத்தனமாய்
गृहीतः	பிடிக்கப்பட்டேன்.
बहुधा	பலவாறுய்
विचालितः अस्मि	அல்லல் படுத்தப்பட்டேன்.
जानुभिः	முழங்கால்களாலும்,
मुष्टिभिः	முஷ்டிகளாலும்
दन्तैः	பற்களாலும்
तलैः च	உள்ளங்கைகளாலும்
भृशं	மிக
अभिहतः	புடைக்கப்பட்டேன்.
सर्वत्र	எங்கும்
परिणीय	இழுக்கப்பட்டு
परिणीतः अस्मि	ஓட்டிவிடப்பட்டேன்.
रामसंसदं	ராமன் சபைக்கு
नीतः च	கொண்டுவந்து நிறுத்தவும் பட்டேன்.

रुधिरादिग्धसर्वाङ्गो विह्वलश्चलितेन्द्रियः। हरिभिर्वध्यमानश्च याचमानः कृताञ्जलिः ॥
राघवेण परित्रातो जीवामीति यदृच्छया ॥ ११ ॥

रुधिरादिग्धसर्वाङ्गः	"உடல் முழுதும் குருதி வழிந்தவனுய்
विह्वलः	மேனி தளர்ந்தவனுய்
चलितेन्द्रियः च	புலன் மருண்டவனுய்
हरिभिः	குரங்குகளால்
वध्यमानः	புடைக்கப்பட்டு
कृताञ्जलिः	கைகூப்பி
याचमानः	உயிருக்கு மன்றாடுகின்றேன்.
इति	என்ற காரணத்தால்
राघवेण	ராமனுல்
परित्रातः	காப்பாற்றப்பட்டு
यदृच्छया	ஏதோ விதிவசமாய்
जीवामि	நான் செத்துபிழைத்தேன்."

एष शैलैः शिलाभिश्च पूरयित्वा महार्णवम्। द्वारमाश्रित्य लङ्काया रामस्तिष्ठति सायुधः॥

शैलैः	"பர்வதங்களாலும்,
शिलाभिः च	பாறைகளாலும்
महार्णवं	பெருங்கடலை
पूरयित्वा	தூர்த்து
लङ्कायाः	இலங்கையின்
द्वारं	வாயிலை
आश्रित्य	அடைந்து
सायुधः	ஆயுதத்தோடுகூட
रामः	ராமன்
एषः तिष्ठति	இதோ நிற்கின்றன்.

गरुडव्यूहमास्थाय सर्वतो हरिभिर्वृतः। मां विसृज्य महातेजा लङ्कामेवाभिवर्तते ॥१३॥

गरुडव्यूहं	"கருடவ்யூகத்தில்
आस्थाय	இருந்துகொண்டு
सर्वतः	நாற்புறமும்
हरिभिः	குரங்குகளால்
वृतः	சூழப்பட்டவனுய்
महातेजाः	மஹா ஆற்றலுடையவனுகும் அவன்
मां	என்னை
विसृज्य	போக விடுத்துவிட்டு
लङ्कां एव	இலங்கையை நோக்கியே
अभिवर्तते	வந்துகொண்டிருக்கிறன்.

पुरा प्राकारमायाति क्षिप्रमेकतरं कुरु । सीतां वाऽस्मै प्रयच्छाशु सुयुद्धं वा प्रदीयताम् ॥

प्राकारं	"மதில்சுவரை
आयाति पुरा	அடையும் முன்ன மையே
क्षिप्रं	காலதாமதமின்றி
एकतरं	பின்கண்ட இரண்டி லொன்றை
कुरु	செய்வீராக.
आशु	உடனே
सीतां वा	சீதையையாவது
अस्मै	இவருக்கு
प्रयच्छ	திருப்பிக்கொடுத்து விடும்.
वा	இதில்லை என்றாலோ
सुयुद्धं	கடும்போரானது
प्रदीयताम्	தரப்படட்டும்."

मनसा सन्ततापाथ तच्छ्रुत्वा राक्षसाधिपः । शार्दूलस्य महद्वाक्यमथोवाच स रावणः ॥

राक्षसाधिपः	ராக்ஷஸமன்னனாகிய
रावणः	ராவணன்
शार्दूलस्य	சார்தூலனது
तत्	அந்த
महत्	சிறந்த
वाक्यं श्रुत्वा	சொல்லைக்கேட்டு
अथ	அப்பொழுது
मनसा संतताप	உள்ளங்கலங்கினான்.
अथ	அதன்மேல்
सः	அவன்
उवाच	பின்வருமாறு மொழிந்தான் :

यदि मां प्रति युद्धयेरन्देवगन्धर्वदानवाः । नैव सीतां प्रदास्यामि सर्वलोकभयादपि ॥१६॥

देवगन्धर्वदानवाः	"தேவர்கள், கந்தர்வர் கள், தானவர்கள்
मां	என்னை
प्रति	எதிர்த்து
युद्धयेरन् यदि	போர்புரிகின்றார்கள் என்றாலும்
सर्वलोकभयात् अपि	எல்லா உலகத்தினின் றும் ஆபத்துண்டா கிறது என்றாலும்
सीतां एव	சீதையை மட்டும்
प्रदास्यामि न	நான் திருப்பிக்கொடு க்கமாட்டேன்."

एवमुक्त्वा महातेजा रावणः पुनरब्रवीत् । चारिता भवता सेना केऽत्र शूराः प्लवङ्गमाः ॥

महातेजाः	மகா ஆற்றலுடைய
रावणः	ராவணன்
एवं	மேற்கண்டவாறு
उक्त्वा	சொல்லிவிட்டு
पुनः	மீளவும்
अब्रवीत्	பின்வருமாறு வினவு வானான் :
भवता	"உன்னால்
सेना	சேனை
चारिता	சுற்றிப்பார்க்கப்
अत्र	இதில் [பட்டதா ?
शूराः	சூரர்களாகிய
प्लवङ्गमाः	வானரர்கள்
के	எவர்கள் ?

कीदृशाः किंप्रभाः सौम्य वानरा ये दुरासदाः । कस्य पुत्राश्च पौत्राश्च तत्त्वमाख्याहि राक्षस॥

सौम्य	"கோழை நெஞ்சம் படைக்கப்பெற்ற
राक्षस	அரக்க !
दुरासदाः	எவராலும் அணுக
वानराः	வானரர்கள் [முடியாத
ये	எவர்களோ அவர்கள்
कीदृशाः	எம்மாதிரியானவர் கள் ?
किंप्रभाः	என்ன சக்திகொண் டவர்கள் ?
कस्य	யாருடைய
पुत्राः च	புதல்வர்கள் ?
पौत्राः च	பேரன்மார்கள் ?
तत्त्वं	உள்ளதை
आख्याहि	சொல்லு.

तथाऽत्र प्रतिपत्स्यामि ज्ञात्वा तेषां बलाबलम्। अवश्यं बलसंख्यानं कर्तव्यं युद्धमिच्छताम् ॥

तेषां	"அவர்களுடைய
बलाबलं	பலாபலத்தை
ज्ञात्वा	அறிந்துகொண்டு
अत्र	இவ்விஷயத்தில்
तथा	ஏற்றபடி
प्रतिपत्स्यामि	வேண்டிய ஏற்பாடு செய்வேன்.
युद्धं	போரில்
इच्छतां	துணிபவர்களுக்கு
अवश्यं	அவச்யமாய்
कर्तव्यं	செய்யப்படவேண்டியது
बलसंख्यानम्	சதுருசைன்னியத் தினளவு."

तथैवमुक्तः शार्दूलो रावणेनोत्तमश्वरः। इदं वचनमारेभे वक्तुं रावणसन्निधौ ॥ २० ॥

रावणेन	ராவணனல்
तथा एवं	மேற்கண்டவாறு
उक्तः	வினாவப்பட்ட
उत्तमः	சிறந்த
चरः	ஒற்றனகிய
शार्दूलः	சார்தூலன்
रावणसंनिधौ	ராவணனது முன்னிலையில்
इदं वचनं	பின்வரும் சொல்லை
वक्तुं आरेभे	சொல்லத்தலைப் பட்டான்:

अथर्क्षरजसः पुत्रो युधि राजा सुदुर्जयः। गद्गदस्याथ पुत्रोऽत्र जाम्बवानिति विश्रुतः ॥

युधि	"போரில்
सुदुर्जयः	எவராலும் வெல்ல முடியாதவனகிய
राजा	ராஜா, சுக்ரீவன்
ऋक्षरजसः	ரிக்ஷராஜஸன் என்பவனின்
पुत्रः अथ	குமாரனே!
अत्र	இதோ இருக்கும்
जाम्बवान् इति	'ஜாம்பவான்' என்று
विश्रुतः अथ	ப்ரசித்தி பெற்றவனும்
गद्गदस्य	கத்கதனென்பவனது
पुत्रः	புதல்வன்." [டைய

गद्गदस्यैव पुत्रोऽन्यो गुरुपुत्रः शतक्रतोः। कदनं यस्य पुत्रेण कृतमेकेन रक्षसाम् ॥२२॥

गद्गदस्य एव	"கத்கதனுக்கே
अन्यः	இன்னொரு
पुत्रः	புதல்வன்
यस्य	எவனுடைய
पुत्रेण	புதல்வன்
एकेन	ஒருவனலேயே
रक्षसां	அரக்கர்களுக்கு
कदनं कृतं	கரசம் விளைவிக்கப்பட்டதோ அவன்
शतक्रतोः	இந்திரனது
गुरुपुत्रः	குருவாகிய பிருகஸ்பதியின் புதல்வன்."

सुषेणश्चापि धर्मात्मा पुत्रो धर्मस्य वीर्यवान्। सौम्यः सोमात्मजश्चात्र राजन्दधिमुखः कपिः ॥

धर्मात्मा अपि	"தர்மாத்மாவும்
वीर्यवान् च	வீர்யவானுமாகிய
सुषेणः	சுஷேணன்
धर्मस्य	தர்மவானது
पुत्रः	குமாரன்.
राजन्	அரசே!
अत्र	இவ்விடத்தில்
सौम्यः	அழகுற்றுவிளங்கும்
दधिमुखः च	ததிமுகனென்ற
कपिः	வானரன்
सोमात्मजः	சந்திரனின் மைந்தன்.

सुमुखो दुर्मुखश्चात्र वेगदर्शी च वानरः। मृत्युर्वानररूपेण नूनं सृष्टः स्वयंभुवा ॥ २४ ॥

अत्र	"இதில்
स्वयंभुवा	பிரம்மதேவரால்
वानररूपेण	வானரஉருக்கொடுத்
मृत्युः नूनं	எமனே [து
सुमुखः	சுமுகனென்ற
वानरः	வானரனுகவும்
दुर्मुखः च	துர்முகனென்றவனு கவும்
वेगदर्शी च	வேகதர்சி என்றவனு கவும்
सृष्टः	ஸ்ருஷ்டிக்கப்பட்டி ருக்கிறான்.

पुत्रो हुतवहस्याथ नीलः सेनापतिः स्वयम्। अनिलस्य च पुत्रोऽत्र हनुमानिति विश्रुतः ॥

नीलः	"நீலனென்ற
सेनापतिः	சேனபதி
हुतवहस्य	அக்னிபகவானது
स्वयं पुत्रः अथ	ஔரஸபுதல்வனே.
अत्र	இதில்
हनुमान्	ஹனுமான்
इति	என்று
विश्रुतः च	பிரசித்திபெற்றவன்.
अनिलस्य	வாயுவின்
पुत्रः	மைந்தன்.

नप्ता शक्रस्य दुर्धर्षो बलवानङ्गदो युवा। मैन्दश्च द्विविदश्चोभौ बलिनावश्विसंभवौ ॥२६॥

युवा	"சிறுவனும்
बलवान्	பலசாலியும்
दुर्धर्षः	எவராலும் தகையமு டியாதவனுமான
अङ्गदः	அங்கதன்
शक्रस्य	இந்திரனது
नप्ता	பேரன்.
बलिनौ	பலசாலிகளாகிய
मैन्दः च	மைந்தனென்பவனும்
द्विविदः च	துவிதனென்பவனும் ஆகிய
उभौ	இருவர்களும்
अश्विसंभवौ	அச்வினீதேவதை களின் புதல்வர்கள்.

पुत्रा वैवस्वतस्यात्र पञ्च कालान्तकोपमाः। गजो गवाक्षो गवयः शरभो गन्धमादनः ॥

अत्र	"இதில்
गजः	கஜனென்பவனும்,
गवाक्षः	கவாக்ஷனென்பவனும்
गवयः	கவயனென்பவனும்
शरभः	சரபனென்பவனும்
गन्धमादनः	கந்தமாதனனென்ப வனுமான
कालान्तकोपमाः	ஊழிகால எமனுக்கே ஒப்பானவர்களான
पञ्च	ஐவர்களும்
वैवस्वतस्य	எமனது
पुत्राः	புதல்வர்கள்.

दश कोट्यो वानराणां शूराणां युद्धकाङ्क्षिणाम्। श्रीमतां देवपुत्राणां शेषं नाख्यातुमुत्सहे॥

शूराणां	"சூரர்களும்
युद्धकांक्षिणां	யுத்தத்தை எதிர்பார் த்து நிற்கின்றவர் களும்
श्रीमतां	ஸ்ரீமான்களும்
देवपुत्राणां	தேவர்களின் புதல்வர் களுமான
वानराणां	வானர்களின்
दश कोट्यः	பத்துகோடிகளிருக் கின்றன.
शेषं	மற்றபடி ஆனதை
आख्यातुं	விளங்க விளம்ப
उत्सहे न	நான் முடியாதிருக் கின்றேன்.

पुत्रो दशरथस्यैष सिंहसंहननो युवा । दूषणो निहतो येन खरश्च त्रिशिरास्तथा ॥ २९ ॥

येन	"எவனால்	तथा	அப்படியே கொல்லப்
दूषणः	தூஷணன்	एषः	இவன் [பட்டானே,
निहतः	கொல்லப்பட்டானே,	दशरथस्य	தசரதனது
खरः च	கரன் அப்படியே கொல்லப்பட்டானே,	पुत्रः	மகன் ;
		सिंहसंहननः	சிங்கம்போன்ற சரீர முடையவன் ;
त्रिशिराः	த்ரிசிரஸ்ஸும்	युवा	யுவன்.

नास्ति रामस्य सदृशो विक्रमे भुवि कश्चन । विराधो निहतो येन कबन्धश्चान्तकोपमः ॥

येन	"எவனால்	रामस्य	ராமனுக்கு
विराधः	விராதன்	विक्रमे	போரில்
निहतः	கொல்லப்பட்டானே	भुवि	உலகில்
अन्तकोपमः	எமனே நிகர்த்த	सदृशः	நிகரானவன்
कबन्धः च	கபந்தனும் அப்படியே கொல்லப்பட்டானே, (அந்த)	कश्चन	ஒருவனும்
		अस्ति न	இல்லை.

वक्तुं न शक्तो रामस्य नरः कश्चिद्गुणान्क्षितौ । जनस्थानगता येन यावन्तो राक्षसा हताः ॥

येन	"எவனால்	रामस्य	ராமனது
जनस्थानगताः	ஜனஸ்தானத்திலி	गुणान्	விசேஷகுணங்களை
राक्षसाः	ராக்ஷஸர்கள் [ருந்த	क्षितौ	உலகில்
यावन्तः	எல்லோருமே	कश्चित् नरः	மனிதனெவனும்
हताः	கொல்லப்பட்டார் களோ, (அந்த)	वक्तुं	வர்ணிக்க
		शक्तः न	முடியாது.

लक्ष्मणश्चात्र धर्मात्मा मातङ्गानामिवर्षभः । यस्य बाणपथं प्राप्य न जीवेदपि वासवः ॥

अत्र	"இதில்	यस्य	எவனை, அவனுடைய
लक्ष्मणः च	லக்ஷ்மணனே	बाणपथं	பாணநோக்கை
धर्मात्मा	தர்மநெறியை விட்டு அகலாதவன்.	प्राप्य	அடைந்து
		वासवः अपि	இந்திரன்கூட
मातङ्गानां	யானைகளின்	जीवेत् न	உயிருடனிரான்.
ऋषभः इव	அசுபோன்றவன்.		

श्वेतो ज्योतिर्मुखश्चात्र भास्करस्यात्मसंभवौ । वरुणस्य च पुत्रोऽन्यो हेमकूटः प्लवङ्गमः ॥

अत्र	"இதில்	वरुणस्य	வருணனின்
श्वेतः	ச்வேதனென்பவனும்	अन्यः	மற்றொரு
ज्योतिर्मुखः च	ஜ்யோதிர்முகனென்	पुत्रः च	புத்திரன்தான்
भास्करस्य	சூர்யனது [பவனும்	हेमकूटः	ஹேமகூடனென்ற
आत्मसंभवौ	புதல்வர்கள்.	प्लवङ्गमः	வானரன்.

विश्वकर्मसुतो वीरो नलः प्लवगसत्तमः । विक्रान्तो बलवानत्र वसुपुत्रः सुदुर्धरः ॥ ३४ ॥

प्लवगसत्तमः	"வானரோத்தமனும்	विक्रान्तः	மிக ஆண்மையுடைய
वीरः	சூரனுமாகிய		வனும்
नलः	நளனென்பவன்	बलवान्	மிக ஆற்றலுடையவ
विश्वकर्मसुतः	விச்வகர்மாவின் புதல்		னுமான
	வன்.	सुदुर्धरः	ஸுதூர்த்தரனென்பு
अत्र	இதில்	वसुपुत्रः	வசுவின் மகன். [வன்

राक्षसानां वरिष्ठश्च तव भ्राता विभीषणः । परिगृह्य पुरीं लङ्कां राघवस्य हिते रतः ॥

तव	"தேவரீரது	लङ्कां पुरीं	இலங்கைநகரை
भ्राता	தம்பியும்	परिगृह्य	பெற்றுக்கொண்டு
राक्षसानां	அரக்கர்களுக்குள்	राघवस्य	ராமனுக்கு
वरिष्ठः च	மகா பொல்லாதவனு	हिते	நன்மை புரிவதில்
विभीषणः	விபீஷணன் [மாகிய	रतः	ஈடுபட்டுவிட்டான்.

इति सर्वं समाख्यातं तवेदं वानरं बलम् । सुवेलेऽधिष्ठितं शैले शेषकार्ये भवान्गतिः ॥

सुवेले	"சுவேல	समाख्यातं	விளங்க விளம்பிவிடப்
शैले	மலையில்		பட்டது.
अधिष्ठितं	தங்கியிருக்கும்	इति	இதெல்லாம் இப்படி
इदं	இந்த		இருக்கின்றமையால்
वानरं	வானர	शेषकार्ये	இனி ஆகவேண்டிய
बलं	சைன்னியம்		காரியத்தில்
सर्वं	எல்லாமும்	भवान्	தேவரீர்தான்
तव	தேவரீருக்கு	गतिः	சர்வாதிகாரமும் பெற்
			றுவிளங்குகிறவர்."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
युद्धकाण्डे त्रिंशः सर्गः ॥

आदितः श्लोकाः 15815 **युद्धकाण्डे आदितः श्लोकाः 1140**

एकत्रिंशः सर्गः—முப்பத்தொன்றுவது ஸர்க்கம். ॥ ३१ ॥

सीतामोहनम्—சீதையை மோஹிப்பிப்பது.

ततस्तमक्षोभ्यबलं लङ्काधिपतये चराः । सुवेले राघवं शैले निविष्टं प्रत्यवेदयन् ॥ १ ॥

ततः	அச்சமயத்தில்	निविष्टं	வந்து தங்கிவிட்டவ
चराः	மற்றுமுள்ள வேவுகா	तं	அதை [ஞகவும்
	ரர்கள்,	अक्षोभ्यबलं	கலக்கமுடியாத சேனை
सुवेले	சுவேல		யெனவும்
शैले	மலையில்	लङ्काधिपतये	இலங்கைமன்னனுக்கு
राघवं	ராமனை	प्रत्यवेदयन्	தெரிவித்தார்கள்.

चाराणां रावणः श्रुत्वा प्राप्तं रामबलं महत् । जातोद्वेगोऽभवत्किंचित्सचिवानिदमब्रवीत् ॥

रावणः	ராவணன்	किञ्चित्	கொஞ்சம்
महत्	பெரும்	जातोद्वेगः	அச்சம் கொண்ட
रामबलं	ராமரது சைன்யத்தை	अभवत्	ஆயினன். [வஞ்ப்
प्राप्तं	வந்து சேர்ந்துவிட்ட	सचिवान्	மந்திரிகளைப்பார்த்து
चाराणां	சார்களிடம்	इदं	பின்வருமாறு
श्रुत्वा	கேட்டு	अब्रवीत्	மொழிந்தான்.

मन्त्रिणः शीघ्रमायान्तु सर्वे वै सुसमाहिताः। अयं नो मन्त्रकालो हि संप्राप्त इति राक्षसाः॥

नः	" நமக்கு	सुसमाहिताः	பக்திமான்களும்
मन्त्रकालः	மந்திராலோசனை பண்ணும் காலம்	मन्त्रिणः वै	மந்திரிமார்களுமான
		राक्षसाः	ராக்ஷஸர்கள்
अयं	இதோ	सर्वे	எல்லோரும்
संप्राप्तः	வந்துவிட்டது,	शीघ्रं	காலதாமதமின்றி
इति हि	என்கிற காரணத்தால்	आयान्तु	வந்துகூடட்டும்."

तस्य तच्छासनं श्रुत्वा मन्त्रिणोऽभ्यागमन्द्रुतम्। ततः स मन्त्रयामास सचिवैः राक्षसैः सह॥

मन्त्रिणः	மந்திரிகள்	अभ्यागमन्	வந்துகூடினர்கள்.
तस्य	அவனது	सः	அவன்
तत्	அந்த	सचिवैः	மந்திரிகளான
शासनं	ஆக்ஞையை	राक्षसैः सह	அரக்கர்களோடு கூட
श्रुत्वा	சிரமேற்கொண்டு	ततः	அப்பொழுது
द्रुतं	விரைவில்	मन्त्रयामास	ஆலோசனைசெய்தான்.

मन्त्रयित्वा स दुर्धर्षः क्षमं यत्समनन्तरम् । विसर्जयित्वा सचिवान्प्रविवेश स्वमालयम् ॥

दुर्धर्षः	எவர்க்குமடங்கா	मन्त्रयित्वा	ஆலோசனை செய்து விட்டு,
सः	அவன்		
समनन्तरं	உடனே ஆகவேண்டிய தாய்	सचिवान्	மந்திரிகளை
		विसर्जयित्वा	விடைகொடுத்தனுப்பி
क्षमं	சமயத்திற்கேற்றதாயி ருக்கிறது	स्वं	தனது [விட்டு,
		आलयं	அரண்மனைக்கு
यत्	எதுவோ அதை	प्रविवेश	போய்ச்சேர்ந்தான்.

ततो राक्षसमाहूय विद्युज्जिह्वं महाबलम्। मायाविदं महामायः प्राविशद्यत्र मैथिली ॥ ६ ॥

महामायः	மகா மாயாவியாகும வன்	राक्षसं	அரக்கனை
		आहूय	அழைத்துக்கொண்டு
ततः	அவ்விடத்திலிருந்து	मैथिली	ஜானகியார்
महाबलं	மகாபலவானும்	यत्र	எங்கிருந்தனளோ அங்கு
मायाविदं	மாயாவித்தைகளை நன்கறிந்தவனுமான		
विद्युज्जिह्वं	வித்யுஜ்ஜிஹ்வனென்ற	प्राविशत्	போய்ச்சேர்ந்தனன்.

विद्युज्जिह्वं च मायाज्ञमब्रवीद्राक्षसाधिपः । मोहयिष्यावहे सीतां मायया जनकात्मजाम् ॥

राक्षसाधिपः	அரக்கர் மன்னன்
मायाज्ञं	மாயையில் நிபுணனாகிய
विद्युज्जिह्वं च	வித்யுஜ்ஜிஹ்வனைப் பார்த்து
अब्रवीत्	பின்வருமாறு மொழிந்தான்:
जनकात्मजां	"ஜனகனின் மகளாகிய
सीतां	ஸீதையை
मायया	மாயையால்
मोहयिष्यावहे	சிந்தை சிதறவடிப் போம்.

शिरो मायामयं गृह्य राघवस्य निशाचर । त्वं मां समुपतिष्ठस्व महच्च सशरं धनुः ॥ ८ ॥

निशाचर	"அரக்கனே!
त्वं	நீ
राघवस्य	ராமனுடைய
शिरः	சிரசையும்
सशरं	பாணத்தோடுகூடிய
महत्	சிறந்த
धनुः च	கோதண்டத்தையும்
मायामयं	மாயாமயமாய்
गृह्य	எடுத்துக்கொண்டு
मां	என்னிடம்
समुपतिष्ठस्व	வந்துசேர்."

एवमुक्तस्तथेत्याह विद्युज्जिह्वो निशाचरः । तस्य तुष्टोऽभवद्राजा ददौ च विभूषणम् ॥

एवं	மேற்கண்டவாறு
उक्तः	நியமனம்பெற்ற
विद्युज्जिह्वः	வித்யுஜ்ஜிஹ்வ
निशाचरः	அரக்கன் [னென்ற
तथा इति	'அங்ஙனமே செய்கின்றேன்' என்று
आह	பதில் சொன்னன்.
राजा	மன்னன்
तुष्टः	மனச்சந்துஷ்டி கொண்டவனாக
अभवत्	ஆயினன்.
तस्य	அவனுக்கு
विभूषणं च	ஆபரணத்தையும்
ददौ	பரிசாய் அளித்தான்.

अशोकवनिकायां तु सीतादर्शनलालसः । नैर्ऋतानामधिपतिः संविवेश महाबलः ॥ १० ॥

महाबलः	மகா பலவானும்
सीतादर्शन-लालसः तु	சீதையைக்காண ஆவலுடனிருப்பவனுமான
नैर्ऋतानां	அரக்கர்களின்
अधिपतिः	மன்னன்
अशोकवनिकायां	அசோகவனத்திற்
संविवेश	புகுந்தான். [குள்

ततो दीनामदैन्यार्हां ददर्श धनदानुजः । अधोमुखीं शोकपरामुपविष्टां महीतले ॥ ११ ॥
भर्तारमेव ध्यायन्तीमशोकवनिकां गताम् । उपास्यमानां घोराभी राक्षसीभिरितस्ततः ॥
राक्षसीभिर्वृतां सीतां पूर्णचन्द्रनिभाननाम् । उत्पातमेघजालाभिश्चन्द्ररेखामिवावृताम् ॥
भूषणैरुत्तमैः कैश्चिन्मङ्गलार्थमलंकृताम् । चरन्तीं मारुतोद्धूतां क्षिप्तां पुष्पलतामिव ॥ १४ ॥
हर्षशोकान्तरे मग्नां विषादस्य विलक्षणाम् । स्तिमितामिव गाम्भीर्यान्नदीं भागीरथीमिव ॥

धनदानुजः	குபேரன் தம்பி (ராவணன்)
पूर्णचन्द्र-निभाननां	முழுமதிபோன்ற திருமுகமண்டலத்தை பெற்றவளும்
अशोकवनिकां	அசோகவனத்தில்
गतां	வந்துசேர்ந்து
मङ्गलार्थं	சுமங்கலி என்பதற் கறிகுறியாய்
उत्तमैः	அவச்யமாய் அணிய வேண்டிய
कैश्चित्	சில (திருமங்கல்யம், சிலம்புமுதலிய)
भूषणैः	ஆபரணங்களால்
अलंकृतां	அலங்கரிக்கப்பட்டவ ளும்
अदैन्याहीं	அவமரியாதையைக் கண்டிராதவளும்,
दीनां	எளியநிலைமையிலிருப் பவளும்,
शोकपरां	சோகத்தில் முழுகி
अधोमुखीं	தலைகுனிந்து
महीतले	வெறுந்தரையில்
उपविष्टां	உட்கார்ந்துகொண்டு
भर्तारं एव	கணவர் ஒருவரையே
ध्यायन्तीं	ஸர்வமுமாய்க்கொண் டு தியானித்துக்கொ ண்டிருப்பவளும்,
इतस्ततः	எப்புறமும்
राक्षसीभिः	அரக்கிகளால்
वृतां	சூழப்பட்டு
घोराभिः	கொடிய
राक्षसीभिः	அரக்கிகளோடு
उपास्यमानां	கால்ங்கழித்துக்கொ ண்டிருப்பவளும்,
उत्पातमेघ-जालाभिः	அசுப சூசகமான மே கவரிசைகளால்
आवृतां	மூடுண்ட
चन्द्रलेखां इव	சந்திரகலைபோலிருப் பவளும்,
मारुतोद्धूतां	காற்றால் பிடுங்கப் பட்டு
क्षिप्तां	எறியப்பட்ட
पुष्पलतां इव	பூங்கொடிபோலிருப் பவளும்
चरन्तीं	துடித்துக்கொண்டி
भागीरथीं	கங்கை [ருப்பவளும்
नदीं	நதியை
इव	போலவே
गाम्भीर्यात्	க்ம்பிரியத்தால்
इव	மூற்றிலும்
स्तिमितां	நிம்மதிகொண்டவ
विषादस्य	துக்கத்திற்கு [ளும்,
विलक्षणां	அப்புறப்பட்டவளும்
हर्षशोकान्तरे	சந்தோஷத்தையும், துக்கத்தையும் க விர்த்த தன்மையில்
मग्नां	முழுகிக்கிடந்தவளு மான
सीतां	சீதாதேவியாரை
ततः	அப்பொழுது
ददर्श	கண்டான்.

उपसृत्य ततः सीतां प्रहर्षं नाम कीर्तयन् । इदं च वचनं धृष्टमुवाच जनकात्मजाम् ॥१६॥

ततः	அப்பொழுது
प्रहर्षं	மிகச் சந்தோஷமாய்
नाम	பெயரை (சொல்லி)
कीर्तयन्	அழைத்துக்கொண்டு
जनकात्मजां	ஜனகரின் திருச்செல் வியாகிய
सीतां च	சீதாதேவியாரையும்
उपसृत्य	அணுகி
इदं	பின்வரும்
धृष्टं	மனதையறுக்கும்
वचनं	சொல்லை
उवाच	சொன்னான் :

सान्त्व्यमाना मया भद्रे यमुपाश्रित्य वल्गसे । खरहन्ता स ते भर्ता राघवः समरे हतः ॥

भद्रे	"பாக்கியவதியே!
मया	என்னால்
सान्त्व्यमाना	எவ்வளவோ நல்வார்த்தை சொல்லி வேண்டப்படுகிற நீ
यं	எவனை
उपाश्रित्य	உன்னுடையவனைக் கொண்டு
वल्गसे	பெருமை பாராட்டி.
सः	அந்த [வருகிறாயோ
खरहन्ता	கரனைக் கொன்ற,
ते भर्ता	உனது கணவனாகிய
राघवः	ராமன்
समरे हतः	போரில் கொன்றுவிடப்பட்டான்.

छिन्नं ते सर्वतो मूलं दर्पस्ते विहतो मया । व्यसनेनात्मनः सीते मम भार्या भविष्यसि ॥

ते	"உனது
मूलं	ஆதாரவானது
सर्वतः	அடியோடு
छिन्नं	விலக்கப்பட்டு விட்
ते दर्पः	உனது கர்வம் [டது.
मया	என்னால்
विहतः	நிஷ்ப்ரயோஜனமாய் ஆகிவிட்டது.
सीते	சீதாய்!
आत्मनः	உனது
व्यसनेन	பாடெல்லாம் பயனற்றதாகிவிட்டபடியால்
मम	எனக்கு
भार्या	மனைவியாய்
भविष्यसि	இனி ஆகிவிடுவாய்.

विसृजेमां मतिं मूढे किं मृतेन करिष्यसि । भद्रे त्वं भव भार्याणां सर्वासामीश्वरी मम ॥

मूढे	"பேதாய்!
इमां मतिं	இந்த மனோபாவத்தை
विसृज	ஒழித்துவிடு.
मृतेन	இறந்தவனைக் கொண்டு
किं करिष्यसि	நீ என்ன செய்யமுடியும்?
भद्रे	பாக்கியவதியே!
मम	எனது
भार्याणां	மனைவிமார்கள்
सर्वासां	யாவருக்கும்
ईश्वरी	தலைவியாக
त्वं भव	நீ ஆகுவாயாக.

अल्पपुण्ये निवृत्तार्थे मूढे पण्डितमानिनि । शृणु भर्तृवधं सीते घोरं वृत्रवधं यथा ॥ २० ॥

अल्पपुण्ये	"புண்ணியத்தை வேண்டுமளவு செய்யாதவளே!
निवृत्तार्थे	எதிர்பார்த்தவண்ணமே மாறியவளே!
पण्डितमानिनि	எல்லாமறிந்தவளென்ற அகந்தைகொண்ட
मूढे सीते	அசடாகிய சீதே!
घोरं	கொடிய
वृत्रवधं	விருத்திராசுரனது
यथा	போன்ற [வதத்தை
भर्तृवधं	கணவன் வதையைப் பற்றி
शृणु	(சொல்லுமெனக்கு செவிகொடுத்துக்) கேள்.

समायातः समुद्रान्तं मां हन्तुं किल राघवः । वानरेन्द्रप्रणीतेन बलेन महता वृतः ॥ २१ ॥

राघवः	"ராமன்
मां किल	என்னையே
हन्तुं	கொல்ல
वानरेन्द्रप्रणीतेन	வானரனால் நடத்திவரப்பட்ட
महता	பெரும்
बलेन	சேனையால்
